ஆங்கீரஸ-பங்குனி

1933-ரு மார்ச்சு-ஏப்ரல்மீ




11 JAN 1934
MADRAS

மாலை 4 மணி 12.

# ஓர் செந்தமிழ்

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

N33.4.12
197888

விளம்பரம்

11 JAN 1934
MADRAS

# "பாரதி"

## சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

4-ம் ஆண்டு முடிவுற்று ஸ்ரீமுக சித்திரை முதல்
5-ம் ஆண்டு ஆரம்பம்.

...தந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை
**"பாரதி" ஒன்றே யாகும்.**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

### சந்தா விபரம்:

...ன் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு " ரூ. **3/=** " **5** "
போஷக சந்தா குறைந்தது ரூ. **100/=**
தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
...த்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

| | | |
|---|---|---|
| 1. | நெப்போலியன் போனபார்ட் | 0—4—0 |
| 2. | முத்தண்ணு (ஓர் துப்பறி கற்பிதம்) | 1-12—0 |
| 3. | அறநூல் மூலம் | 0—3—0 |
| 4. | ௸ பதவுரையுடன் | 0-12—0 |
| 5. | ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம் | 0—4—0 |
| 6. | வீர சிவாஜி விஜயம் | 0—3—0 |
| 7. | ஸ்ரீ ராமகிருஷ்ணாமிருதம் | 0—6—0 |
| 8. | அன்னை (ஸ்ரீ அரவிந்தர் அருளியது) | 0—4—0 |
| 9. | கீதை காட்டும் பாதை | 0-10—0 |
| 10. | புது யுகப் பாட்டு | 0—5—0 |
| 11. | ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் | 0-12—0 |

தபாற் செலவு பிரத்தியேகம்.

**பாரதிப் புத்தகாலயம்,**

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

---

### "பாரதி"யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | | 3—0—0 |
| கவர் | ,, | 2 & 3 | ,, | | 15—0—0 |
| ,, | ,, | 4 | ,, | | 20—0—0 |

**விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.**

**நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.**



# "பாரதி"

# பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ' வெனப் புகழப்பெற்று,
சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

## இந்த பைண்ட் வால்யங்கள்

உங்கள் புத்தகசாலையை
அழகு செய்வதாயிருக்கின்றன.

இவைகளில் பல பெரியோர்கள் சரிதைகளும்,
தேசாபிமானச் செல்வர்களின் ஜீவியக் குறிப்புகளும்,
அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

தமிழ் நாட்டின் அறிஞர் சிகாமணிகளும், பண்டிதப்
பெரியார்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் எழுதிய
அரிய கட்டுரைகள் என்றும் படித்துணரத்
தக்கவையாய்த் திகழுகின்றன.

விஷயங்களுக்கும் அச்சுக்கும் ஏற்ற விதம் உறுதியாக
பைண்ட் செய்யப்பெற்றிருக்கிறது.

நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் | வருட வால்யம் 1-க்கு விலை | ரூ. | 3—0—0. |
| 2-ம் | ,, ,, | ரூ. | 2—8—0. |
| 3-ம் | ,, ,, | ரூ. | 2—8—0. |
| 4-ம் | ,, ,, | ரூ. | 2—8—0. |
| 3-ம் | வருட அநுபந்தம் | ரூ. | 0—4—0. |

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன்
வால்யம் 1-க்கு ரூ. 3½ அல்லது 5½ ஷிலிங்.

**'பாரதி' ஆலயம்,**

**உத்தமபாளையம், மதுரை ஜில்லா.**



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

## பொருள் அடக்கம்.

மாலை 4. ஆங்கீரஸஹு பங்குனிமீ மணி 12.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | லக்ஷ்மி பிரார்த்தனை—பாரதியார் .... ... | 753 |
| 2. | தேச நிலை பரிதாபம்—ஆசிரியர், "பாரதி."... ... | 755 |
| 3. | ஸர். ஜெகதீஸ் சந்திர போஸ்— திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B.Sc. (Hons.) ... | 758 |
| 4. | ஸி. சுப்ரமண்ய பாரதியார்— திரு. வை. எம். எஸ். ராமானுஜம் அவர்கள் ... | 777 |
| 5. | ஹரிஜனங்களும் பாடப் புத்தகங்களும்— திரு. R. S. ஸ்ரீகண்டன் அவர்கள், M.A. ... | 788 |
| 6. | சந்திக்குந் தருணம் எப்பொழுது?— திரு. S. வெங்கடநாராயண சர்மா அவர்கள், B.A., B.L. | 786 |
| 7. | ஐரோப்பியப் புது பலவான்— ஜனப். S. சையது அஹமது அவர்கள் ... | 800 |
| 8. | படிப்பு உத்தியோகத்திற்கு மட்டுந்தானா?— ஜனப். M. K. M. மீரான் அவர்கள் ... | 806 |
| 9. | எனது ராமாயணம்—(ஆனந்தா) ... | 808 |
| 10. | கவிச் சக்கிரவர்த்தி தாகூரது கடிதம் (மொழிபெயர்ப்பு) ... | 815 |
| 11. | வாடா மலர்கள்—ஆசிரியர், "பாரதி." ... | 817 |
| 12. | ஆசிரியர் குறிப்புகள் ... ... ... | 825 |
| 13. | ஆராய்ச்சி மேடை ... ... ... | 831 |


### படங்கள்.

பகவான் கௌதம புத்தர்.

ஸர். ஜெகதீஸ் சந்திர போஸ்.

# பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.


ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,

பொறுப்பாசிரியர்.


## மாலை 4.

## ஆங்கீரஸஹு-1932-33.


பிரசுராலயம்:


உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

வருட சந்தா: உள் நாடு ரூ. 2/-

வெளி நாடு ரூ. 3/- அல்லது 5 ஷிலிங்.

ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம்—33.



படங்களுடன் வெளிவந் துலவும் செந்தமிழ் மாலிகை.

## பொருள் அடக்கம்.


| தொடர் எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அடிமையகற்றிய அண்ணல்— பண்டித, M. இராஜமாணிக்கம் அவர்கள் | ... 722 |
| 2. | அமெரிக்காவில் புத்தகாலயங்கள்— திரு. N. வேங்கடரமணன் அவர்கள் | ... 694 |
| 3. | அறிக்கை. ... ... | .... 248 |
| 4. | ஆசிரியக் குறிப்புகள். | ... 73, 249. 331, 418, 501, 581, 658, 751, 825 |
| 5. | ஆராய்ச்சி மேடை. | ... 80, 245, 327, 417, 579, 831 |
| 6. | இந்தியக் கைத்தொழில்கள்— திரு N. வேங்கடரமணன் அவர்கள் | ... 596 |
| 7. | இந்திய ராஜரீகம்—தலையங்கம் ... | ... 506 |
| 8. | இந்தியா இழந்த இன்பம்— திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள் B.Sc., (Hons.), | 11 |
| 9. | இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில்— திரு. N. வேங்கடரமணன் அவர்கள் | ... 139 |
| 10. | இந்தியாவின் இரு கண்கள்—தலையங்கம் | ... 81 |
| 11. | இந்தியாவின் புதிய சகாப்தம்—தலையங்கம் | .. 347 |
| 12. | இந்தியாவும் பாரசீக தேசமும்— திரு. வெ. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், M.A. | ...320 |

192888




13. இரவின் ரகசியம்—
ஆசிரியர், திரு. மா. இராஜமாணிக்கம் அவர்கள் ... 41
14. இலங்கை அரசியல்—
திரு. N. S. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் ... 56
15. உபயோகமற்ற பொருள்களின் உயர்ந்த வியாபாரம்—
திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... 406
16. ஊர் நினைப்பு—(தினமணி) ... ... 308
17. எமது வந்தனங்கள்—தலையங்கம் ... .... 668
18. எழுந்திராடா தமிழா!—
திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ... 346
19. எனது குருநாதரின் கடிதம்—(மனோகரனார்) 91, 469
20. எனது ரயில்வேப் பயணம்—
ஜனாப். S. சையது அஹமது அவர்கள் ... 223
21. எனது ராமாயணம்—(ஆனந்தா) ... ... 808
22. ஐக்கிய பாரதம்—தலையங்கம் ... ... 426
23. ஐரோப்பியப் புது பலவான்—
ஜனாப். S. சையது அஹமது அவர்கள் ... 800
24. ஒன்பது மாதங்கள்—தலையங்கம் ... ... 268
25. கந்தர்வ யாத்திரை (ஒரு சிறு கதை)—
திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் ... 631
26. கம்பரும் காதல் மணமும்— ,, ... 409
27. கம்பரும் காந்தியடிகளும்—
ஆசிரியர், திரு. மா. இராஜமாணிக்கம் அவர்கள் ... 187
28. ஹரிஜனங்களும் பாடப் புத்தகங்களும்—
திரு. R. S. ஸ்ரீகண்டன் அவர்கள், M.A. ... 783
29. கவிச் சக்கிரவர்த்தி தாகூரது கடிதம்—(மொழிபெயர்ப்பு) 815
30. காதலா? கடமையா? (ஒரு சிறு கதை)—
(கிருஷ்ண குமாரா) ... 396
31. காதல் கனவு—பாரதியார் ... ... 266
32. காளிதாஸனுக்குக் கவி ரவீந்திர காணிக்கை—(தினமணி) 371





33. காளீஸ்வரனின் காதலி—(ஆனந்தா) ... ... 72
34. குடும்ப வாழ்க்கை—தலையங்கம் ... ... 587
35. கோ மாதாவின் முறையீடு—
திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் ... 386
36. சந்திக்குத் தருணம் எப்பொழுது?—
திரு. S. வெங்கடநாராயண சர்மா அவர்கள், B.A., B.L. 787
37. ஜப்பான் முன்னேற்றம்—
ஜனாப். S. சையது அஹமது அவர்கள் ... 734
38. சம்பாவதியின் பிராணத் தியாகம்—ஆசிரியர், "பாரதி." 743
39. சர். ஜெகதீஸ் சந்திர போஸ்—
திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B.Sc., (Hons.) 758
40. சர். பி. சி. ராய்—
திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B.Sc., (Hons.) 701
41. ஜனநாயக ஆட்சி—திரு. ஸி. ஏ. பெருமாள் அவர்கள் 182
42. சி. சுப்ரமண்ய பாரதியார்—
திரு. வை. எம். எஸ். ராமானுஜம் அவர்கள் ... 777
43. சிறுமணித் திரள்—(மனோகரனார்) ... ... 645
44. சீன ஜப்பானியப் போர்க்கோலம்—
திரு. ஸி. ஏ. பெருமாள் அவர்கள் ... 41
45. சீனக் குடியாட்சியின் வரலாறு—
திரு. O. P. தேசிகன் அவர்கள் ... 61
46. சீனதேச கேசரி சன் யாத்-சேனன்—
திரு. தினகரன் அவர்கள் 533, 600
47. சூரிய அஸ்தமனம்—
திரு. து. லா. சசிவர்ணம் அவர்கள் ... 464
48. ஸ்ரீ அரவிந்தப் பெருந்தகையார்—
திரு. சுத்தானந்த பாரதியாரவர்கள் ... 512
49. ஸ்ரீமுக சாதவாகனன் தண்ட யாத்திரை—
திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் ... 527
50. ஸ்பானியக் குடியாட்சி—திரு. தினகரன் அவர்கள் ... 374

51. ஸ்வீடன் நாட்டுப் பெண்களின் நிலை—
ஆசிரியர், "பாரதி." ... 690
52. டாக்டர் சாமுவேல் ஜான்ஸன்—
திரு. E. பரமசிவம் அவர்கள், B. A. ... 557
55 தமிழரின் தற்கால நிலை—
திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் ... 524
53. தமிழர் மணம்—
பண்டித, திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 154, 191
54. தமிழ் நாடும் புத்தகாலயங்களும்—
திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... 197
56. தயாள்பாக் அல்லது கருணைத் தோட்டம்—
திரு. P. கந்தநரசிம்மன் அவர்கள், B.A., B.L. ... 685
57. தனவைசிய வாலிபர்களுக்கு—
திரு. A. பழனியப்பா அவர்கள் ... 303
58. திருவிதாங்கூரின் அபிவிருத்தி—
திரு. ஸி ஏ. பெருமாள் அவர்கள் ... 107
59. தீண்டாச் சிறுவனின் இயக்கம்—
பண்டித, ஜனாப். K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் 666
60. தீண்டாமை—திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் 37
61. தூதவாக்யம் (ஒரு சிறு கதை)—(தினமணி) ... 647
62. துர்க்காதாஸ் முகவுரை—ஆசிரியர், "பாரதி." ... 670
63. தெய்வ பாரதத் திருப்பெருங் காட்சி—
திரு. சுத்தானந்த பாரதியா ரவர்கள் ... 86
64. தெய்வ வலி—பாரதியார் ... ... 345
65. தேச ஊழியம்—பண்டித, திரு. இராம சுப்ரமண்ய
நாவல ரவர்கள் .... 316
66. தேச நிலை பரிதாபம்—தலையங்கம் ... ... 755
67. தேச பந்து சித்தரஞ்சன தாஸ்—
திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... 450
68. தொழிலாளி—திரு. அய்யாமுத்து அவர்கள் ... 627
69. தோட்டக்காரன் மகள்—(தினமணி) ... 570
70. தோட்டி—கவியரசன் ரவீந்திர நாத தாகூர் ... 626
71. நமது அரசியல் தஸ்தாவேஜு—ஆசிரியர், "பாரதி." .... 491



72. நாளந்தா சர்வகலாசாலை—திரு. சி. கு. நாராயணசாமி
முதலியார் அவர்கள் 292, 360
73. "நீலத் திரைகடலோரத்திலே"—
திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் ... 281
74. படிப்பு உத்தியோகத்திற்கு மட்டுந்தானா?—
ஜனாப். M. K. M. மீரான் அவர்கள் ... 806
75. பண்டித இராமா பாய்—
திருமகள், P. V. சரோஜினி தேவி அவர்கள் ... 25
76. பண்டைக் காலத்து தக்ஷசீலா சர்வகலாசாலை—
திரு. A. ராமசாமி அவர்கள் ... 208
77. பர்மாவின் சரித்திரக் குறிப்புகள்—
திரு. ஸி. நாகையா அவர்கள் ... 192
78. பர்மாவும் பர்மியரும்—திருமதி, C. K. தமயந்தி
அவர்கள், B. A. ... 304
79. பல்விதம் உதவுங்கள்—தலையங்கம் ... ... 163
80. பாரத நாடு—பாரதியார் ... ... 665
81. பாரத நாட்டின் பண்டைக் கலைகள்—
திரு. O. P. தேசிகன் அவர்கள் 120, 169, 544
82. பாரதியாரின் குயிற் பாட்டு—பாரதியார் .... 161
83. 'பாரதி'யின் குறுக்கெழுத்து பந்தயம்—(பொ. ஆ.)54, 105
84. 'பாரதி'யின் குறுக்கெழுத்து பந்தயம் 2— „ ... 228
85. 'பாரதி'யின் குறுக்கெழுத்து—
பந்தயம் 1-ன் விடை „ ... 229
86. 'பாரதி' வாழ்த்துப்பா—திரு. அறிவானந்தன் அவர்கள்—409
87. 'பாரதி'யின் விகட வகுத்தல்— (பொ. ஆ.) ... 60
88. 'பாரதி'யின் விகட வகுத்தல் 2— „ ... 219
89. 'பாரதி'யின் விகட வகுத்தல்—
1-ன் விடையும் வழியும் „ ... 221
90. 'பாரதி' விஜயம்—தலையங்கம் ... .... 1
91. பிஜியர்களின் தலை விதி—திரு. தினகரன் அவர்கள் ... 286
92. பிரதாப ருத்ரன்—திரு. சி. கு. நாராயணசாமி
முதலியார் அவர்கள் ... 612
93. பிரெஞ்சு இந்தோ-சைனா—
திரு. M. K. அழகப்பா அவர்கள் ... 479

94. பீஜியில் இந்தியர்களின் நிலை—திரு. ஆர். கே. பண்டாரம் அவர்கள், F. C. I. ... 447
95. புத்த ஜயந்தி—ஆசிரியர், "பாரதி." ... ... 725
96. பூமியின் உட் பாகம்—திரு K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) ... 204
97. பெண் கல்வி—ஸ்ரீமதி. வி. எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்கள் ... 230
98. மனம் போல வாழ்வு— திரு. S. ஆறுமுகம் அவர்கள், B. A., L. T. ... 6
99. மனைத் தலைவி—பாரதியார் ... ... 585
100. மகா கவி ஷேக்ஸ்பியர்—திரு. S. R. A. ஐயர் அவர்கள்—236
101. மாணவர் கடமை—பண்டித, திரு. பா. பக்கிரிசாமி செட்டியார் அவர்கள் ... 48
102. "ரான்ஜன்," அல்லது "எக்ஸ்" வெளிச்சக் கதிர்— திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) 98
103. லக்ஷிமி பிரார்த்தனை—பாரதியார் ... ... 753
104. வாடா மலர்கள்—ஆசிரியர், "பாரதி." ... 817
105. வாலிபர்களுக்கு!—திரு. ஜம்புநாதன் அவர்கள் ... 133
106. விகட வருத்தல்—(பொ. ஆ.) ... ... 138
107. வித்யாபி விருத்தி முறைகள்—திரு இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை அவர்கள் ... 436
108. வெண்ணிலா—திரு அருட்பா ... ... 505
109. வேண்டுகை—பாரதியார் ... ... 425
110. வைக்கம் சத்தியாக்கிரக நினைவுகள்— திரு. அய்யாமுத்து அவர்கள் 69, 143


## படங்கள்.


1. டாக்டர் சன் யாட்-சென்.
2. ஸூங் சிங்-லிங் (டாக்டர் சன் யாட்-சென் மனைவியார்.)
3. சர். பி. ஸி. ராய்.
4. பகவான் கௌதம புத்தர்.
5. சர். ஜெகதீஸ் சந்திர போஸ்.



பகவான் கௌதம புத்தர்.

# பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

| மாலை 4 | ஆங்கீரஸ-பங்குனி<br>1933-௵ மார்ச்சு—ஏப்ரல்௴ | மணி 12 |
|---|---|---|

## லக்ஷ்மி பிரார்த்தனை.

### பஞ்ச ரத்ன மாலை.

மலரின் மேவு திருவே—உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யு முகமும்—காண்பார்
நினை வழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும்—தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும்—கண்டுன்
இன்பம் வேண்டுகின்றேன். 1.

கமல மேவும் திருவே—நின்மேல்
காதலாகி நின்றேன்
குமரி நின்னையிங்கே—பெற்றோர்
கோடியின்ப முற்றார்
அமரர் போல வாழ்வேன்—என்மேல்
அன்பு கொள்வையாயின்
இமயவெற்பின் மோத—நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன். 2.

வாணி தன்னை யென்றும்—நினது
வரிசை பாட வைப்பேன்
நாணி யேகலாமோ?—என்னை
நன்கறிந்திலா யோ?
பேணி வையமெல்லாம்—நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணுமைந்த ரெல்லாம்—கண்ணன்
பொறிக ளாவ ரன்றோ? 3.

பொன்னு நல்லமணியும்—சுடர்செய்
பூண்க ளேந்தி வந்தாய்
மின்னு நின்றன் வடிவிற்—பணிகள்
மேவி நிற்கு மழகை
என்னுரைப்ப னேடீ—திருவே
என்னுயிர்க் கொ ரமுதே
நின்னை மார்பு சேரத்—தழுவி
நிக ரிலாது வாழ்வேன். 4.

செல்வ மெட்டு மெய்தி—நின்னாற்
செம்மை யேறி வாழ்வேன்
**இல்லை யென்ற கொடுமை—உலகில்**
**இல்லையாக வைப்பேன்**
முல்லை போன்ற முறுவல்—காட்டி
மோக வாதை நீக்கி
எல்லை யற்ற சுவையே—எனைநீ
என்றும் வாழ வைப்பாய். 5.

—பாரதியார்.

# தேச நிலை பரிதாபம்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

அநேக இயற்கை வளங்களுடனும் அநேக இயற்கை அழகுகளுடனும் மா பெரும் உலகத்தை பகவான் மனிதர்களுக்குக் கொடுத்திருக்கின்றார். மண்ணாசை கொண்டு மானிடர்கள் மானிடர்களுக்குச் செய்யும் அநீதங்களைச் சொல்லி முடியாது. பொன்னாசை கொண்டு மனிதர்களை மனிதர் ஏமாற்றும் நேச முறைகளைச் சொன்னால் சிரிப்பாகும். அன்பும் அறமும் எங்கோ ஒளித்துக்கொண்டது போலிருக்கிறது! உலகமெங்கும் சாந்தி நிலவவில்லை. உலகம் மற வழியில் சென்றுகொண்டிருப்பதால், வையகத்தில் துன்பங்களும் தீமைகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன. தடி யெடுத்தவர்களெல்லாம் தண்டக்காரர்களாகிவிடுகிறார்கள். தண்டக்காரர்களைச் சேர்த்துக்கொள்பவர்களெல்லாம் தலைவர்களாகி விடுகிறார்கள்.

ஐரோப்பாவில் புதிய சர்வாதிகாரிகள் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். துருக்கியில் காஜி முஸ்தபா கமால் பாட்ஷா வெற்றிச் சங்கை எடுத்து முழக்கிக்கொண் டிருக்கிறார். பண்டைப் பெருமை வாய்ந்த இதாலியை முசலோனி சர்வாதிகாரியாக ஆட்டிக்கொண் டிருக்கிறார். ஜெர்மனியில் ஹெர் ஹிட்லர் முழு சர்வாதிகாரத்தையும் செலுத்தித் தனது அதிகாரத்திற்கு எதிராகவுள்ளவர்களை யெல்லாம் அதம் செய்துகொண் டிருக்கிறார் ஸ்பெயினில் ஜா மொரா தனது சர்வாதிகாரத்தையும் உயர்த்திக் காட்டிக்கொண் டிருக்கிறார். பிரிட்டிஷ் ராஜாங்கம் அரசியல் தந்திரப் பேச்சு நடத்திக்கொண் டிருக்கிறது. ஸ்டாலின் பொது உடமை ருஷியாவில் தனித் தலைவராக கர்ஜித்துக்கொண் டிருக்கிறார். பணப் பஞ்சம் உலக மெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது.

கீழ் நாட்டுக்கு வருவோம். அரசிருந்தும் ஜெனரல் அராக்கி ராணுவத் திமிர் கொண்டு இத்தாலியின் முசலோனியென ஜப்பானில் அதிகாரம் செலுத்திக்கொண் டிருக்கிறார். பண்டை நாகரீகமுள்ள

சீனா ஜப்பானால் தாக்கப்படுகிறது. அரசரின் ஆட்சி சயாம் தேசத்தில் கடுமையா யிருக்கிறது. ரிஜாகான் பெர்ஷியாவில் தனித் தலைமை வகித்துக்கொண் டிருக்கிறார். தென்னாப்பிரிக்காவிலும் பிஜி முதலிய விடங்களிலும் நம் நாட்டு மக்கள் உரிமை யின்றி வாடிக்கொண் டிருக்கிறார்கள். அங்கு அவர்கள் படும் கஷ்டங்களைச் சொன்னால், கண்ணீர் வடியும். பர்மாவிலும் இலங்கையிலும் இந்தியருக்கு விரோதமான உணர்ச்சி பலமாக வளர்ந்துகொண்டு வருகிறது. கொடுத்த கடன்களைக் கேட்ட நாட்டுக் கோட்டை செட்டியார்களை நாட்டை விட்டு ஓடிப் போங்கள் என்று பிரான்சு நாடான இந்தோ சைனாவின் கவர்னர் உத்திரவிட் டிருக்கிறார். இந்தியருக்குத் தாய் நாட்டில் சுதந்திரமில்லை யாகையால், வேறென் நாட்டிலும் இந்தியருக்கு உரிமையில்லை.

## இந்தியாவில்

இந்தியாவில் வெள்ளைக் காகித அறிக்கை வெளியாகிவிட்டது. இந்த அறிக்கையை வெளியிட எத்தனையோ பேர்கள், எத்தனையோ கமிட்டிகள், எத்தனையோ மாதங்கள், எவ்வளவோ செலவு! மலையைத் தோண்டி எலி பிடித்த கதைமாதிரியாக யிருக்கிறது. முதற் கோணல் முற்றுங் கோணல். இராஜப் பிரதிநிதிக்கும் கவர்னர்களுக்கும் எதேச்சாதிகாரங்கள் அளவற்றவை. இந்தியர்களுக்கு அரசியல் நாடகம் தெரியவே தெரியாது சிலருக்கு மட்டும் ஏதோ தெரியும். கிராமத்தார்கள் இந்த அறிக்கையை அறிந்து என்ன விஷயங்களைத் தெரிந்துகொள்ளப் போகிறார்கள்? எங்கு சுதந்திரம் எவ்வளவு தூரம் அடக்கப்படுகிறதோ, அங்கு அதைக்காட்டிலும் 10,000 மடங்கு அதிகமாகச் சுதந்திர உணர்ச்சி எழும்பும். எந் நாட்டில் உரிமை யில்லையோ, எந் நாட்டில் அந்நிய அரசாங்கம் அந் நாட்டு மக்களை அடக்குகிறதோ, அந் நாட்டில் சுதந்திரத் தீ கொழுந்து விட்டெரிவதைக் காணலாம். படியாதவர்களைப் போல, படித்தவர்களும் வேலையில்லாது திண்டாடித் திகைத்துக்கொண் டிருக்கிறார்கள். நாட்டிலுள்ள தங்கமெல்லாம் அயல் நாடுகளுக்குச் சென்றுவிட்டது. கைத்தொழில் பெருகவில்லை வியாபாரம் படுத்துவிட்டது. பணப் பஞ்சம் தேசமெங்கும் தகித்துக்கொண் டிருக்கிறது. சிக்கனத்தின் காரணமாக அநேகர்களை உத்தியோகங்களி லிருந்தும் தொழிற் சாலைகளிலிருந்தும் நீக்கிவிட்டதால் வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகமாகப் பெருகிக்கொண் டிருக்கிறது.

கிராமங்களின் நிலை பரிதாபம் விளைந்த விளைவுகளை விலைக்கு வாங்க ஆட்களைக் காணோம். கலம் நெல் (48 பட்டணம் படி)



2, 2½, 3 ரூபாயாக இருக்கிறது. விவசாயச் செலவுகளுக்கும் பணத்தைக் காணோம். நிலத் தீர்வையைக் கட்டவே கஷ்டமாயிருக்கிறது. விளைந்த விளைவுகளில் எவ்வளவோ திருட்டுப் போகிறது. இராக் காலங்களில் கிராமங்களில் திருட்டுப் பயமதிகம். அநேக ஏழைகள் திருடர்களது பயத்தால் வீட்டைக் காத்துக்கொண்டு தினந்தோறும் சிவராத்திரி விரதமிருக்கிறார்கள். கட்சிப் பிரதி கட்சி, பொறாமை, குரோதம், வழக்குகள், வம்புகள், நம்பிக்கை யின்மை, கோர்ட்டில் வியாஜ்ஜியங்கள், கிராமங்களில் தலைவிரித் தாடிக்கொண் டிருக்கின்றன. வயிற்றுச் சோற்றுக்கே கஷ்டமா யிருக்கும்பொழுது, கல்வி, சுகாதாரம் முதலியவைகளைப் பற்றிக் கிராமங்களில் யார் கவனிக்கப் போகிறார்கள்? கடன் தொல்லைகள் அதிகம். வாங்கினக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாது அதிகக் கஷ்டப்படுகிறார்கள். நிலங்களை விலை கூறினாலும் வாங்குவதற்கு ஆட்களைக் காணோம். கிராமத் தொழிலாளர் வேலையில்லாது உறங்குகிறார்கள். கூலிக்காரர்களுக்கு கூலி வேலைகள்கூடக் கிடைக்கவில்லை. ஒரு செப்புக் காசு ஒரு தங்கக் காசு மாதிரியாகக் காணப்படுகிறது.

இப்பொழுது மகாத்மா காந்தி சிறையிலிருக்கிறது தேசமே சிறையி லிருக்கிறதாக அருத்தம். தேசீய நெருப்பு சிறிது தணிந்து விட்டது. பல தேச பக்தர்கள் அஞ்சா நெஞ்சத்துடன் கொடிய அடக்குமுறைகளையும் வீரத்துடன் தாங்கி நின்று சிறை சென்று வந்துகொண் டிருக்கிறார்கள். விடுதலை காலம் முடிவதற்குள்ளாகவே சிலரைச் சர்க்கார் விடுதலை செய்துகொண் டிருக்கிறது. உப்புச் சத்தியாக்கிரகத்தின்பொழுது கிராமங்களெல்லாம் விழித்தெழுந்து தேசீயத்தில் ஈடுபட்டது போன்று இத் தருணத்திலில்லை. தேசீயம் இப்பொழுது சாம்பலில் கிடக்கும் தீ மாதிரியா யிருக்கிறது. சமயம் வரும்பொழுது கொழுந்துவிட்டு வீசி யெரியும். நாட்டில் செல்வமில்லை; கல்வியில்லை; சுகாதாரமில்லை. அடிமை என்னும் அந்தகாரத்தில் தேச ஜனங்கள் அடிபட்டுக் கிடக்கிறார்கள். சுதந்திரச் சூரியன் உதயமானவுடன் எல்லாக் குற்றங்களும் குறைகளும் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்துவிடும். ஆகையினால் ஒவ்வொரு வரும் தமக்குத் தெரிந்த முறையில்—வழியைப் பின்பற்றி நாட்டுக்குத் தொண்டாற்றி நாட்டை விடுவிக்க வேண்டும்.

# சர். ஜெகதீஸ் சந்திர போஸ்,

## M.A., D.Sc., LL.D., F.R.S., C.I.E., C.S.I.

திரு. *K. G.* கிருஷ்ணன் அவர்கள், *B.A. (Hons.)*

உலகத்திலேயே பல கோடி ஜீவராசிகளில் மானிடப் பிறவியாய்ப் பிறத்தலரிது. அதிலும் கூன், குருடு, செவிடு நீக்கிப் பிறத்தலரிது. "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்" என்று நாயனார் அருளிச் செய்தவாறு ஓர் தந்தை யானவர் தன் மகனுக்குச் செய்யும் உதவியாவது தன் குமாரனைப் படித்தறிந்த அறிஞர் கூட்டத்தில் முதன்மையாயிருக்கும்படி செய்தலே. "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை யென்னோற் றான் கொல் என்னுஞ் சொல்" என்றபடி ஒருவன் தன் தந்தைக்குச் செய்யும் உதவியாகத் தன்னைத் தன் தந்தை பெறுவதற்கு என்ன தவஞ் செய்தாரோ எனப் பலரும் போற்றும்படியாகக் கீர்த்தியுடன் தோன்றியிருப்பது.

இவ் வுலகில் பேரறிஞர்களாய் நிபுணர்களாய் ஒரே நாளில் வெகு இலகுவில் விளங்கிவிட முடியாதென்ப துண்மை. அப்படிச் சிறப்புற்று விளங்கியவர்கள் இரவு பகலாய்க் கண்ணுறங்சாமல், சதா உழைத்துத் தங்கள் உடல் பொருளாவி மூன்றையும் பொருட்படுத் தாது, அநேக கஷ்ட நஷ்டங்களால் வாட்டப்பெற்று வந்திருக்கின் றனர். இப்படித் தலைசிறந்து விளங்கியவர்களில் சர். **ஜெகதீஸ் சந்திர போஸூம்** ஒருவர். இவர் பிரகிருதி சாஸ்திரத்திலும், பிறகு தாவர உடலுறுப்பு சாஸ்திரத்திலும் உலகத்திலேயே யாரும் நிகரற்ற நிபுணராக விளங்கினார். இவரின் அரிய ஆராய்ச்சிகளை எத்தனையோ பேர் பொறாமையாலும் அறியும் ஆற்றலில்லாமலும் மறுத்து, நேர் விரோதமாக வேலை செய்தனர்! 'தைரியம் புருஷ லட்சணம்' என்று ஊக்கத்தைக் கைவிடாது அரிய கருவிகளைச் செய்து, தனது ஆராய்ச்சியின் உயர்வையும், உண்மையையும் நிலைநாட்டி, அஞ்சா நெஞ்சத்துடன் போராடித் தன் எதிரிகளின் வாயை அடக்கிக் கடைசியில் உலகத்தில் ஓர் உயர்ந்த மேதாவியெனப் போற்றத் தனக்



கும் தன் தாய்நாட்டுக்கும் பெருங் கீர்த்தியை நிலைநாட்டிய சர். ஜெகதீஸ் சந்திர போஸ் அவர்களின் சரிதையைத் தெரிவது சாலப் பொருத்தமன்றோ?

### பிறப்பும் வளர்ப்பும்.

ஜெகதீஸ் சந்திர போஸ் 1858-ம் வருஷம் நவம்பர்மீ 30உ அவதரித்தார். அவருக்கு ஓர் இளைய சகோதரனும், ஒரு மூத்த சகோதரியுமிருந்தனர். போஸ் தன் 17-வது வயதில் தனது சகோதரனை இழந்துவிட்டார். போஸூடைய மூதாதைகளின் ஊர் டக்கா ஜில்லாவிலுள்ள ராரிக்கால் என்கிற கிராமம். ஆனால் ஜெகதீஸ் போஸ் தன் இளம் பிராயத்தை ராரிக்காலுக்கு 35 மைல் மேற்கிலுள்ள பாரிட்பூர் (Faridpur) என்கிற கிராமத்திற் கழித்தார். ஜெகதீஸ் போஸின் தந்தை பகவான் சந்திர போஸ் பாரிட்பூர் நகரத்தில் உதவி நியாயாதிபதியாய்ச் சர்க்கார் உத்தியோகம் பார்த்துவந்தார். இவர் 1869-ல் பர்த்வான் ஜில்லாவுக்கு உதவிக் கமிஷனராகவும் பிறகு 1875-ல் குட்வா ஜில்லாவுக்குப் பேரதிகாரியாகவும் நியமனம் பெற்றார்.

பகவான் சந்திர போஸ் டோராய் என்கிற இடத்தில் அநேக ஏக்கர் நிலங்களை வாங்கிப் பயிர்த் தொழில் செய்தார். ஆனால் விளைவு மிகவும் சுருங்கி நஷ்டமேற்பட்டது போக, வாங்கிய இடமும் வியாதிகளுக் கிடங்கொடுப்பதா யிருந்தது. இதனால் பலத்த நஷ்டம் ஏற்பட்டது. பிறகு அஸ்ஸாம் மாகாணத்தில், தேயிலை விளைவு செய்யத் துணிந்து, சில ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வாங்கியதில், விளைவுக்காகப் பண்படுத்த ஏராளமாய்ச் செலவு செய்ய நேர்ந்ததேயன்றி இலாபம் காணவில்லை. பிறகு பம்பாயில் தேசிய நெசவுத் தொழில்களில் மீதியான பொருள்களைக்கொண்டு பங்கெடுக்க, அவ் வியாபார அதிகாரி பணங்களைக்கொண்டோடி மறைந்தான். இப்படியாக போஸின் குடும்பம் அடுத்தடுத்து நஷ்டமடைந்து வந்தது.

பகவான் சந்திர போஸ் வேலையை விட்டு வீட்டுக்கு வந்து மாலை ஆகாரம் அருந்தியதும் தன் மகன் ஜெகதீஸ் போஸை யழைத்துப் பக்கத்தில் படுக்க வைத்துக்கொள்ளுவது வழக்கம். அன்று முழுதும் கண்ட விஷயங்களைப்பற்றி ஜெகதீஸ் போஸ் தன் தந்தையிடம் கேள்விகள் கேட்டு சரியான காரணங்களைத் தெரிந்துகொள்ளுவார். "இன்று நான் இதைக் கண்டேனே. அது ஏன்?" என்ற விதமான கேள்விகளே அதிகம் பிறக்கும். சிறுவன் கேட்கும் கேள்விகளுக்குத் தந்தையானவர் தனக்குப் பதில் தெரியாவிட்டால் பொய்களைச் சொல்லி சமாதானப்படுத்துவதில்லை. தெரியாதபோது பகவான் சந்திரர் ஜெகதீஸ் போஸைப் பார்த்து, "என் அருமைக்

குழந்தாய்! அது எனக்குத் தெரியாது; எனக்குச் சொல்ல முடியாது; எங்களுக்கு இயற்கைகளைப்பற்றி அதிகம் தெரியாது" என்று நேராய்க் கூறிவிடுவார். இப்படியான அது ஏன்? இது ஏன்? என்ற கேள்விகளே பிற்காலத்தில் ஜெகதீஸ் போஸை ஆராய்ச்சிகளில் தீரராக விளங்கவைத்தன. சில வீடுகளில் குழந்தைகள் கேள்விகள் கேட்டால், "ஓ! குறும்புத்தனமான கேள்விகள் கேளாதே; அவ்வளவுதூரம் படித்துவிட்டாயோ?" என்றாவது அல்லது "ஓ! எனக்குப் பதில் சொல்ல நேரமில்லை" என்றாவது கூறிக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியைக் குறைத்துவிடுகின்றனர். ஒரு நாள் ஜெகதீஸ் போஸ் தன் தந்தையைப் பார்த்து, "அப்பா! நான் வீட்டிற்குள் வருமுன் ஒரு செடி நெருப்புப் பிடித்து எரிவதைப் பார்த்தேன். அதனருகே போய்ப் பார்த்தபோது செடியெல்லாம் பூச்சிகளாயிருந்தன. அவைகள் நெருப்பாயிருந்தன. அது என்ன? அதின் காரணமென்ன? அவைகள் ஏன் அப்படிச் செய்யவேண்டும்?" என்று பல கேள்விகளைக் கேட்டார். அதற்குத் தந்தையானவர், "குழந்தாய்! என்னால் காரணஞ் சொல்ல இயலாது. அதைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது" என்று கூறிவிட்டார்.

பின்னொருதரம் மற்றொரு விந்தையான செய்கை நடந்தது. ஜெகதீஸ் போஸின் பாட்டி கடவுளை தியானிக்கத் தினந்தோறும் சிவக் கடவுளின் உருவம் ஒன்று களிமண்ணால் செய்து தியானம் முடிந்ததும் கிணறு முதலியவைகளில் போட்டுவிடுவாள். இப்படி வீணாகப் போகும் உருவம் செய்த களிமண்ணை பூஜைக்குப் பின் போஸ் வாங்கிக்கொண்டு போய் அநேகவிதமான வஸ்துக்கள் செய்து விளையாடுவது வழக்கம். ஒரு நாள் பூஜை முடிய வெகு நேரமாகிவிட்டது. போஸுக்கோ பொறுமை யெல்லாம் போய்விட்டது. அவர் உடனே பாய்ந்து உருவத்தைத் தூக்கிக்கொண்டோடி விட்டார். பாட்டியார் வாயிலும் வயிற்றிலுமடித்துக் கதறினாள். பிறகு போஸுக்குச் சரியான தண்டனை கிடைத்தது.

தன் வீட்டுக்கருகே ஓடிக்கொண்டிருந்த சிறிய கால்வாயில் ஓடும் தண்ணீரின் அலைகளைக் கண்டு போஸ் மகிழ்வதுண்டு. இது பிற் காலத்தில் வெளிச்சம் முதலியவைகள் அலைகளைப் போல வளைந்து ஓடுந் தன்மையை உணர நல்ல ஏதுவாயிருந்திருக்காதா? பிற்கால ஆராய்ச்சியில் தண்ணீர் ஓடுவதாலுண்டான சக்தி ஞாபகத்திற்கு வந்திருக்காதா? இவ்வாறு பிரகிருதி சாஸ்திர அற்ப அனுபவங்கள் தானாகவே உண்டானது போலவே விலங்குகளின் சாஸ்திரத்தைப் பற்றிய சிறு குழந்தை அனுபவமும் ஏற்படலாயிற்று. அதே ஓடையில் மீன்களைப் பிடித்து அவைகளை உற்றுப் பார்ப்பதிலும், பாம்பு முதலிய கொடிய ஜந்துக்களைப் பயமில்லாது பிடிப்பதிலும், அழகான பூச்சிகளைப் பிடித்துச் சேர்ப்பதிலும் ஆசைப் படுவார்.



போஸுக்கு ஐந்தாவது வயதில் சிறிய மட்டக் குதிரையொன்று அவர் சவாரி செய்வதற்காகக் கொடுக்கப்பட்டது. ஒரு நாள் பாரிட்பூர் குதிரைப் பந்தயத்தன்று போஸும் தனது மட்டக் குதிரையிலேறி நின்றுகொண்டிருந்தார். பக்கத்திலிருந்த ஜனங்கள், "நீயும் பந்தயம் ஓட வேண்டியதுதான்" என்று விளையாட்டாகக் கூறினர். போஸ் அதை உண்மையென நம்பித் தனது குதிரையையும் வேகமாய் விரட்டியதில் இரு கால்களும் குதிரையின் பக்கங்களில் உராய்ந்து தேய்ந்து இரத்த வெள்ளம் ஓடிற்று. தன் காயத்தை ஒருவருக்குங் காட்டவில்லை. ஆனால் அவர் காட்டா விட்டாலும் அவரது கால் வழியாக ஓடிய இரத்தம் காண்பித்துவிட்டது. அப்படிக் காயம் உண்டான போதும் பந்தய எல்லைக்கு வந்து சேர்ந்து தான் எடுத்த காரியத்தை முடித்தார். ஆகவே குழந்தைப் பிராயத்திலேயே போஸின் ஊக்கம், விடா முயற்சி முதலிய அரிய குணங்கள் தெளிவாயின.

மற்றொரு தடவை தன் தாயார் கோபித்து வைதபோது, போஸ் புலிக்கு இரையாகிவிடப் போவதாகக் காட்டுக்குள் சென்றார். ஆனால் புதர்களைக் கண்டதும் பயந்து திரும்பிவந்து விட்டார்.

## படிப்பு

ஜெகதீஸ் போஸ் தனது ஐந்தாவது வயதில் தன் தந்தையாரால் உண்டாக்கப்பட்ட பாடசாலையில் முதலாவதாகத் தாய் பாஷையாகிய வங்காளி பாஷையைக் கற்று வந்தார். தனது 9-வது வயதுவரை தன் சுய பாஷையைப் பயின்று கல்கத்தாவிலிருந்த ஹேர் ஆங்கிலப் பாடசாலையில் மூன்று மாதம் பயின்று பிறகு செய்ன்ட் ஜேவியர் உயர்தர பாடசாலையிற் பயில ஆரம்பித்தார். இங்கே ஆங்கிலப் பிள்ளைகளே அதிகம் படித்ததால் ஜெகதீஸ் தனக்குத் தெரிந்த சிறிது ஆங்கிலப் படிப்பைக் கொண்டு மற்ற பையன்களோடு கலந்து, உறவாட முடியாமல் சிற்சில சமயம் மற்ற பிள்ளைகள் போஸுடன் வம்புச் சண்டைக்கு வந்தனர். ஒரு நாள் ஒரு பையன் ஜெகதீஸை மூக்கில் குத்தவும் இரத்தம் ஓட ஆரம்பித்தது. ஜெகதீஸ் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் நின்றுகொண்டிருந்தவர் திடீரென்று தன்னை யறியாமல் தைரியம் வந்து தன் எதிரியை நையப்புடைத்துக் கீழே தள்ளிவிட்டார். அன்று சண்டையில் ஜெகதீஸ் ஜெயித்ததாக மற்ற பிள்ளைகள் தீர்மானஞ் செய்தனர்.

இவண் படித்து வரும்போது போஸ் தனக்குச் செலவுக்குக் கிடைக்கும் பணங்களைச் சிறிய பறவைகள் வாங்கித் தான் வசிக்கும் பள்ளிக்கூட அறையில் கூடுகளை யமைத்து வளர்த்து வந்தார். தன் அறைக்கடுத்தாற்போல் ஒரு சிறிய நந்தவனமமைத்து வெகு நேர்த்தியாய் வைத்திருந்தார். இவ்வாறு தன் சிறு வயதில் அமைத்தது போலவே பிற்காலத்தில் தனது வாசஸ்தலங்களில் தோட்டங்களமைத்திருந்தது குறிப்பிடத் தக்கது. போஸ், ஜேவியர் பாடசாலையை விட்டு வரும்போது, தான் வளர்த்துவந்த முயல், புறா, செம்மறியாடு முதலியவைகளையுங் கொண்டுவந்தாராம். ஜெகதீஸ் போஸ் தனது 16-வது வயதில் பாடசாலையை விட்டு செய்ன்ட் ஜேவியர் கல்லூரியில் பயில அனுப்பப்பட்டார். அங்கு பிரகிருதி சாஸ்திர படிப்புக்குத் தலைவரா யிருந்த லாபோன்ட் (Father Lafont) என்பவரின் ஆராய்ச்சிகளும், போதிக்கும் ஆற்றலும், சாஸ்திரத்தில் நிபுணத்துவமும் போஸை மயக்கிப் பிரகிருதி சாஸ்திரத்தில் அதிகப் பற்றுதலை யுண்டாக்கி விட்டது. அவர் பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு இன்னும் உயர்தரப் படிப்பிற்கு இங்கிலாந்து செல்ல விரும்பினார்.

## இங்கிலாந்து பிரயாணம்

ஜெகதீஸ் போஸுக்கு இங்கிலாந்து செல்ல அதிக விருப்பமிருந்தபோது அவருடைய தந்தைக்குப் பல விடங்களில் நஷ்டங்களுண்டாகி, கடன் ஏராளம் வாங்க நேரிட்டது. இத் துர் அதிர்ஷ்ட நிலைமையைத் தான் உத்தியோகஞ் செய்து நீக்கிவிடக் கருதி ஐ. சி. எஸ். வேலைக்குப் படிக்க ஆசை கொண்டார். இதை யுணர்ந்த அவர் தந்தை, தான் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து எவ்வாறு ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களில் ஈடுபட முடியாது போனதோ அவ்வாறு தன் குமாரனுக்கும் உண்டாகப்படாதென எண்ணி தன் குமாரன் விருப்பத்திற் கிணங்கவில்லை இவ்வாறு தந்தையின் இஷ்டமின்மையை யறிந்த போஸ் வைத்திய சாஸ்திரத்தை லண்டனிற் சென்று பயின்று வர ஆவல் கொண்டார். இதற்குத் தடையாக இரண்டு காரியங்கள் ஏற்பட்டன. முதலாவது பணக் கஷ்டம்; இரண்டாவது போஸ் தனது சகோதரனை இழந்துவிட்டதால் போஸுடைய அன்னை மிகவும் துக்கத்திலாழ்ந்து தன் மற்ற ஒரே அருமைக் குமாரனையும் சொற்ப காலம் பிரிந்திருக்கக் கூடாமலிருந்தாள். ஆகவே போஸ் கடைசியாக இந்தியாவிலேயே இருந்து தன்னால் கூடியதைச் செய்ய உத்தேசித்தார்.

ஆனால் "பெற்ற மனம் பித்து" என்றபடி போஸின் தாயார் தன் அருமைக் குமாரனின் ஆசையை அழிக்க மனம் வராது, ஒரு



நாள் நடு இரவில் போஸ் படுக்கைக்குச் சென்று தன் பிள்ளையின் தலையை தூக்கி மடிமீது வைத்து உச்சி முகந்து, "என் அருமை மகனே, நீ இங்கிலாந்துக்குப் போவதாலுண்டாகும் அதிக நன்மைகள் யாவை யென எனக்கு அறிய முடியவில்லை. ஆனால் நீ கல்வியில் தேர்ச்சி யடைய விருப்பங்கொள்ளுவதை நான் உணருகிறேன். ஆகவே நான் என் மனதைச் சமாதானஞ் செய்து கொண்டேன். நீ உன் பிரியப்படி செய்வாயாக. உன் தந்தையிடம் தற்போது கைப்பொரு ளில்லாவிட்டாலும் என்னிடத்தில் ஏராளமான நகைகளிருக்கின்றன. அதோடு கொஞ்சம் பணமுமுளது. இவைகளைக் கொண்டு நான் ஏற்பாடு செய்கிறேன். நீ போய் வா" என்று மெல்லிய, இனிய குரலினாற் கூறிய தன் அருமைத் தாயாருக்கு முத்தமிட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட ஆயத்தமானார்.

கப்பலில் அதிகக் காய்ச்சல் ஏற்பட்டுக் கஷ்டப்பட்டு, லண்டன் போய்ச் சேர்ந்து, போஸ் டாக்டர் பாடங் கற்க ஆரம்பித்தார். இப் படிப்பிற் பலவித சிற்சிறு பிராணிகளை அறுத்து ஆராய நேர்ந்ததால் போஸுக்கு வியாதி அதிகரித்துத் துன்பப்படுத்தவே அப் படிப்பை விட்டு கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கிறிஸ்துக் கல்லூரியில் இயற்கை சாஸ்திர உபகாரச் சம்பளம் பெற்று, 1881 ஜனவரியில் சாஸ்திரம் ஆராயத் தொடங்கினார். பிரகிருதி, ரசாயன, தாவரவர்க்க சாஸ்திரங்களில் தன் கருத்தைச் செலுத்தினார். பிரான்ஸிஸ் டார்வின் தாவர சாஸ்திரத்திலும், பிரகிருதி சாஸ்திரத்தில் லார்ட் ரேலே என்ற நிபுணரும் வெகு தெளிவாய்க் கற்பித்தனர். முதலாவதாக கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் பி.எஸ்ஸி. (B.Sc.) பட்டமும், பிறகு லண்டனில் மற்றொரு பி.எஸ்ஸி. (B.Sc.) பட்டமும் பெற்றார். நான்கு வருஷங்களாயின; வயதும் 25 ஆயிற்று. வீட்டு வியாதி வாட்டிற்று. போஸின் பெரிய மைத்துனர் ஏ. எம். போஸ் (ஒரு பாரிஸ்டர்) என்பவருக்குச் சிநேகிதர் புரோபசர் பாசெட் (Prof. Fawcett) என்பவர் லண்டனில் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாக உத்தியோகம் பார்த்துவந்தார். இவர் ஜெகதீஸ் போஸை வரவழைத்துக் க்ஷேமலாபம் விசாரித்து, அவருக்கு இந்தியாவில் நல்ல உத்தியோகங் கிடைக்க முயற்சி செய்தார்.

## உத்தியோகம்.

பாசெட் என்பவர் அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த தன் நண்பர் லார்ட் கிம்பேர்லியிடம் இந்தியாவில் அச் சமயம் தகுந்த உத்தியோக மில்லையென உணர்ந்து, இந்திய வைசிராய் லார்ட் ரிப்பன் பிரபுவுக்கு இதைக் குறித்து ஓர் கடிதம் எழுதி, போஸிடம் அனுப்பி வைத்தார். போஸ் இந்தியா வந்து வீட்டுக்கு வரும் வழியில் வைசி

ராயிடம் தான் கொண்டுவந்த கடிதத்தைக் காட்டினார். வைசிராய் போஸை அன்புடன் வரவேற்று, அவரை இந்தியக் கல்வி இலாகாவில் ஓர் நல்ல உத்தியோகம் பார்த்துத் தருவதாகக் கூறி அனுப்பி வைத்தார்.

கல்கத்தா சேர்ந்தார். அங்குள்ள கல்வி அதிகாரி போஸை வரவழைத்துத் தனக்கு லார்ட் ரிப்பன் கடிதம் எழுதியிருப்பதாகவும், தன்னை எப்பொழுதும் கீழ் உத்தியோகஸ்தர்கள் தாவிச் சிபார்சு செய்வார்கள். ஆனால் இப்பொழுது மேலான உத்தியோகஸ்தர் கேட்டிருப்பதால் உயர்தரமான உத்தியோகம் தற்சமயம் இல்லாவிட்டாலும், மாகாணக் கல்வி இலாக்காவில் உத்தியோகம் தருவதாகக் கூறினார். போஸ் அதனை மறுத்துவிட்டார். போஸ் வேலையைப்பற்றி வெளியிடாததை யுணர்ந்த வைசிராய் மறுபடியும் எழுதிக் கேட்டவுடன் போஸுக்கு அகில இந்தியக் கல்வி இலாக்காவில் காயமில்லாத உத்தியோகங் கொடுக்கப்பட்டது. அக் காலத்தில் சாஸ்திரப் படிப்புக் கற்றுக்கொடுக்க மேனாட்டு நிபுணர்களையே உயர்ந்த பதவிக்குக் கொண்டுவருவதால் ஜெகதீஸ் போஸ் கல்கத்தாவில் தலைமையான பிரெஸிடென்ஸி கல்லூரியில் பிரகிருதி சாஸ்திரப் படிப்புக்குத் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றதும் அக் கல்லூரியை மேற்பார்க்கும் அதிகாரி, அந் நியமனம் பொருத்தமற்றதென்று மறுக்க ஆரம்பித்தார்.

போஸின் உத்தியோகம் உயர்ந்ததாயினும், இந்தியனாயிருந்ததால், ஸ்திரமானதாயுமில்லாததால் மேனாட்டாரைப்போல் முழுச் சம்பளமின்றி மூன்றிலொரு பாகந்தான் பெறவேண்டியதாயிருந்தது. இது நியாயமற்றதென்று தன் சம்பளத்தை போஸ் மூன்று வருஷங்களாகப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இவருடைய மனைவி (போஸுக்குக் கல்யாணம் முடிந்துவிட்டது) இக் கஷ்டமான காலத்தில் வீட்டுச் செலவை வெகு சாதுரியமாக நடத்திவந்தார். போஸ் வெகு சீக்கிரத்தில் பாடம் போதிக்கும் முறையில் நல்ல கீர்த்தியையும் புகழையும் நிலைநாட்டினார். பையன்கள் போஸ் உபந்நியாசமென்றால் முன்னதாகவே ஓடோடியுஞ் சென்று இடங் காத்துக்கொள்ளுவது வழக்கம். மூன்று வருஷங்களுக்குப் பின் போஸின் உயர்வை மேலதிகாரிகள் கண்டு வேலையை ஸ்திரப்பண்ணியதல்லாமல் பூரண சம்பளத்தையும் கொடுக்க ஆரம்பித்தனர்.

இச் சமயம் போஸ் தன் குடும்பத்தில் அதிகக் கடன் சுமந்திருந்ததைக் கண்டு, தன் மூதாதைகள் சொத்துகளைத் தன் சொந்தக்காரர்களின் பழிச்சொற்களைப் பாராட்டாமல் விற்றுக் கடனுக்



குக் கொடுத்ததில் பாதிக் கடன் முடிந்தது. பிறகு தன் தாயார் தனக்காக ஒதுக்கி வைத்திருந்த சொத்துக்களைத் தாயாருடைய சம்மதத்தின்பேரில் விற்றுக் கடனில் முக்கால் பாகத்தைத் தீர்த்துப் பிறகு தனக்கு வந்த சம்பளத்தைக்கொண்டு பூராக் கடனையும் தீர்த்தொழித்தார். கடன் முடிந்த ஓராம் ஆண்டில் போஸின் அருமைத் தந்தையும் ஈராம் ஆண்டில் அன்னையும் தங்கள் புதல்வரின் பிற்கால அரிய வேலைகளின் உயர்வைக் கண்டு களிக்கக் கொடுத்துவைக்காமல் மறைந்தனர்.

## ஆராய்ச்சிகளின் ஆரம்பம்.

1894-௵ நவம்பர் ௴ 30௳ போஸின் 35-வது வயதில் தான் போஸ் தனது புதிய ஆராய்ச்சிகளில் தலையிட்டு உழைக்க வேண்டுமென உறுதிகொண்டார். இப்படி உறுதிகொண்ட மூன்று மாதங்களுக்குள் புதிதானதோர் தகர வேலைக்காரனைக்கொண்டு, ஆராய்ச்சிக்கு வேண்டிய சாமான்களைச் செய்து மின்சார அலைகளைப்பற்றி (Electric Radiation) புதிதாகச் சிலவற்றை ஆராய்ந்து லண்டனுக்கு அனுப்ப 'ராயல் சொஸைட்டி' என்ற சாஸ்திர சங்கத்தார் அதை ஒப்புக்கொண்டு வெளியிட்டனர். இப்படியே ஒன்றின்பின் ஒன்றாய் அநேக ஆராய்ச்சிகளை வெளியிடவும் லண்டன் சர்வகலாசாலை, போஸுக்கு டி.எஸ்ஸி. (D.Sc.) என்ற பட்டத்தை அளித்தது. சாஸ்திர நிபுணர் லார்ட் கெல்வின் 1896-ல் போஸுக்கு எழுதியதாவது: "எனக்கு ஆச்சரியமும், ஆனந்தமும் உண்டாகிறது. மிகக் கஷ்டமானதும் ஆச்சரியமானதாயுமுள்ள சில நுட்பமானவைகளைத் தாங்கள் ஆராய்ச்சி செய்ததற்கு எனது மனமுவந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்." பிரான்சு தேசத்து சாஸ்திர சங்கத் தலைவர் எம். கார்னு என்பவர் போஸ் ஆராய்ந்த விஷயங்களில் அதிகம் உழைத்தவர். அவர் 1897-ல் போஸுக்கு எழுதியதாவது: "உங்கள் முதலாவது ஆராய்ச்சிகளின் பயன் சாஸ்திர முன்னேற்றத்திற்கு வழிகளை ஏற்படுத்தும் சக்திகள் உங்களுக்கு உளது என்பதை வெளிப்படுத்துகிறது. உங்கள் ஆராய்ச்சிக் குதவிய சாமான்களைப் போல நானும் ஏற்படுத்தி, அவைகளைத் தழுவிப் பல ஆராய விரும்புகிறேன்."

பகலெல்லாம் பாடங் கற்பித்து இரவில் அதிக நேரம் வரை கண் விழித்துத் தனது சொந்தப் பணங்களை ஏராளமாய்ச் செலவிட்டு ஜெகதீஸ் போஸ் ஆராய்ச்சிகள் செய்ய ஆரம்பித்தார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு போஸின் அதி அற்புத ஆராய்ச்சிகளைக் கண்டு வங்காள சர்க்கார் பிரஸிடென்ஸி கல்லூரியில் போஸ் ஆராய்ச்சிகள் செய்ய வருஷத்திற்கு ரூ. 2,500 உதவ முன் வந்தது.

போஸுக்கு விரோதிகள் அநேகர் இருந்தனர். இருப்பினும் தன் விடா முயற்சியுடன் அரிய வேலைகள் செய்ததனால் அவர்கள் வாய் திறக்கக் கூடாமற் போயிற்று. போஸ் தான் ஒரு வருட விடுமுறையுடன் இங்கிலாந்து சென்றுவர கவர்னரிடம் உத்திரவு கேட்டார். இதுவரை இந்தியாவிலிருந்து யாரும் இங்கிலாந்துக்கு சாஸ்திர ஆராய்ச்சிகளை விளக்கவோ, புதிதாய் ஆராயவோ சர்க்காரால் அனுப்பப்படாமலிருந்த குறையைத் தான் நிவர்த்தி செய்ய வெகு பிரயாசைப்பட்டுக் கடைசியாக கவர்னரின் அன்பையும், ஆதரவையும் பெற்று இங்கிலாந்தில் ஆறு மாதம் வரை போயிருந்து வர கல்வியிலாகா அதிகாரியிடமிருந்து அனுமதி பெற்றார். இங்கிலாந்துக்குத் தன் பெண்சாதியுடன் புறப்பட்டார்.

மின்சார ஆராய்ச்சிகளைப் பற்றி ஏராளமான கட்டுரைகள் வழங்கி வந்தார். இவைகள் அநேக சாஸ்திரப் புஸ்தகங்களில் சேர்க்கப்பட்டன. போஸ் இங்கிலாந்து சேர்ந்ததும் தான் ஆராய்ந்த பல விஷயங்களை யொட்டி அநேக விடங்களில் அருமையான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். 'ராயல் இன்ஸ்டிட்யூஷன்' என்ற பிரபல்யமான சாஸ்திர சங்கத்தில் வெள்ளிக் கிழமை மாலைகளில் நடக்கும் கூட்டமொன்றில் போஸ் பேசிய திறமையைக் கண்டு இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரி போஸுக்கு மூன்று மாதம் அதிகமாக விடுமுறை யுண்டாக்கினார். முதலாவதாக போஸ் இங்கிலாந்தில் பிரிட்டிஷார் சங்கம், 'லிவ்வர்பூல்' என்ற நகரத்தில் கூடிய போது தன் ஆராய்ச்சிகளின் அருமையான சொற்பொழிவு செய்து முடித்ததும் **லாட் கெல்வின்** என்ற சாஸ்திர நிபுணர் நொண்டி, நொண்டி பெண்களிருக்கும் இடத்திற்குச் சென்று போஸ் மனைவியின் இரு கைகளையும் பிடித்துக் குலுக்கி அவர் போஸின் அரிய ஆராய்ச்சிகளுக்கு வந்தனத்தைச் செலுத்தினார்.

மேனாட்டு வளர்ச்சியில் பெரும்பாலும் தழுவி நின்ற சாஸ்திரத்தை வெகு நுட்பமாக ஆராய்ந்து மேனாட்டாரின் நன்மதிப்பைப் பெற்ற முதலாவது இந்தியர் போஸ் என்று எல்லா ஆங்கிலேயர்களும் வாயார வாழ்த்தினார்கள்.

## ஆகாயத் தந்தியின் ஆதி யனுபவம்

**ஹெர்ட்ஸ்** என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட மின்சார அலைகளைக் கம்பியில்லாத் தந்தியில் உபயோகப்படுத்த சர் **ஆலிவர் லாட்ஜ், மார்க்கோனி** முதலியோர் முயன்று வந்தனர். இவர்களுக்கு முன்னமேயே போஸ் கல்கத்தாவில் மின்சார அலைகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கம்பியில்லாமல் ஓடிவந்து சேருவதைக்



காண்பித்திருக்கிறார். 1895-ல் வங்காள கவர்னர் தலைமையில் போஸ் சொற்பொழிவு செய்யும்போது ஓரிடத்தில் மின்சார அலைகளை யுண்டாக்கிச் சுமார் 75 அடிகளுக் கப்பாலுள்ள மற்றோர் அறையில் (ஊடே மூன்று சுவர்களிருந்தன) யாதொரு கம்பிப் பொருத்தமு மின்றி முதல் அறையில் உண்டாக்கப்பட்ட மின்சாரத்தைக் கிரகித்து, அதனால் சிறிய மின்சார மணி அடிபடவும் சிறிய மருந்து கைத் துப்பாக்கியைச் சுடும்படியாகவும் செய்தார். போஸ் மின்சார அலைகள் பறந்தோட 20 அடி உயரக் கம்பத்தில் ஓர் உலோகத் தகடை அமைத்திருந்தார். இதிலிருந்து ஓடிவரும் மின்சாரத்தைக் கிரகிக்க அதே மாதிரியாக உயரமானதோர் கம்பம் நாட்டி அதிலிருந்து "கோகீரர்" என்றதோர் மின்சாரம் கிரகிக்கும் கருவியைச் செய்து அமைத்திருந்தார். இதைக் கண்டு கவர்னர் உள்பட யாவரும் ஆச்சரிய மடைந்தனர். இவ்வாறே அதிக தூரத்திலிருந்து கம்பியில்லாமல் மின்சாரத்தைக் கிரகித்து அதனால் சங்கதிகள் தெரிவிக்க போஸ் தனது வீட்டில் ஒரு தந்தி மரம் நாட்டி ஒரு மைலுக் கப்பாலுள்ள பிரெஸிடென்ஸி காலேஜுக்குச் சங்கதிகள் தெரிவிக்கும் வண்ணம் அமைக்க ஆயத்தப்படும்போது இங்கிலாந்து செல்ல நேர்ந்தது. ஆகவே ஆகாயத் தந்திக்கு ஆதி கர்த்தா நமது போஸ் என்று கூறவேண்டும்.

போஸ் செய்த 'கோகிரர்' என்ற புதிய கருவியைத் தன் பேரால் ரிஜிஸ்தர் செய்யாது விட்டுவிட்டார். போஸ் தான் கண்டு பிடிப்பவைகளிலிருந்து தனக்கு ஒருவித பிரதிப் பிரயோஜனங் கூடாது, உலகம் அதனால் முன்னேற்றமடைய வேண்டும் என்ற உயரிய பெருந் தன்மை கொண்டு பேசாதிருந்துவிட்டார். இதை "எலக்ட்ரிக் இஞ்சினியர்" என்ற ஆங்கிலப் பத்திரிகை பறை சாற்ற ஓர் அமெரிக்கா தேசத்தார் உடனே போஸ் செய்த 'கோகீரர்' கருவியைத்தான் கண்டதாக அமெரிக்காவில் தன் பேரால் ரிஜிஸ்தர் செய்துகொண்டார். இதை போஸ் கேட்டும் தன் உரிமையை நிலை நாட்டாது யாரும் பயனடையட்டு மெனத் தனக்குள்ள பெருந் தன்மையால் வாளாதிருந்துவிட்டார். இவ்வாறு ஆகாயத் தந்திக்கு ஆதி காத்தாவென அனைவரும் அறியா வண்ணம் போஸ் கெடுத்துக் கொண்டார். இப்படி விட்டுக்கொடுத்ததை மேனாட்டார் ஆவலுடன் அபகரித்துத் தங்கள் பெயர்களை உயர்த்திக்கொண்டனர்.

போஸ் 1897-ல் இங்கிலாந்திலிருந்து பிரான்சு, ஜெர்மனி தேசங்களின் சாஸ்திர நிபுணர்களால் வரவழைக்கப்பட்டு, ஆங்காங்கு சென்று, அரிய உபந்நியாசங்கள் செய்து, தன் பெயரை உன்னத நிலைப்படுத்தினார். பிரான்ஸ் தேசத்து சாஸ்திர நிபுணர்கள் போஸைத் தங்கள் பிரகிருதி சாஸ்திர சங்கத்திற்குக் கௌரவ

அங்கத்தினராய்ச் சேர்த்துக்கொண்டனர். ஜெர்மனி தேசத்தில் **பேர்லின்** நகரில் போஸ் பேசும்பொழுது வெகு தூரங்களிலிருந்து ஜனங்கள் ஏராளமாய் வந்தனராம். **குயிங்க்** என்றதோர் பெரிய ஆராய்ச்சியாளர் போஸைப் பார்க்க வெகுதூர மிருந்த **ஹீடெல் பேர்க்** என்ற நகரிலிருந்து ஓடோடியும் வந்தாராம். பிறகு போஸ் இந்தியாவுக்குப் புறப்பட்டார். இவர் மேனாட்டிற்குச் சென்று வந்ததால் இந்தியர்கள் சாஸ்திர ஆராய்ச்சியில் தேர்ந்தவர்களென்று சகலரும் போற்றும்படியான கீர்த்தியை நிலை நாட்டினார். லண்டனில் "ஸ்பெக்டேடர்" என்ற பத்திரிகாசிரியர் இந்தியர் முன்னேற்றத்திற்குத் தகுதியற்றவர்களென்று தாக்கி யெழுதி வந்தவர் போஸ் உபந்யாசத்திற்குப் போய் அவண் அவருக்குண்டான ஆச்சரியத்தால் உடனே தன் பத்திரிகையில் போஸையும், கீழ் நாடுகளையும் போற்றிப் புகழ்ந்து எழுதுகிறாரென்றால் போஸின் ஆராய்ச்சியின், உபந்யாசத்தின் பெருமைதானென்னே?

## இந்தியாவில் ஆராய்ச்சி சாலை முயற்சி

இங்கிலாந்தில் பேரறிஞர்களான **லார்ட் லிஷ்டர், லார்ட் கெல்வின்,** புரொபஸர்களான **கிலிப்டன், பிட்ஜெரால்ட், டாக்டர் கிலாட்ஸ்டோன், பாய்ன்டிங், சர். தாம்ஸன், சர். ரூய்கர்** முதலியோர் கையொப்ப மிட்டுக் கல்கத்தாவில் டாக்டர் போஸின் பார்வையில் ஓர் சாஸ்திர ஆராய்ச்சிசாலை யமைத்துப் பிரகிருதி சாஸ்திரத்தைக் கீழ் நாட்டில் வளர்க்க வேண்டும் என்ற நீண்ட கடித மொன்றை அப்பொழுது இந்தியா மந்திரியா யிருந்த **லார்ட் ஜ்யார்ஜ் ஹாமில்டன்** என்பவருக்கு அனுப்பினர். அவர் அதின்படியே மேமீ இந்திய வைசிராயுக்கு ஏற்பாடு செய்ய அனுமதி கொடுத்தார். அப்பொழுது வைசிராயாயிருந்த **லார்ட் எல்ஜின்** டாக்டர் போஸுக்குத் தைரியங் கொடுத்தார். ஆனால் சின்னாட்களில் மேலதிகாரிகளின் குறுகிய எண்ணங்களால் அது அநுஷ்டானத்திற்கு வரவில்லை. பிறகு **லார்ட் கர்ஜான்** வைசிராயா யிருக்கும்போது போஸ் மறுபடியும் ஆராய்ச்சிசாலை யமைப்புக்கு எழுதிக் கேட்டார். வைசிராயுக்குச் சம்மதமா யிருந்தபோதிலும் அவருக்குச் சாஸ்திரத்தி னருமை தெரியாததால் அவர் அது விஷயம்பற்றி இங்கிலாந்துக்கு எழுதிக் கேட்டார். இரண்டு பிரகிருதி சாஸ்திர அறிஞர்கள் அதற்கு ஆதரவாகவும் மற்றிரண்டு பேர் பொறாமைப் பேய் பிடித்து எதிராகவும் பதிலளித்தனர். இதனால் வைசிராய் ஒன்றுந் தோன்றாதவராய் 1902-ல் **டில்லி** தர்பாரில் போஸுக்கு சி. ஐ. இ. என்ற உயரிய பட்டத்தை அளித்துப் பேசாதிருந்துவிட்டார்.

டாக்டர் போஸ் இதுவரை ஆராய்ந்து வெளியிட்ட ஆராய்ச்சிகளில் சில பின்வருமாறு:



(1) நேரான கண்ணாடிகளிலும் வளைந்த கண்ணாடிகளிலும் மின்சார அலைகள் பிரதிபிம்பித்தல்.

(2) பலவித சாதாரண கண்ணாடிகளினுள் மின்சார அலைகள் சென்று மறுபுறம் சிறிது கோணிவருதலும் அதன் பலவிதக் கணக்குகளும், தோற்றங்களும்.

(3) மின்சார சக்தியால் நிறமுண்டாக்கப்பட்ட வஸ்துக்களும் மின்சார அலைகளைக் கிரகிக்கும் விஷயங்களும்.

(4) மின்சாரக் கதிர்கள் அலைகள்போல் செல்லுவதையும், அவ்வித அலையின் அளவும்.

(5) ஒரே மின்சார அலை பலவித ஸ்படிகங்களில் சென்று இருவித அலைகளாக மாறுதலும், பல மின்சார அலைகள் ஒரே அலையாக மாறுதலும் இதுபோன்ற அநேகம் புதிது புதிதாக ஆராய்ந்து வெளியிட்டார்.

பிறகு நாம் முன் குறிப்பிட்ட மின்சார அலைகளைக் கிரகித்து உணர்த்தும் "கோகீரர்" என்ற அரிய கருவியையும், புகைப்படம் பிடிப்பதில் இருட்டில் உருவங்களைப் படமெடுத்தலையும்பற்றி அநேக ஆராய்ச்சிகள் செய்தார்.

## உயிருள்ள உயிரற்ற வஸ்துக்களின் ஒற்றுமை.

டாக்டர் போஸ் 1900-ம் ஆண்டில் எல்லாரும் ஆச்சரியப்படத் தக்கதான ஆராய்ச்சிகள் செய்தார். உயிருள்ள மிருகத்தின் தசை நரம்பையும், சாதாரண உயிரற்ற உலோகத்தையும் சுருக்குக் கொடுக்கும் திராவகம் முதலிய பொருள்களால் திடீரென்று சம்பந்தப்படுத்தினால் அவைகள் ஒரேவிதமான எழுச்சியுண்டாகி, ஒரே விதமாக அசைவுற்று ஒரே விதமாக அடங்கிவிடுகின்றன வென்று கண்டு பிடித்தார். இவ் வாராய்ச்சிக்குப் பிறகு **பாரிஸ்** நகரத்தில் பிரகிருதி சாஸ்திரக் காட்சிக் கூட்டத்திற்கு வரும்படி டாக்டர் போஸை வேண்டிக்கொண்டனர். வங்காள கவர்னரும் டாக்டர் போஸின் அரிய ஆராய்ச்சிகளுக்கு மெச்சி இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தார். டாக்டர் போஸ் 1900 ஆகஸ்டுமீ பாரிஸ் நகர் சென்று, உலகத்தில் பிரசித்திபெற்ற சாஸ்திர நிபுணர்களின் குழுவில் தான் புதிதாய் ஆராய்ந்தவற்றை அநேக மேற்கோள்களுடன் விஸ்தரித்துக் காட்டினார். அக் கூட்டக் காரியதரிசி டாக்டர் போஸ் ஆராய்ந்த உயிருள்ள உயிரற்ற வஸ்துக்களின் உணர்ச்சிகளின் சம்பந்தத்தைக் கேட்டானந்தித்து அவ்வரிய ஆராய்ச்சியைத் தங்கள் சஞ்சிகையில் வெளியிட்டார்.

இவ்வமயம் சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா சென்று திரும்பி பாரிஸ் நகரத்தில் வந்திருந்தார். போஸின் சொற்பொழிவைக் கேட்டானந்திக்க அவர் சென்றிருந்தார். அதைப்பற்றி ஓர் கடிதத்தில் குறிப்பிட்டது பின்வருமாறு:

"பாரிஸ் நகரின்கண் ஒவ்வொரு நாட்டுப் பேரறிஞர்களும் தங்கள் தங்கள் நாட்டின் பெருமைகளை நிலைநாட்ட வந்து குழுமியிருந்தனர். பிரசித்திபெற்ற நிபுணர்கள் இவண் புகழுடன் ஆடம்பரத்துடன் வரவேற்கப்பட்டனர். அவ் வாடம்பரங்கள் அவர்கள் நாட்டின் கீர்த்தியை வாழ்த்தும் அறிகுறியாகிறது. உலகத்தில் எல்லா பாகங்களிருந்தும் இணையற்ற அறிஞர்கள் கூடியிருக்க என்னைப் பெற்ற ஓ! என் தாய்நாடே உனது பிரதிநிதி எங்கே? இம் மாபெருங் கூட்டத்தின் நடுவில் உன் வீரம் பொருந்திய மக்களில் ஒரு வாலிபர் திடீரென்று வந்து தோன்றினார். அவருடைய வார்த்தைகள் கூடியிருந்தவர்களை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன. அவ் வார்த்தைகள் அவருடைய தேசத்தாரனைவருக்கும் மனக் குதூகலத்தை யுண்டாக்கும். இவ் வீரம் பொருந்திய (இந்திய) புதல்வரைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக! அவருடைய உண்மையான—ஒப்பற்ற உதவியாகச் சதா கூடவேயிருக்கும் அருமை மனைவியையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக!"

அப்பொழுது ரவீந்திரநாத் தாகூரின் காவியங்கள் மேனாட்டில் பரவாமலிருந்தன. தன் உயிர்ச் சிநேகிதரான டாக்டர் போஸின் அருஞ் செயல்களைக்குறித்து ரவீந்திரநாத் தாகூர் வங்காள பாஷையில் அருமையான செய்யுளொன் றமைத்துத் தனது தாழ்மையான சன்மானமாக பாரிஸ் நகரிலிருந்த டாக்டர் போஸுக்கு அனுப்பி வைத்தார்.

## உலோக, மிருக, தாவர உணர்ச்சிகளின் ஒற்றுமை.

டாக்டர் போஸ் தன் ஆராய்ச்சிகளைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கும்போது, திடீரென்று அவர் மனதிலோர் எண்ணம் உதித்தது. உயிரற்ற உலோகங்கள் உயிருள்ள தசை நரம்புகளைப்போல உணர்ச்சியையுடையதானால் தாவர வர்க்கங்களும் அவைகளைப் போலவே யிருப்பது சாலப் பொருத்தமென யோசித்தார். அவர் யோசிப்புக்குச் சரியாகவே தாவர வர்க்கங்களும் சுருக்குக் கொடுக்குந் திராவகத்தால் தசை நரம்புகளைப்போலத் திடீரென்று அசைவு கொண்டெழுந்து பிறகு தாழ்ந்தன.

"குலோரோபாம்" என்ற உணர்ச்சியை நீக்கும் மருந்தைச் செடிக்கு உபயோகப்படுத்தினால் மிருகங்களைப்போலவே உணர்ச்



சியை இழந்துவிடுகின்றன. ஒரு செடிக்குப் பாஷாணத்தை உபயோகித்தால் இறந்துபோகும். தசை நரம்புகள் எவ்வாறு சிறிது சிறிதாக உணர்ச்சியற்று உயிரற்றுப் போகின்றனவோ அவ்வாறே அச் செடியும் இவ்விதக் குறிகளைக் காட்டி மாண்டுபோகிறது. டாக்டர் போஸ் உலோக வகையில் டின், துத்தநாகம், பித்தளை முதலியவற்றிலும், அநேகவித மிருகங்களிலும், அநேகவிதச் செடிகளிலும் ஒரேவித பாஷாணத்தை உபயோகப்படுத்த, அவைகளெல்லாம் ஒரே விதமாக உணர்ச்சியற்றுக் கெட்டுப்போகுங் குறிகளைக் காட்டுவதைத் தக்க கருவிகளைக்கொண்டு செவ்வனே அறிந்தார்.

டாக்டர் போஸ் இங்கிலாந்து சென்று, சர். மைக்கல் பாஸ்டர் மூலமாகத் தான் ஆராய்ந்ததை ராயல் சாஸ்திரசாலைக்குத் தெரியப்படுத்தித் தனது பெயரைப் பதிவுசெய்துகொண்டார். 1901-ளு மேமீ 10வ ராயல் சாஸ்திரச்சாலையில் தான் ஆராய்ந்தவைகளைப்பற்றி விளக்கிக் காட்டினார். இதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் 'இதுவென்ன விநோத'மெனத் திறந்த வாயுடன் இமைகொட்டாப் பார்வையுடன் அசைவற்றுச் செவி சாய்த்து டாக்டர் போஸ் பேச்சை நிறுத்தியும் ஒருவரும் எழுந்திராது மெய்மறந் திருந்தனராம்.

## போஸ் ஆராய்ச்சிக்கு மறுப்பு.

1901 ஜூன் 6வ முடிவாகப் பெரிய சாஸ்திர சங்கமான 'ராயல் சொஸைட்டி'யில் தனது ஆராய்ச்சிகளை நிலைநிறுத்த உண்மைகளை விவரித்துத் தானே செய்து காட்டினார். இக் கூட்டத்திலே தான் டாக்டர் போஸுக்குக் கஷ்டங்கள் ஏற்பட ஆரம்பித்தன. உடல் சாஸ்திரத்தில் இங்கிலாந்தில் மகா நிபுணராக விளங்கிய சர் ஜான் பர்டன் சாண்டர்ஸன் என்பவர் போஸ் கூறியவைகளை மறுக்க எழுந்தார். இவர் போஸின் புதிய ஆராய்ச்சிகளைக் கேட்க ஆக்ஸ்போர்ட் நகரிலிருந்து வந்தவர். சர். ஜான், டாக்டர் போஸின் முந்திய ஆராய்ச்சிகளுக்குப் புகழ்ந்து, பிறகு போஸ் கூறிய மின்சாரத்தால் உயிருள்ள உயிரற்றவைகளின் உணர்ச்சிகளின் எழுப்பின் ஒரே தன்மையை வெகுவாகக் கண்டித்துப் பேசினார். தான் எத்தனையோ தடவை செய்துபார்த்தும் முடியாமல் போனதென்றும் ஆகவே போஸ் கூறியது சுத்தப் பொய் யென்றும், பிரகிருதி சாஸ்திரக்காரர்களுக்கு உடலுறுப்பு சாஸ்திரப் பகுதியில் வேலையில்லை என்றும் பேசி உட்கார்ந்ததும் மற்றொரு உடல் சாஸ்திர வாதியும் மறுத்தார். பல பிரகிருதி சாஸ்திர நிபுணர்கள் ஆதரித்தும் பேசினர். கடைசியாக டாக்டர் போஸ் பதில் கூறும்போது தன் ஆராய்ச்சிகளைப் பகிரங்கமாய்ச் செய்து காட்டியும், அதனை விடுத்துத் தன்னைக் கண்டித்

துப் பேசுவது நல்ல முறையல்லவென்றும், இதுவரை தன் ஆராய்ச்சிகளை மறுத்துப் பேசியவர்கள், தான் கூறியவைகளை அவர்கள் கண்ணுக்கு முன் செய்து காட்டியவைகளைப்பற்றிப் பழுதொன்றுங் கூற முடியாமல், ஏதோ தங்களுக்கு நம்பிக்கையில்லை என்று மாத்திரம் கூறிவிடுவது சாஸ்திர நிபுணர்களுக் கழகல்லவென்றும், தன் ஆராய்ச்சிகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவசியமில்லை யென்றும், ஆனால் தான் கூறியவைகளை மாற்றவோ, நீக்கவோ போகிறதில்லை யென்றும் நிமிர்ந்த தலையுடன் உரத்த சத்தமாய்ப் பேசியமர்ந்தார்.

ஆங்கிலேயரால் உடல் சாஸ்திர நிபுணரென மதிக்கப்பட்ட சர். சாண்டர்ஸன், டாக்டர் போஸின் ஆராய்ச்சியை மறுத்ததால் மற்றவர்களும் கண்மூடித்தனமாய் ஒப்புக்கொண்டு எழுந்து போய்விட்டனர். ஆகவே இவ் வாராய்ச்சி வெளியிடப்படாமல் 'ராயல் சொஸைட்டி'யிலேயே வைக்கப்பட்டது.

இதுகாறும் யாதொரு மறுப்புமின்றிப் பல்லோர் புகழ ஊக்கத்துடன் ஆராய்ச்சிகள் செய்து நன்மதிப்பைப் பெற்று, இப்பொழுது மறுப்பு ஏற்பட்டதால் போஸ் நெஞ்சம் கொஞ்சம் தளர்ந்தது, நொந்தது. அவர் எதிர்கால ஆராய்ச்சிகளுக்குப் பெருந் தடங்கல் ஏற்படுமோவென சந்தேகிக்கவும், முன் செய்த ஆராய்ச்சிகள் உண்மையோ அல்லவோவெனப் பலர் ஐயுறவும் இடந் தருமோவெனவும் போஸ் உள்ளத்தில் நினைத்து, அளவற்ற மனவருத்தமடைந்து, இந்தியாவுக்குப் புறப்பட 'டிக்கட்' எடுத்துவிட்டார். ஆ! மறு நிமிஷமே அவர் உள்ளம் உயர்ந்து ஊக்கங்கொண்டார். திடீரென்று தன் பிரயாணத்தை நிறுத்தினார். தன் ஆராய்ச்சிகளின் உண்மையை நிலைநாட்டாது வீடு திரும்புவதில் நன்மை யில்லையெனக் கண்டார், உறுதிகொண்டார்! ஆ! இதன்றோ வீரம்! விடாமுயற்சி! இதன்றோ ஒவ்வொரு இந்தியரும் பின்பற்றும் நன்னெறி!

## விடா முயற்சியும் வெற்றியும்

பலரின் எதிர்ப்புகளினூடே தான் இன்னும் ஒரு வருடம் லண்டனிலிருக்க இந்தியா மந்திரியிடம் வெகு பிரயாசையுடன் உத்திரவைப் பெற்று, போஸ் தன் ஆராய்ச்சி சம்பந்தமாய் வேலை செய்ய ஆரம்பித்தார். புதிய கருவிகளையும் செய்தார். 1902 பிப்ரவரி மீ 20உ லீனியன் சொஸைட்டியில் சில அறிஞர்களின் ஆதரவில் மறுபடியும் புதிய முறையில் ஜனங்களுக்கு நன்கு புலனாகும் வண்ணம் தன் ஆராய்ச்சிகளின் உண்மையை யெடுத்துக் காட்டினார். அக் கூட்டத்திற்கு அவர் எதிரிகள் அநேகர் வந்திருந்தும் ஒன்றும்



மறுத்துக் கூற இடமில்லாமல் போய்விட்டது. சகலரும் போஸின் ஆராய்ச்சியின் உண்மையை அறிந்து 15 நிமிஷங்கள் வரை விடாது கரகோஷஞ் செய்தனர். இக் கூட்டத்திற்கு முன்னதாக போஸ் இந்தியாவுக்கு எழுதிய கடிதத்தில் கூறியவற்றில் சில வரிகளாவன:

"நான் இப் புது ஆராய்ச்சியை விட்டுவிடுவது யாருடைய கட்டாயத்திலுங் கூடாது. எனக்கே பிடித்தமில்லாவிட்டால் கைவிடுவேன். என்னுடைய வழி எனக்கே நன்றாய்ப் புலனாகாவிட்டால் நான் அதை அடிக்கடி ஆராய்வேன். அப்படி ஆராய்ந்து ஒருவருடைய பலமான எதிர்ப்பு எவ்வளவு தூரம் உண்மையெனக் காண்பேன். மறுத்தவுடன் கைவிட்டுப் பேசாது கையைக் கட்டியிருப்பது என் சுபாவமல்ல. நான் புதுமையான—இயற்கைக்கு மாறானவைகளில் நம்பிக்கை யுள்ளவனல்ல. ஆனால் புதுமையானதாக இத் தருணம் நடக்கப் போகிறது. ஏனெனில் நான் உண்மைக்குப் போர் புரியப் போகிறேனென்று எனக்குத் தெரியும்."

டாக்டர் போஸின் ஆராய்ச்சி இப்பொழுது அவர் உபயோகப்படுத்திய கருவிகளின் படங்களுடன் வெளியாயிற்று. இதற்குப் பின் மற்றொரு தொல்லையும் வந்து விழுந்தது. டாக்டர் போஸ் ஆராய்ந்து வெளியிட்டது புதிதானதல்லவென்றும் அது போஸுக்கு முன்னாலேயே மற்றொருவரால் 1901ஆம் நவம்பரில் கண்டு பிடிக்கப்பட்டது என்று கடிதங்கள் வரத் தொடங்கின. கடைசியில் இதை விசாரித்தறிய ஓர் சபை கூடிற்று. அது விசாரித் தறிந்ததில் டாக்டர் போஸே இந்த ஆராய்ச்சிக்கு ஆதி கர்த்தாவென்று முடிவிட்டது. டாக்டர் போஸ் ராயல் சொஸைட்டிக்கு எப். ஆர். எஸ். மெம்பராகவும், எல்எல்.டி. (LL.D.) பட்டதாரியாகவும் திகழ்ந்தார். மேலே குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களுக்குப் பிறகு போஸ் தனது நூற்றுக் கணக்கான ஆராய்ச்சிகளை லண்டனுக்கு எழுதி யனுப்பாது புஸ்தகமாக எழுத ஆரம்பித்தார்.

## போஸ் வெளியீடுகள்

டாக்டர் போஸ் 1902-ல் "உயிருள்ள உயிரற்ற வஸ்துக்களின் உணர்ச்சிகளின் ஒரே தன்மை" என்ற புத்தகத்தை 199 பக்கங்களுடன் வெளியிட்டார். 1906-ல் "தாவரங்களின் உணர்ச்சி" என்ற புத்தகத்தை 781 பக்கங்களாக 315 பரீக்ஷைகளுடன் வெளியிட்டார். 1907-ல் "உடலுறுப்பில் மின்சார உபயோகம்" என்ற புத்தகத்தை 760 பக்கங்களில் 321 பரீக்ஷைகளுடன் வெளியிட்டார். பிறகு 6, 7 வருஷங்களாகத் தாவர வர்க்கங்களைப் பற்றி ஆராய்ந்த கருவிகளை உயர்தர மாக்குவதில் கழித்தார்.

முதலாவதாக தாவர வர்க்கங்களில் பாஷாணம், மின்சாரம் முதலியவைகளால் ஏற்படும் உணர்ச்சிகளைத் தெரிவதற்கான கருவிகளைச் செய்தார். பின்பு செடிகளுக்கு உற்சாகம் அல்லது கோபத்தால் திடீரென்று எழும்புதல் சுருங்குதல் இவைகளை அக் குறிகளுண்டாகியிருந்து நீங்கும் நேரத்தையும் தானாகவே குறிப்பிடும் கருவியைச் செய்து முடித்தார். செடிகளின் வளர்ச்சியை அளவிடக் கருவிகள் செய்தார். ஒரு விநாடியில் ஒரு அங்குலத்தில் லட்சத்தில் ஒரு பாகமான அவ்வளவு நுட்பமான வளர்ச்சியைக் காட்டும் கருவியைச் செய்தார். இதே கருவியை இன்னும் அதி நுட்பமான வளர்ச்சியை (ஒரு விநாடியில் ஓர் அங்குலத்தில் 100 கோடியில் ஒரு பாகமான வளர்ச்சியை)க் காட்டக்கூடியதாக அவ்வளவு நுட்பமாகச் செய்தார்.

1913-ல் "தாவரங்களின் கோபக் குறி ஆராய்ச்சிகள்" என்ற புத்தகத்தை 376 பக்கங்களாக 180 பரீக்ஷைகளுடன் வெளியிட்டார். 1917-18-ம் ஆண்டுகளில் "தாவரங்களில் உயிர் வளர்ச்சிகள்" என்ற விஷயங்களடங்கிய 21 ஆராய்ச்சிகளை 251 பக்கங்களில் முதல் பாகமும், பிறகு 30 ஆராய்ச்சிகளடங்கிய 344 பக்கங்களில் இரண்டாம் பாகமும் வெளியிட்டார். மூன்றாம் பாகமொன்றும் வெளியிட்டுத் தாவரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை நிறுத்தி, அவைகளைத் தழுவிய மற்ற பழைய புதிய ஆராய்ச்சிகளைச் சிந்திக்க நினைவு கொண்டார்.

## "யார் தெரியுமா?"

டாக்டர் போஸ் தாவரங்களின் கோபக் குறி முதலியவைகளைக் குறிப்பிடும் கருவிகளைச் செய்து முடித்தவுடன் அமெரிக்கா, ஐரோப்பா தேசங்களிலுள்ள சர்வ கலாசாலைகளின் வரவேற்புகளனேகம் வரப்பெற்றார். ஆதலால் 1914-ல் போஸ் நான்காம் முறை சர்க்காரால் மேனாட்டுக்கு அனுப்பப்பட்டார். இப்பொழுது தான் கண்ட உண்மைகளைச் செய்து காட்ட டாக்டர் போஸ் தான் செய்த அரிய கருவிகளையும் "தொட்டால் சிணுங்கி," "மிமோசா" என்ற இருவிதச் செடிகளையும் தன்னோடு கொண்டு சென்றார்.

இங்கிலாந்தில் முதலாவது 'ஆக்ஸ்போர்ட்,' 'கேம்பிரிட்ஜ்' சர்வகலாசாலைகளில் உரை நிகழ்த்தினார். பிறகு ராயல் சாஸ்திரக் கல்லூரியிலும், 1914 மேமீ 'ராயல் இன்ஸ்டிட்யூஷன்' என்ற சாஸ்திர சாலையிலும் தான் கொண்டு சென்ற கருவிகளால் தனது இருவித செடிகளிலுமுண்டான பலவித உணர்ச்சிக் குறிகளை விளக்கிக் காட்டினார்.



டாக்டர் போஸ் தங்கி யிருந்த இடத்திற்கு அரிய சாஸ்திர நிபுணர்கள் அறிமுகஞ் செய்ய அநேகமாய் வந்தனர். இவர்களில் ஒருவர் திடீரென்று போஸைப் பார்த்து, "தாங்கள் முதலாவது சமர்ப்பித்த ஆராய்ச்சியை வெளியிடாதபடி ஏற்பட்டதற்குக் காரணம் யார் தெரியுமா? அதற்கு நான்தான் காரணம். தாங்கள் அப்பொழுது கூறியவை ஏற்படுவது சாத்தியமல்ல வென்றும் கீழ்நாட்டு மனோபாவத் தன்மை தங்களை மயக்கி யிருக்கலா மென்றும் நினைத்தேன். தாங்கள் கூறியவை யாவும் உண்மையென இப்பொழுது மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளுகிறேன்" என்று உருக்கமாகக் கூறினார்.

ஆங்கில நாடகக் கவிஞரான பெர்னார்ட் ஷா என்பவர் காய்கறி பட்சணியா யிருந்ததால், போஸ் இக் கூட்டங்களி லொன்றில் "முட்டைக்கோஸில்" மின்சாரத்தைச் செலுத்தவும் அது நடுக்குற்றதைக் கண்டு போஸின் அரிய ஆராய்ச்சிக்கு மெச்சிய போதிலும் அக் கீரை துன்புற்றதைக் கண்டு மனச் சோர்வடைந்தாராம்.

டாக்டர் போஸ் ஆஸ்திரியா, ஜெர்மனி, பிரான்சு தேசங்களின் சர்வகலாசாலைகளால் வரவேற்கப்பட்டு, "இப் புதிய ஆராய்ச்சிகளில் கல்கத்தா எல்லா நகரங்களையும்விட வெகு தூரம் போய்விட்டது" என்று அனைவரும் புகழும்படி அரிய பேருரைகள் பெருக்கினார்.

பின்பு அமெரிக்கா சென்று பிலடேல்பியா, நியூயார்க், வாஷிங்டன், ஹார்வார்ட் முதலிய தலை நகரங்களிலுள்ள உயர்தர சாஸ்திர சங்கங்களில் ஆங்காங்குள்ள நிபுணர்கள் புகழத் தனது ஆராய்ச்சிகளை விவரித்துச் சந்தேகங்களைக் களைந்து வந்தார்.

டாக்டர் போஸ் பெரும் புகழையும், கீர்த்தியையும் தனக்கும் "எந் நாடு மிந் நாட்டிற்கில்லை யிணை யென்றதையும், பொன்னாட்டை யொத்தப் புகழ் நாடாம்" என்று தன் தாய் நாட்டுக்கு தேடிக்கொண்டு தன் மனைவியுடன் 1915-ம் ஆண்டில் இந்தியாவுக்குத் திரும்பி இலங்கையில் கொழும்பு நகரில் வந்திறங்கினார். இலங்கையிலுள்ள புத்தர் ஆலயங்களைப் பார்த்துவிட்டு, இராமேஸ்வரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி முதலிய விடங்களில் தங்கிப் பிறகு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். இவ்விடத்தில் சாதாரண மனிதர் பார்க்கும் இடங்களைப் பார்த்துவிட்டுக் கோவிலினொருபுறம் நிற்கும்போது, கோவில் பூசாரி, போஸை சுவாமி மூலஸ்தானத்திற்குள் வந்து பார்க்கும்படி வேண்டினார். அதற்கு போஸ்தான் மேனாடெங்கும் போய்த் திரிந்ததால் தான் மத வைராக்கியமுள்ள இந்து அல்லாமல் போனதால் தான் உள்வரலாகாதென இயம்பப் பூசாரி, "இல்லை, இல்லை தாங்கள்

வரலாம். நீங்கள் ஒரு சாது" என்று கூறி உள்ளே அழைத்துச் சென்றாராம். இதற்கு முன்னும் பின்னும் இந்தியாவிலுள்ள முக்கிய ஸ்தலங்களுக்கெல்லாம் சென்று வந்திருக்கிறார்.


## கடைசிச் சன்மானங்கள்

டாக்டர் போஸ் 1915-ம் வருஷம் கல்கத்தா பிரெஸிடென்ஸி கல்லூரியில் தனது தலைமைப் பதவியை விட்டுத்தானே விலக்கிக்கொண்டார். இவர் 1913-லேயே வருஷக் கணக்கு முடிவாகி விலகியிருப்பார். ஆனால் கவர்ன்மெண்டார் இன்னுமிரண்டு வருஷங்கள்வரை இருக்கும்படி வேண்டிக் கொண்டனர். வேலையை விட்டு விலகியவுடன் குறைவான உபகாரச் சம்பளத்திற்குப் பதிலாகத்தான் பெற்று வந்த முழு சம்பளத்தையுமே உபகாரச் சம்பளமாக அடைந்தார். இவ்வுரிமை கல்வி இலாகா உத்தியோகத்தில் அதுவே முதல் தடவை! பிறகு டாக்டர் போஸின் அரிய பெரிய வேலைகளுக்கு சர்க்கார் "சர்," ஸி. எஸ். ஐ. என்ற உயர்ந்த பட்டங்களைச் சன்மானமாக அளித்தனர்.

இதின் பிறகு சர். போஸ் தன் வேலை முடிந்துவிட்டது என்று இருந்துவிடவில்லை. அவர் முன்பு சாஸ்திர ஆராய்ச்சிசாலையொன்று கல்கத்தாவில் உண்டாக்க ஆவல்கொண்டாரென்றியம்பினோம். அதனை இப்பொழுது பூர்த்தி செய்ய ஆரம்பித்து 1917-ம் வருஷம் நவம்பர்மீ 30௳ தனது 59-வது வயதில் தான் வெகு நாட்களாய் ஆவல் கொண்ட ஆராய்ச்சிசாலையொன்று கட்டிச் சாஸ்திர அபிவிருத்திக்கெனத் திறந்து வைத்தார்.

1932-வருஷம் பிப்ரவரிமீ 9௳ காசி இந்து சர்வகலாசாலைபால் அதின் உதவி கர்த்தாவான பண்டித மாளவியா அவர்களின் பிரேரேபணையால் சர். ரவீந்திரநாத் தாகூர், சர். பி. ஸி. ராய், சர். ஸி. வி. ராமன் இவர்களுக்குக் கௌரவ நிபுணத்துவப் பட்டங்கள் அளித்தபோது, இந்தியாவில் முதன் முதல் மேனாட்டார் புகழ்ப்பெற்ற சர். ஜெகதீஸ் சந்திர போஸ் டி. எஸ்ஸி. (D.Sc.) என்கிற உயர்தரப் பட்டம் அளிக்கப்பெற்றார்.

இப்பொழுது சர். போஸ் கல்கத்தாவுக்குத் தெற்கே 20 மைல் தூரத்தில் கங்காநதி தீரத்தில் சிஜ்பேரியா என்றதோர் புண்ணிய ஊரில் வசித்து வருகிறார்.



சர். ஜெகதீஸ் சந்திர போஸ்.

# சி. சுப்பிரமணிய பாரதியார்.

திரு. ஸ்ரீவை எம். எஸ். ராமானுஜம் அவர்கள்.

காலமெனும் மணல் பரப்பின்மீது தம் காலடிச் சுவடுகளை நன்கு ஆழப் பதியவைத்துப் பின் வரும் சந்ததிகளுக்குச் சிறந்த வழி காட்டிகளாகவும், அருந்துணைகளாகவும் இருக்கும் மகா மேதாவிகளின் அதி உயர்ந்த திவ்விய சரித்திர நூல்கள் நம் தமிழ் நாட்டில் அதிகம் காணப்படாமை வருந்தத் தக்கதே. மேல்நாட்டார்களைப் போல் சுய சரித்திரங்களை எழுதிவைக்கும் வழக்கம் நம் முன்னோர்களிடை இல்லை. தமிழ்த் தாய் தனக்கு இயற்கையான புராதன மகிமையும் செழுமையும் குன்றி, அடிமைத் தளைகளில் கட்டுண்டு இதுபோழ்து நனி தவித்தாலும், இன்னுமவள் மலடியாகிவிடவில்லை. அன்று வள்ளுவன், கம்பன், இளங்கோவடிகள் ஆகிய இவர்களை சிருஷ்டித்துத் தந்த கைகள் இன்றும் அவ் வலிமை இழந்துவிட்டிருக்கவில்லை. இன்றும் அவள் சத்புத்திரர்களை ஈன்று எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்ற பெருமை அவளிடம் இருந்துகொண்டுதானிருக்கிறது. அன்றைய கம்பன் நேற்று நம் முன் சி. சுப்பிரமணிய பாரதியாரிடம் உறைகொண்டு விளங்கினான். கம்பனுடைய கவிதா சங்கதம் பாரதியாரிடம் உருப்பெற்று, சாக்ஷாத்காரமாகத் திகழ்ந்தது.

தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, கம்ப ராமாயணம், மகா பாரதம் ஆகிய இவைகளுக்குப் பின் தமிழ்த் தாய் ஓர் பெருந் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். மேற் புலக் கலைகளின் கூட்டுறவு ஏற்பட்ட பின்னருங்கூட 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையும் காத்துக்கொண்டிருக்க நேர்ந்துவிட்டது. தமிழ் இலக்கிய வானம் கருத்து இருளடைந்து காண்கின்றது. காளமேகங்களின் வயிற்றைப் பிளந்துகொண்டு சிரிக்கின்றது மின்னல். இப்பொழுது கீழ் வானத்தைக் கூர்ந்து நோக்குங்கள். அந்தகாரம் முன்னிலும் செறிந்து விளங்குகின்றது. ஜனங்கள் முதல் எறும்புகள் ஈறாகச் சகல ஜீவராசிகளும் துன்பம் தோன்றும் முகங்களோடு—மேகம் எப்பொழுது வில

கும் என்ற கவலையோடு கீழ் வானத்தை நோக்கிக்கொண்டு நிற்கின்றார்கள். இது ஓர் ஊழி. சிறிது நேரம் கழிந்தது. மேகம் சிறிது விலகுகிறது. ஒரு வெள்ளி புலப்படுகிறது. அதைக் கண்டதும் ஜீவராசிகளின் மனதில் நம்பிக்கை உணர்ச்சி விடிகின்றது. நல்ல காலம் பிறந்தது என்று பேரானந்தப்படுகிறார்கள். இலக்கிய வானை மூடியிருக்கும் காளமேகம் விலகிவிட்டது. ஒரு வெள்ளி பாரதியார் வடிவில் தோன்றுகிறது. தமிழ் இலக்கிய மறு மலர்ச்சி ஏற்பட்டு விட்டது.

பாரதியாரின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றிக் கூறுவது இக் கட்டுரைக்குப் புறம்பான விஷயமாகும். அவருடைய நூல்களின் அருமை பெருமைகளை நான் கண்டவாறு இங்கு எழுதுவதே இதன் நோக்கம். 'பாடியவாய் தேனூறும் பாரதியார் பாடல்களை' 'நவவீர பாரதியின் நடனத் தமிழ் நாடே' என்று கூறிவிட்டாலே அவற்றிலேயே பாரதியார் பாடல்களின் பெருமை அடங்கிவிட்டது.

உண்மைக் கவிதைகளின் அழகுகள் சொல்லாலே சொல்லுந் தரமன்று—சொல்லில் அகப்படாது. நல்ல கவிதைகளை எடுத்துக் கொண்டு "இவைதான் உண்மைக் கவிதை' என்று சொல்லித்தான் காட்டலாகும்' என்று மாதியூ ஆர்னல்டு என்ற மேற் புலக் கவியொருவர் கூறியுள்ளார். ஆனால் நமது பாரதியார் 'பண்ணிலின்பமுங் கற்பனை விந்தையும் ஊட்டி, எங்கும் உவகை பெருகிட ஓங்குமின் கவி' என்னும் வாக்கியத்தில் உண்மைக் கவிதையின் இலட்சணத்தைப் பாடியிருக்கிறார். இவ் விருவர் கூற்றுக்களையும் அளவுகோல்களாகக் கொண்டு பாரதியார் பாக்களின் உயர்வை ஒருவாறு உணர முயலலாம்.

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்தே
தோணிகளோட்டி விளையாடி வருவோம்.

மேல் காட்டிய பாட்டின் அழகு ஒப்பு உவமையற்றது. கவியுள்ளத்துள் புகுந்து அதைப் பரிசீலனை பண்ணுங்கள். ஆகா! அவர் உளமெனும் ஆகாயத்தில் வெண்ணிலாவின் தண்ணொளி பொங்கி வழிகின்றது. மானஸ நதியாகிய சிந்து நதியின் நீல நீர் பொங்கிவரும் ஒளி வெள்ளத்தைத் தன்னகத்தே கொண்டு, பாற்கடலெனத் தருக்கி இருக்கின்றது. இதினிலோர் படகு! படகில் கவியும், அவரோடுகூட சில சேரநாட்டு இளம் பெண்கள். மதி பொழியும் ஒளி அமுதம் ஓர் புறம். இவர்கள் 'சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து' ஊட்டும் செவிக்கு அமுதம் ஓர்புறம். இவ்விதமாகக் களிவிஞ்சும் இன்பக்



களியாட்டங்கள் பொங்கி வரும் வெள்ள மீது தங்கும் நுரைபோல் அங்கு சஞ்சரிக்கும் மென்காற்றின்மீது இவர்ந்து வான வெளியில் ஊர்ந்து செல்கின்றன. என்ன கருத்து! என்ன அழகு! என்ன சுவை! சின்னஞ் சிறு சொற்கள்! இயற்கை தேவியின் மின்னொளிர் மேனி இவ் வரிகளில் ஜ்வலிக்கின்றது. பாரதியார் இயற்கை யழகிலே இறையழகு கண்டார்; அருள் அழகு கண்டார். இறையே இயற்கை. இயற்கையே இறை. இவ்வொரு சிறிய பாட்டினாலேயே கவி நம் மனங்களைத் திரைகொண்டு சென்றுவிட்டார். இப் பாட்டின்பத்தில்—பண்ணழகில் நம்மையே நாம் மறந்தோம். ஆசிரியர் உளத்தோடு நம் மனமும் ஒன்றுபடுகிறது; ஒன்றுபடலும் கவியோடு நாமும் சிந்து நதி மிசை நிலவினிலே, சேர இளம்பெண்களோடு, தெலுங்கிற் பாட்டிசைத்து, இன்பப் படகுகளோட்டி விளையாடுகிறோம்.

இம்மட்டோ! பாரதியார் கண்ட கனவைச் சிறிது சிந்திப்போம். அப்பாட்டு ஆரம்பத்திலேயே கவி இன்பக் கனா கண்ட சமயத்தைச் சொல்கிறது:

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்

என்று துவக்கி கனவில் கண்டதை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

வயது பதினாறிருக்கும் இள வயது மங்கை

இவ் வரியில் கவி தான் கனவில் கண்ட மங்கையின் வயதையும் பருவத்தையும் கூறுகிறார்.

பொங்கிவரும் பெரு நிலவு போன்ற ஒளி முகமும்
புன்னகையின் புது நிலவும் போற்றவருந் தோற்றம்

வானக் கடலிலே யோர் வெள்ளி ஓடம்—சந்திரன் செல்கின்றது. இது அழகு தெய்வத்தின் திருமுகம். இத் திருமுகத்தில் முத்தொளிர் இள முறுவல் தோன்றுகிறது. இது புது நிலவு—பொங்கி வரும் புது நிலவு. புது நிலவின் இரஸ்மிகள் நம் மனதுள் புகுந்து நம்மைக் களிப்பிக்கின்றது. ஆ! என்ன அழகு! என்ன உவமை! முதலில் கவி தான் கண்ட திருமுகத்தைப் 'பொங்கி வரும் பெரு நிலவு' என்று கூறினார். பின் அப் 'பெரு நிலவு' நிகர்த்த முகத்திலோர் புதிய ஒளி—புது நிலவு—புஞ்சிரிப்பு இலங்கக் காண்கிறார். 'பெரு நில'விடைப் 'புது நிலவு' ஒளிர்கின்ற தென்றால், அதற்கு மேல் என்ன சொல்வது! அழகிய கவிதை! இந்தப் பாட்டைப் பயிலுங்கால் நம் கண்கள் முன்பு ஆகா! அதோ! அதோ! அழகுத் தெய்வம்! திரு மகள்! அவள் முகம் பெரு நிலவு பொழிகின்றது! அடடா! என்ன அழகு! இதோ! அவள் முகத்தைப் பாருங்கள்! அதோ புஞ்

சிரிப்பு—புது நிலா. இவை யாவும் நமக்குக் கவி சலனப்படக் காட்சியில் காட்டிவிடுகின்ருரன்ருே? ஆகா! உலகிலுள்ள அழகுக ளெல்லாம்—இன்பங்களெல்லாம்—செல்வங்களெல்லாம் அன்ருே இப் பாட்டாக சமைந்துள்ளன? இன்னும் கவியின் சுவையைக் கவனியுங்கள்! மங்கையின் வடிவம் மின்னற் கொடி போன்றது. வந்து தூங்காதே என்று தட்டி எழுப்ப, உடனே விழித்துவிட்டார். இதனைக் கவி,

துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தேன்னைப் பாரென்று சொன்ஞள்
அங்கதனிற் கண் விழித்தேன்

என்று பாடியிருக்கிருர் தூக்கமெனுங் கருந் திரை விலகிவிட்டது. விழித்ததும் கவியின் கண்களின் திருஷ்டி ஓர் பொருளைத் தாக்கு கின்றது. அன்னதொரு பார்வையிலே தன்வய மிழந்தார். என் னும் கண்டிராத ஓர் உருவைக் காண்கிருர். அழகெனும் தெய்வம் அதுவேதான் என்று அறிந்துகொண்டார். இதனை மேல் வரும் வரிகளில் பரக்கக் காணலாம்.

அடடா வோ! அடடா அழகேன்னுந் தெய்வந்தான்
அதுவென்றே யறிந்தேன்

அடடா! என்ன அழகடா இதில் இசை எழும்பி வழிகின்றது! நாமும் இன்பக் கனு காண்கின்ருேம். அழகு தெய்வத்தை நாம் முக முகமாகச் சந்திக்கிருேம். பாரதியார் கண்டவை யாவும் நம் மனமெனும் அரங்கினில் ஆனந்த நடம் புரிகின்றன. யாவும் நிழல் போல வந்து—நிழல்போலவே நிஷ்கிரமித்து விடுகின்றன. இதுவே பாரதியார் பாடல்களின் சிறப்பியல்பு. பாரதியார் எய்திய உவகை நாமும் அடைகின்ருேம். அழகு தெய்வத்தைப் போன்றே இப் பாட்டும் அழகியதாக இருக்கின்றது. இப் பாட்டில் அழகு தெய்வம் ஆனந்தத் தாண்டவம் இடுகின்ருள். ஆம்! இதன் அழகிற்கும் ஓர் எல்லையுண்டோ? ஒவ்வொரு வார்த்தையிலும் உண்மை 'உயிரொலி' ஒலிக்கின்றது. இதுவன்ருே உண்மைக் கவிதை! நிற்க, இனி பாரதியாரின் ஆயும் ஆற்றலை ஒரு சிறிது நோக்குவாம்.

எப் பொருள் எத் தன்மைத்(து) ஆயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப(து) அறிவு

எப் பொருளைக் கண்டவிடத்தும், அதன் மேல் பகட்டைக் கண்டு மயங்கிவிடாது, அதன் உண்மைப் பொருளைக் கண்டு அறிவதே அறிவு என்பது தமிழ் வேதம். ஆகவே ஒரு நூலையோ மற்று எதையுமோ ஆராயுங் காலத்து நாம் நடு நிலையினின்று ஆராயவேண் டும். 'காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட் கண் ஆய்தல் அறி



வுடையார் கண்ணதே'. விருப்பு வெறுப்பு இன்றி நூலாராய்ச்சி செய்வதே ஆராய்ச்சி முறையாகும். ஏன்? விருப்பால் குற்றம் தோன்றுவதில்லை; வெறுப்பால் குணம் தோன்றுவதில்லை. 'அறி வுப் பெருங் கடல் கரை காணமுடியாத கடலாகும். அது நம்து கண்ணிற் கெட்டிய தூரம் வரை அலைமேல் அலை எறிகின்றது. நாம் அக் கரையில் நின்றுகொண்டு, அலைகள் கொழிக்கும் கிளிஞ்சல், சோவி முதலியவற்றைப் பொருக்கி எடுத்து விளையாடும் சிறு குழந்தைகள்போ லாவோம். மெய் யறிவென்னும் கரையிறந்த கடலினைக் கடந்து, அறிவெனுந் தீவை யடைவதற்குப் பல வழிகள் உண்டு. இவற்றில். நூலாராய்ச்சி சிறந்த முறைமையில் மேற் கூறிய வாறு நடைபெறுமேல் ஓர் சீரிய வழி என்று கொள்ளற்குத் தடை யொன்றுமில்லை.' பார்ப்போரின் கண்ணையும், கேட்போரின் காதையும், சொல்லெழும் வாயையும் குண குணம் விசாரிப்போன்—ஆராய் வோன் செம்மை செய்கின்ருன். அவனே (நம் மனமெனும்) 'வண் கழனி நற் பயிர் செய் நல்லுழவன்'. ஆக்குந் திறனிற்கு அடிப் படையாக அமைந்து கிடப்பது ஆயுந் திறன். ஆயுந் திறனெனும் சேற்ற விடத்தில் ஆக்கும் திறனெனும் செழுந் தாமரை முளைக்கிறது. எனவே எதொன்றும் ஆக்குவதற்கும் குண குண விசாரம் அவசியம் என்பது வெள்ளிடை மலை.

பாரதியாரிடம் இத்தகைய குணம் உறைகொண்டிருந்ததா வென் பதைச் சிறிது பார்ப்போம்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகார மென்ருேர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு.

இப் பாட்டு ஒன்றே போதும் பாரதியாரின் ஆயுந் திறனை நமக்கு உணர்த்த. மேலைப் பாட்டின் பொருளைச் சிறிது கூர்ந்து காணுங்கள். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு. தெய்வப் புலமை திருவள்ளுவநாயனரை உலகிலுள்ள யாவருக் கும் பொதுவுடைமை யாக்கினர். அதன் ஈற்றிரண்டு அடிகளை கவனி யுங்கள். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மென்ருேர் மணி யாரம் படைத்த தமிழ்நாடு. இளங்கோவடிகள் செய்து தந்த நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் என்ருேர் மணியை தமிழ் நாட்டிற்கு மட்டி லுமே உரிமைப்படுத்தினர். ஏன்? வள்ளுவர் செய் திருக்குறளை உலகிலுள்ள யாவரும் இன்று ஆதரித்து வருவதே இக் கூற்றை வலியுறுத்தும். ஆங்கிலம் குஜராத்தி முதலிய வேறு பாஷைகளில் குறள் மொழிபெயர்க்கப்பட்டிருத்தலை நோக்குழி அதன் பெருமை புலனுகும். சிற்றளவில் இக் குறள் ஒன்றைத் தவிர வேறு ஒரு

னூலும் அறம், பொருள், இன்பம் என்பவற்றைப் பற்றி அவ்வளவு தெளிவாகவும் சவிஸ்தாரமாகவும் உரைக்கவில்லை. இது யாவரும் ஒப்பக்கொண்டிருக்கும் அபிப்பிராயம். அன்று சாணக்கியன் செய்து வைத்த அர்த்த சாஸ்திரத்தையும்-பொருள் நூலையும் குறள் தன்னகத்தே கொண்டுள்ளது. குறளின் அரும் பெரும் நயத்தைக் கூறப் போந்த ஔவை,

'அணுவைத் துளைத்(து) ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

என்று கூறிவிட்டிருக்கின்றார். அதன் பெருமை பெரிது! மிகப் பெரிது! சொல்லளவில் அடங்கிவிடக் கூடியதன்று. இத்தகைய பெருமை வாய்ந்த குறளுக்கு பாரதியார் முதலிடம் கொடுத்து 'உலக நூல்' என்று கூறியதும் மிகப் பொருத்தமுடைத்தே யன்றோ? சிலப்பதிகாரத்தையும் குறளையும் ஒப்பிட்டு குணதுண விசாரணை பண்ணினால் குறளே மற்றதினும் விழுப்பம் சான்றது-உயரியது என்பது குன்றின்மேலிட்ட விளக்கம். எனவே மேலைப் பாட்டில் பாரதியாரின் கவிதா சந்தத்தோடு ஆயுந் திறனும் பொங்கி வழிவது காண்க.

மற்றுமோர் விஷயம். பாரதியார் சில நண்பர்களோடு இருந்த பொழுது, ஒரு சமயம் பாரதியார் கம்பராமாயணச் செய்யுள்களைப் படித்துக்கொண்டே சென்றார். ஓரிடம் வந்ததும் பாரதியார் சிறிது முகம் சுளித்தார். அப்பொழுது 'இவ்விடத்தி லெல்லாம் கம்பனை நான் போற்றமாட்டேன். ஏதோ மனிதர்களுக்கு எட்டாத ஏழாவது உலகத்தி லிருந்துகொண்டு கவிகளை வர்ஷிக்கின்றான். இதி லெல்லாம் அவன் தன் கவி வரையும் சாமர்த்தியத்தைக் காட்டுகிறானே ஒழிய மனித சுபாவத்தை அறிந்தானில்லை' என்று சொல்லி விட்டு எழுதுகோல் ஒன்றால் ஒரு பத்துச் செய்யுள்களை அடித்து விட்டார். என்ன ஆயுந் தன்மை! வெகு அழகாக கவிதா சந்தத்தோடு கூடிக் கமழ்கின்றது! அழகு! அழகு!

அழகொழுகும் பாரதியார் பாடல்களைப் பாடும்போது ஏதோ ஓர் பொற் பறவை வானில் தலைக்கு நேராக சிறகுகளை விரித்துக் கொண்டு பாடுவது போன்றிருக்கின்றது. அவை மலையினின்று இழியும் அருவியைப் போன்று நேர்மையுடையன! இங்ஙனமாக நம் கையளாவியது யாவும் பாரதியார் கவியளாவியுள்ளது! கண்கள் கண்டவை யெல்லாம் பாரதியார் கானம் கொண்டுள்ளது. இவரது பாடல்கள் வற்றி யுலர்ந்த தோலுக்கு உயிரூட்டும்; பாலையைச் சுடர்ப் பசும் சோலையாகத் திகழச் செய்யும். 'தெய்வீக நறுமணம் வீசும் இத் தீஞ் சொற்கவிதையஞ் சோலைதனில்' இப் பாமலர்களைச் சூடி 'மது தேக்கி நடித்திடுவோம்' நாம்.

'இன்னிசை யாமின்பக் கடலில்—எழுந்
தெற்றும் அலைத்திரள் வெள்ளந்
தன்னிடை மூழ்கித் திளைத்திடுவோம்.'

---

# ஹரிஜனங்களும் பாடப் புஸ்தகங்களும்.

திரு. R. S. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A.

ஹரிஜன முன்னேற்றத்தைக் குறித்துப் பாடு படுபவர் இக்காலத்தில் அநேகர் இருக்கின்றனர். ஹரிஜனங்களுக்கு ஹிந்து சமூகத்தில் மற்றவர்களுக்குச் சமமான உரிமைகள் கொடுக்க வேண்டு மென்றும், பொதுப் பாதைகள், கிணறுகள், பாடசாலைகள் முதலான பொது நலங்களில் அவர்களுக்கும் பூரண சுதந்திரம் ஏற்பட வேண்டுமென்றும் அவர்களை ஒதுக்கி வைத்த மகா பாபத்துக்காக ஜாதி ஹிந்துக்கள் பச்சாத்தாபத்தைத் தெரிவித்து அவர்களையும் தங்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டு மென்றும் ஆலயப்பிரவேச உரிமையையும் அளிக்க வேண்டுமென்றும் பெரு முயற்சிகள் செய்வது போற்றத் தகுந்ததே யாகும்.

அதுவும் அவர்களுடைய பொருளாதார நிலைமையைச் சீர்திருத்தவும், அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவும் செய்யப்படும் முயற்சிகள் பலப் பல. கல்வி கற்பிக்க அவர்களுக்கென்று இராப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அவர்களைப் பள்ளிக்கூடங்களிற் படிக்க வைக்கப் பணம் சேகரிக்கப்படுகின்றது. இன்னும் பலவிதமான முயற்சிகளும் செய்யப்படுகின்றன.

இப்பொழுது அவர்களுக்குக் கல்வி பயில்விக்கும் விஷயமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜனங்கள் என்று ஒரு சிலர் (ஏன், பலர்) இருக்கிறார்களென்ற ஒரு எண்ணமே பெரும்பாலார்க்குக் கொஞ்ச காலத்துக்கு முன்பு இருந்ததில்லை; ஆம், அவர்களைக் கண்டால் விலகிப் போகும்

படி சொல்வதற்கும், அவர்களால் வேலை வாங்கிக்கொள்வதற்கும் வேண்டுமென்றால் ஹரிஜனங்களைப் பற்றி நினைத்துத் தீரவேண்டியிருந்தது. வாழ்க்கையில் இப்படியானால் அதன் ஒரு சிறு பாகத்தை மட்டும் எடுத்துக் காட்டும் நூல்களில் அவர்களைப்பற்றிய விஷயங்கள் இதைவிடக் குறைவாகவே இருக்கின்றன. அப்படி ஏதாவது இருந்த போதிலும் அவர்களைப்பற்றிக் கேவலமாகவும் மற்ற ஜாதியாரைப் பற்றி உயர்வாகவுமே சொல்லியிருக்கின்றதே தவிர வேறொன்றுமில்லை.

இப்பொழுது ஹரிஜனங்களுக்குக் கல்வி புகட்டுவதென்றால் இப்பேர்ப்பட்ட நூல்களெல்லாம் உதவா. இவைகளால் ஹரிஜனங்களுடைய மனதில் முன்னேற்ற அபிப்பிராயங்கள் உண்டாவது கஷ்டம். இவைகளையெல்லாம் முற்றிலும் தள்ளிவிட வேண்டுமென்று நான் சொல்ல முன் வரவில்லை. ஆனால் முன்னேற்றக் கொள்கைகளையும் சமத்துவத்தையும் புகட்டும்படியான பழைய நூல்களைப் பிரித்தெடுத்தும் புதிய நூல்களை எழுதியும் அவைகளை முதன் முதலில் புகட்ட வேண்டும். மனம் முதிர்ந்த பிறகு 'பழைய காலத்து மரபுகள்' என்று ஜாதி ஏற்றத்தாழ்வுகளைக் காட்டும் நூல்களை அவர்களாகவே படித்துக்கொள்ளும்படி விட்டுவிட வேண்டும் அல்லது அவர்களாகக் கேட்டால் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

தற்சமயம் இருக்கும் பாடப் புஸ்தகங்களிலோ அவர்களைப்பற்றிய விஷயங்கள் போதுமானவைகளாகக் காணோம். ஆதலால் அவர்களுக்கு ஏற்றவாறு கல்வி பயில்விப்பதில் கஷ்டம் அதிகமாகவே இருக்கிறது.

உதாரணமாக சில ஹரிஜனப் பிள்ளைகளை யழைத்து, அவர்களுக்குக் கல்வி பயில்விக்க வேண்டுமென்று வைத்துக்கொள்ளுவோம். எழுத்துக்களையும் எண்களையும் கற்பித்த பிறகு பார்த்தால், மற்ற எல்லா விஷயங்களும் அவர்களுடைய வாழ்வுக்குப் புறம்பாகவே இருக்கின்றன. சில விஷயங்களோவென்றால், அவர்களைப் பரியாசம் செய்ய வேண்டுமென்று எழுதியிருந்தால்கூட இவ்வளவு கேவலமாக இராது போலத் தோன்றுகிறது. உதாரணமாகக் கீழ்க்கண்ட பாடத்தின் பகுதியை எடுத்துக்கொள்ளுவோம். தாய் தந்தையரிடம் பக்தியுடனிருக்க வேண்டுமென்று வற்புறுத்தும்போது வேறு பல விஷயங்களுடன் அடியிற் கண்டவைகளும் குழந்தைகளின் மனக் கண்ணின் முன் பாக வைக்கப்படுகின்றன.

அவள் (என் தாய்) நான் சந்தோஷமாகத் தூங்குவதற்கு எனக்குப் பட்டு மெத்தை தைத்துப் போட்டாள். நான் கேட்ட பொருள்களையும் பொம்மைகளையும் எனக்கு வாங்கிக் கொடுத்தாள்......விதம்



விதமான நகைகளையும் உடைகளையும் எனக்கு இட்டு மனம் சந்தோஷித்தாள். ('தாய் தந்தையர்'' என்ற பாடம், "கோபால்'' பாடப் புஸ்தகம்.) பட்டு மெத்தைகளும், பொம்மைகளும், விதம் விதமான நகைகளும் உடைகளும் ஹரிஜனக் குழந்தைகளுக்கு ஏது?

நான் சில பிள்ளைகளுக்கு இந்தப் பாடத்தை நடத்திய தினம், ஒருவனை 'நீ ஏன் நேற்று வரவில்லை?' என்று கேட்டதற்கு, "நேற்று என் தகப்பன் கள்ளைக் குடித்துவிட்டு, என் அம்மாவையும் என்னையும் அடித்துத் துரத்திவிட்டார். நேற்று முழுவதும் சோறுமில்லை, ஒன்றுமில்லை'' என்று மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டான். ஆகையால் மேற்கண்ட அரும் பொருள்களைக் கொடுத்துதவும் பெற்றோர்களிடம் பக்தி செலுத்த வேண்டுமென்றால், ஹரிஜனப் பிள்ளைகளுக்கு அத்தகைய நன்மைகள் ஏற்படுவதில்லை. ஹரிஜனப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள்மேல் தங்களுக்குள்ள அன்பை வேறு விதத்தில் காட்டுகிறார்கள். அதெப்படி என்று கண்டுகொண்டு அதை வர்ணித்தால்தான் பெற்றோரிடம் பக்தி செலுத்தவேண்டிய கடமை பிள்ளைகளுக்குப் புலப்படும்.

ஆகையால் 'பாடப் புஸ்தகங்களை ஹரிஜனப் பிள்ளைகளும் படிப்பார்கள்' என்ற விஷயத்தை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு புதிய பாடப் புஸ்தகங்களை எழுதிப் பிரசுரிக்க வேண்டியது கல்வி இலாகாவில் வேலைசெய்து வருபவர்களுடைய முதற் கடமையாகும். இப்படிப்பட்ட புஸ்தகங்களை எழுதுபவர்கள் ஹரிஜன முன்னேற்றத்தில் விசேஷப் பற்றுடையவர்களாகவும், அவர்களுடைய உள் வாழ்க்கையை முற்றிலும் உணர்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

சாதாரணமாக சுத்தமாய் இருக்கக்கூடிய வழிகள், கள்ளுண்ணாமை, விடாமுயற்சி, தன்னைக்காட்டிலும் எளியவருக்கு உதவிசெய்யும் மனப்பான்மை, முன்னுக்கு வரவேண்டுமென்ற தீவிரமான எண்ணம் ஆகிய இவைகளைப் புகட்டும் புஸ்தகங்களும், சிறுபதவியிலிருந்து முன்னுக்கு வந்த பலருடைய சரித்திரங்களும் எழுதிப் பிரசுரிப்பது முக்கியமானதாகும்.

ஜாதி ஹிந்துக்களுக்குள்ளும் ஹரிஜனங்களைச் சகோதரர்களாகப் பாவிக்கும் மனப்பான்மையை யுண்டாக்குவதற்காக சிறு குழந்தைகள் படிக்கும் புஸ்தகங்களிலும் இந்த விஷயத்தைப் புகட்டும் பாடங்கள் அடங்கியிருக்க வேண்டும். ஹரிஜன வாழ்க்கையில் சிறந்த குணங்களுக்கு உதாரணங்கள் பல இருக்கின்றன என்பதைக் காட்டும் சிறு கதைகளும் அப் புஸ்தகங்களில் இருக்க வேண்டும்.

# சந்திக்குந் தருணம் எப்பொழுது?

திரு. S. வேங்கடநாராயண சர்மா அவர்கள், B.A., B.L.

வாஸவதத்தையின் அழகு பூரண சந்திரனைக் காட்டிலும் பரிபூர்ணமாயிருந்தது. அவளுடைய சரீரம் மெல்லிய தாமரை மலரைக்காட்டிலும் மிருதுவாயிருந்தது. அவளது இனிமையான குரல் வீணையையும் தோற்கடிக்கக் கூடியதாயிருந்தது. நாணம் நிறைந்த அவளது மருண்ட கண்கள் மானையே வெட்கப்படச் செய்தன. தேவலோகத்துச் சௌந்தரியமே ஒருங்கு திரண்டு ஒருருக் கொண்டாற்போல் காணப்பட்டது. உலகத்தையே மயக்கிடச் செய்யும் இந்தச் சோதியை—இந்த அழகின் குவியலைப் படைத்த பிரம்மன் அவளை விலைமகளாகப் பிறப்பித்தது தகுமோ?

---

அதாவது குழந்தைகள் வாசிக்கும் புஸ்தகங்களில் வாழ்க்கையின் உண்மைகளையும் கொள்கைகளையும் தழுவின பாடங்கள்தானிருக்க வேண்டும். ஹரிஜனங்கள், ஜாதி ஹிந்துக்கள் எல்லாருடைய குழந்தைகளும் வாசிக்கும் புஸ்தகங்களில் முன்னேற்ற இயக்கத்தின் எல்லா அம்சங்களும் ஒன்று விடாமல் வரவேண்டும். இப்படிச் சிறு வயது முதல் சகோதர பாவத்தை வளர்த்தினால் நாளடைவில் தீண்டாமையின் மனப்பான்மைக்கு ஜனங்களுடைய மனத்தில் இடமே இல்லாதொழியும்.

ஹரிஜனங்களுக்குப் பூரண உரிமை கொடுப்பதாலும் அவர்களுக்கு விசேஷக் கல்வி பயில்விப்பதாலும் கல்வி பயில்விப்பதில் இப்பொழுதிருக்கும் பல கஷ்டங்கள் நீங்குமாயினும், 'அவர்களைப் போன்ற எளியவர்களுக்காகவும் எழுதப்பட்டன' என்று சொல்லக் கூடிய புஸ்தகங்கள்தான் இப்பொழுது மிகவும் அவசியமாயிருக்கின்றன.

ஆகையால் மேற்கண்ட விஷயங்களைத் தீர யோசித்து, அனுபவம் வாய்ந்தவர்கள் பொருத்தமுள்ள பாடப் புஸ்தகங்களை எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

---



ஆனால் நாம் என்ன அறிவோம்? சேற்றில் செந்தாமரையையும், முட்களில் மெல்லிய ரோஜாவையும் படைத்த அவனே அதன் காரணத்தை அறிவான்.

அன்றையதினம் இளவேனிற் காலத்துச் சோலை பொருந்திய உஷாகாலத்தில் மெல்லிய தென்றல் குயிலின் இன்னிசையைத் தன் துணைவனாகக் கொண்டு மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. அச் சமயம் ஒரு களைப்படைந்த பௌத்த சந்நியாசி வாஸவதத்தையின் விசாலமான மாளிகைக்கு முன் பிச்சை கேட்கும்பொருட்டு வந்து நின்றான். திடீரென்று வாஸவதத்தையின் பார்வை அப் பௌத்த சந்நியாசியின் மேல் விழுந்தது. அவள் ஒருமுறை அவனை நோக்கினாள். நூறு முறை பார்த்தாள். பார்த்துக்கொண்டே நின்றுவிட்டாள்.

அவனுடைய பெயர் உபகுப்தன். உலகத்தோரின் பார்வையில் அவன் ஒரு பிச்சைக்காரனாகவே தென்பட்டான். ஆனால் கடவுளின் பார்வையிலோ அவன் அரசர்களுக்கெல்லாம் அரசனாயிருந்தான். மனதைக் காட்டிலும் சிறந்ததும் பரந்ததுமான வேறு ஒரு ராஜ்யமும் உண்டோ? உபகுப்தன் அந்த மனதாகிய ராஜ்யத்தையே வென்றுவிட்டான் எனின் அவனே ராஜ ராஜன் என்பதில் என்ன ஐயம்! அவனுடைய ஐம்புலன்களே அவனது பிரஜைகள். உலகத்தில் சஞ்சலத்தையும் சாந்தமின்மையையும் அவன் நன்றாக அறிந்திருந்தான். ஆனால் அவனுடைய கண்களோ கொஞ்சமேனும் சஞ்சலமில்லாமலும் சாந்தமாகவும் இருந்தன. அவனது முக மண்டலம் ஒரு தைவீக ஒளியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அவனுடைய காவியுடை அவனுக்கு மிகவும் பொருத்தமுள்ளதாய் அழகிய ஒளியை வீசிக்கொண்டிருந்தது.

உலகத்தையே சௌந்தரியத்தினால் தோற்கடிக்கும் வாஸவதத்தை இந்தக் கேவலம் ஒரு சந்நியாசியின் முன் தானாகவே தோற்றுப்போய் விட்டாள். அவனுடைய அழகில் மூழ்கி ஈடுபட்டுவிட்டாள். அவளுடைய அழகிய முன்றானை தோளினின்றும் தானாகவே நழுவிவிட்டது. அவளது கார்மேகம்போன்ற இருண்ட கூந்தல் தானாகவே தளர்ந்தது. அதில் வைத்து முடியப்பெற்றிருந்த புட்பங்கள் கீழே விழுந்து சிதறிப்போயின.

வாஸவதத்தை அன்னத்தைப்போல் மெல்லிய நடை நடந்து உபகுப்தன் அருகில் நின்றுகொண்டு, "ஓ யாசிப்பவனே! உன் பிச்சைப் பாத்திரத்தை நீட்டு" என்று தனது இனிய குரலோடு சொன்னாள். உபகுப்தனும் தன் பிச்சைப் பாத்திரத்தை நீட்ட, அவளது கைகளில் ஒன்றுமில்லாமையைக் கண்டு ஆச்சரியங்கொண்டு, "ஆனால்

உனது கைகள் காலியாக இருக்கின்றனவே! நீ என்ன கொடுக்கமுடியும்" என்று பணிவோடு கேட்டான்.

வாஸ:—இவ்வுலகின்கண் உனக்கு இதுவரை யாரிடமிருந்தும் கிடைக்காததும், இதுவரை யான் எனது கரங்களால் யாருக்கும் அளித்திராததுமான ஓர் அபூர்வ வஸ்துவை உனக்கு இப்போது அளிக்கப் போகிறேன்.

உப:—நீ சொல்லுவதின் பொருள்?

வாஸ:—ஏ சந்நியாசி! இக் கரங்கள் வெறுங் கரங்கள் அல்ல!

உப:—நீ அணிந்திருக்கும் தங்க நகைகளால் எனக்கு யாது பயன்?

வாஸ:—நான் இத் தங்க நகைகளைப் பற்றிச் சொல்லவில்லை. ஏ! அறிவில்லாச் சிறுவனே! இக் கைகளை வெறுங் கைகள் என்று நினைக்கிறாய்! இவைகள் அன்பெனும் ஆலிங்கனத்தால் நிறைந்திருக்கின்றன. நான் இவ்வரிய ஆலிங்கனத்தை உனக்குத் தானமாக அளிக்கிறேன் ஓ சந்நியாசியே! சற்று யோசித்துப் பார். எந்த வாஸவதத்தையின் நிழலையாவது தொட்டுச் சுகம் அடையும் பாக்கியத்தைக்கூட அடையப்பெறாமல் ராஜராஜேஸ்வரர்களும் தவிக்கின்றார்களோ, அந்த வாஸவதத்தை தன் மெல்லிய கரங்களால் உனக்கு அன்பு நிறைந்த ஆலிங்கனத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கிறாள்.

உபகுப்தனது முகம் சிறிதளவேனும் மாறுபட்டிலது. வாஸவதத்தை மறுபடியும் சொன்னாள். "நீ உன் பிச்சைப் பாத்திரத்தை நீட்டு. அதில் என் இருதயத்தையே அர்ப்பணம் செய்கிறேன்."

உப:—இன்னும் இதனுடைய பொருள் எனக்கு விளங்கவில்லையே!

வாஸ:—உனது இம் மெல்லிய சரீரம் பிச்சை எடுத்துத் திரிவதற்காக ஏற்பட்டதல்ல. இந்த உன் இணையற்ற அழகு காட்டு மலரைப் போல் மலர்ந்து காட்டிலேயே வாடி உதிர்வதற்காக ஏற்பட்டதல்ல. ஏ பிக்ஷு! என் இல்லத்துக்குள் வருவாயாக! நான் இவ்வுலகத்திற்கே எஜமானியாக இருக்கிறேன். ஆனால் உனக்கு அடிமையாகச் சித்தமாயிருக்கிறேன்" என்றாள்.

உலக சுகங்களில் சிறிதும் ஈடுபட்டிராத உபகுப்தனது முகமண்டலத்தில் ஒரு மெல்லிய புன்சிரிப்புத் தளிர்த்தது. அவன்



மௌனமாகவே நின்றான். மிகவும் கவலையுற்ற வாஸவதத்தை மறுபடியும் "பதில் அளிக்காமல் வாளா யிருக்கின்றாயே! சீக்கிரம் சொல்" என்றாள்.

அதற்கு உபகுப்தன் "அநேக காரணங்களை முன்னிட்டு இப்போது நேரமில்லை" என்றான்.

வாஸ:—ஆனால் எப்போது?

உப:—இன்னும் சில நாட்கள் சென்றபின் வருவேன்.

இதைக் கேட்ட வாஸவதத்தை சிந்தையில் ஆழ்ந்தாள். 'இன்னும் சில நாட்கள் கழித்து வருவானாம். ஸ்திரீயின் சௌந்தர்யத்திற்கும் இப்படிப்பட்ட அவமானமோ? ஓர் சாதாரணப் பிச்சைக்காரன் எனது ஒப்புயர்வற்ற அழகையே திரஸ்கரித்துச் சென்றுவிட்டான்; இருக்கட்டும் பார்க்கிறேன். அந் நாள்வரை காத்திருப்பேன்.'

உபகுப்தன் வனத்தை நோக்கி வேகமாக நடந்தான்.

வாசவதத்தை சுவர்ண விக்ரகம் போன்று அவ்விடத்திலேயே அசைவற்று நின்று உபகுப்தன் சென்ற திசையை நோக்கிப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

## 2

தனது சிறிய வாழ்வின் பெருமையைக் காட்டிவிட்டு சந்தியா காலம் வெகு வேகமாகக் கடந்து சென்றது. சரத்காலத்து நிர்மலமான ஆகாயத்தில் கிழக்குத் திசையில் சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களைப் பூமின் மேல் பரப்பிக்கொண்டிருந்தான். ஓர் மரங்களடர்ந்த காட்டின் ஓரமாக கங்காநதி கலகல வென்று சத்தம் செய்துகொண்டு ஓடிக்கொண்டிருந்தது. பகல் முழுதும் கிடைத்த பிச்சையைக் கையில் வைத்துக்கொண்டு உபகுப்தன் இவ் வனத்தின் வழியாகத் தன் மடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அச் சமயம் ஓர் சிங்கம் (அக் கொடிய மிருகத்திற்குக், கருணையே அவதாரம் எடுத்தாற் போன்ற புத்தபகவானுடைய உபதேசங்கள் சிறிதும் பயன்படாமற் போயின. அதன் கொடிய இயற்கை சிறிதும் மாறிலது.) உபகுப்தன் வருவதைப் பார்த்து வெகு வேகத்தோடு அவன் மேல் பாய்வதற்குச் சித்தமாயிருந்தது. ஆனால் அச் சந்நியாசியோ, அதைப் பார்த்துத் தானும் தயாராயிருப்பதற்கு அறிகுறியே போல் தலைவணங்கி எதிரே நின்றான்.

ஓர்புறம் சிங்கம் உபகுப்தனைச் சாப்பிடத் தயாராயிருக்கிறது. மறுபுறம் உபகுப்தன் சிங்கத்திற்கு உணவாகத் தயாராயிருக்கிறான்.

பக்கத்திலேயே ஓர் அடர்ந்த புதர் இருந்தது. அப் புதரின் நடுவே ஓர் துவாரம் இருந்தது. வசந்த காலம் தன் இளந் தளிர்களால் அத் துவாரத்தை மறைக்க எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டும் அது பயன்படாமலேயே போயிற்று. அத் துவாரத்தின் வழியாக உள்ளே மறைந்திருந்த வேடன் இப் பயங்கரமான காட்சியைப் பார்த்துவிட்டான்.

சிங்கம் உபகுப்தன்மேல் பாய ஆரம்பித்ததோ இல்லையோ வேடன் வில்லில் நாணேற்றி, புதரைத் துளைத்துச் செல்லும்படி ஓர் அம்பு எய்தான். சிங்கம் தரையின்மேல் புரள ஆரம்பித்தது.

உபகுப்தன் திடுக்கிட்டு நாற்புறமும் நோக்கினான். நாம் கொண்ட காரியத்தில் சித்தியை அடைந்தோம் என்ற உவகை கொண்ட வேடனும் உபகுப்தன் அருகுவந்தனன். உபகுப்தன் ஆற்றொணாத் துயர்கொண்டு வேடனைப் பார்த்து, "ஐயோ! என்ன செய்துவிட்டாய்! சிங்கம் உனக்கு என்ன தீமையை விளைத்தது? ஒரு காரணமுமில்லாமல் நிரபராதியான சிங்கத்தை ஏன் கொலை செய்தாய்?" என்று கேட்டான்.

"சிங்கமாவது! நிரபராதியாவது!" என்று மனத்தினூடே சிந்திக்கத் தொடங்கினான் வேடன். தன் வாழ்நாள் முழுதிலும் கருணை என்னும் பொருளையே அறிந்திராத வேடன் இன்று முதல் முறை கருணாதேவியின் தரிசனத்தைப் பெற்றான். அவன் சுவற்றில் எழுதிய சித்திரம்போல் சிறிது நேரம் அசைவற்று நின்றான். அச் சமயம் உபகுப்தனும் கருணை நிரம்பிய பார்வையோடு வேடனை நோக்கினான். இருவர் கண்களும் சந்தித்தன. இச் சிறிது நேரத்திற்குள் ஓர் இருதயம் மற்ற இருதயத்தை நன்கு அறிந்துகொண்டது.

வேடனது கரங்கள் அசைந்தன. அவன் தன் தோளின்மேல் கட்டியிருந்த அம்பறாத்தூணியை அவிழ்த்துக் கங்கா நதியின் பிரவாகத்தில் வீசியெறிந்தான். வேடனது இரக்கமின்மை கங்கா நதியில் மூழ்கி இறந்தது. பின்பு தன் வலிமை பொருந்திய கரங்களால் அந்த வில்லை இரண்டு துண்டுகளாக முறித்துக் கீழே போட்டான். இதுவே வேடனது இரக்கமற்ற வாழ்வின் உத்தரக்கிரியை. பிறகு வேடன் பௌத்த சந்நியாசியின் பாதங்களில் நெடிய வீழ்ந்தான். "ஏ தேவனே! இதுவே எனது கடைசிக் கொலை" என்றான். உபகுப்தன் முகமலர்ச்சியோடு அவ் வேடனுக்கு ஆசி கூறினான். வேடனும் ஓர் புதிய பிறப்பு எடுத்தவனாய் அங்கிருந்து சென்றான். அது முதல் கருணையே அவனுடைய ஜீவனத்திற்கு வழிகாட்டியாயிற்று.



கருணையே உருவெடுத்த உபகுப்தன் தரையின்மேல் கிடந்த சிங்கத்தை உற்று நோக்கினான். அதனுடைய மார்பில் அப்பு மிகவும் ஆழமாக ஊடுருவியிருந்தது. அப் புத்த சந்நியாசி மிகுந்த பிரயாசையோடு அச் சிங்கத்தை நதிக் கரையில் கொணர்ந்து அதன் காயத்தைக் கழுவ ஆரம்பித்தான்.

கங்கா நதியின் தெள்ளிய தண்ணீரில் பத்துத் திசைகளிலும் அமுர்த மாரி பொழிவதுபோலும் இன்னிசையை வாரி இறைத்துக்கொண்டே ஓர் படகு போய்க்கொண்டிருந்தது. சரத் காலத்துச் சந்திரிகை தன் குளிர்ந்த கிரணங்களோடு நிலவை வீசிக்கொண்டிருந்தது. கங்கா நதியும் அதன் அருகு சார்ந்த கானகமும் ஓர் நவீனமான சோபையுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

படகும் உபகுப்தன் இருக்கும் திசையை நோக்கியே வந்தது. ஆனால் உபகுப்தன் தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தான். சிங்கம் பிழைப்பது மிகவும் அரிதெனவே காணப்பட்டது. எனினும் தன் முழு மனதையும் செலுத்தி அச் சிங்கத்தைப் பிழைப்பிப்பதிலேயே மெய் மறந்திருந்தான்.

பாட்டின் இன்னிசை உபகுப்தன் காதுகளிலும் விழுந்தது. படகில் இருந்தது யார்? அதே வாஸவதத்தை படகில் உட்கார்ந்துகொண்டு, தன் இருண்ட அளகபாரத்தைக் காற்றில் தள்ளாட விட்டுக்கொண்டு, சந்திரனை நோக்கியபடியே மிகவும் உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்தாள். உபகுப்தன் சிங்கத்தின் இருதயத்தில் பாய்ந்திருந்த அம்பைப் பிடுங்குவதற்காகக் கையை நீட்டினான். படகும் கரையை வந்தடைந்தது. பாட்டும் திடீரென்று நின்றுவிட்டது.

உபகுப்தன் செய்யும் காரியத்தைப் பார்த்து வாசவதத்தை திடுக்கிட்டு, படகிலிருந்தபடியே, "ஏ பிக்ஷு! நீ என்ன காரியம் செய்யத் துணிந்தாய்! இக் கொடிய மிருகம் உயிர் பிழைக்குமேயானால், தனக்கு உயிரளித்த மகானுபாவனையே அறியும் சக்தியிலது என்று அறியாயோ! அது உன்னைச் சின்னபின்னமாக்கிவிடுமே" என்று உரத்துக் கூறினாள்.

அப்போது உபகுப்தன் திடமான குரலில் "சுந்தரியே! நீ எண்ணுவது தவறு. வெளியழகு மாத்திரம் உள்ளவர்களைக் காட்டிலும் இம் மிருகம் அதிக பயங்கரமானதல்ல. எவர்களுடைய முகத்துக்குப் பின்னால் மறைந்து மனிதருக்கு விரோதியான காமதேவன் வில்லில் நாணேற்றிக் காதுவரை யிழுத்து மனிதரைக் கொல்லத் தயாராயிருக்கிறானோ அவர்களுடைய அழகைக் காட்டி

னும் இம் மிருகம் பயங்கரமானதல்ல. மனிதனை மோக வலையில் சிக்கவைத்துத் தன் அடிமையாகச் செய்துகொள்ளும் வெளிச் சௌந்திரியத்தைக் காட்டிலும் இம் மிருகம் கொடியதல்ல. மனிதன் தன் ஆராதனைக்குரிய கடவுளைப் புறக்கணித்து, கையில் தங்க மகுடந் தாங்கி, பயனற்ற இந்த மாயையைப் பின்பற்றித் திரிந்து, மாறி மாறிப் பிறப்பையும் இறப்பையும் அடைந்து வருவதற்குக் காரணமாயிருக்கும் அம் மகா மோகத்தைக் காட்டிலும் இந்த மிருகம் பயங்கரமானதல்ல" என்று உருக்கமான குரலில் சொன்னான்.

வாஸவதத்தைக்கு இச் சொற்கள் சிறிதும் புலப்படவில்லை. ஆசையினால் பீடிக்கப்பட்ட அவள் "ஏ பிக்ஷு! நீ வருவாய் வருவாய் என்று ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒரு யுகமாக உன் வழி பார்த்துக்கொண்டே இருந்தேன்! நீ என்னை மறந்துவிட்டாயோ?" என்று கேட்டாள்.

உப:—இல்லை, மறக்கவில்லை. அவசியம் வருவேன்! ஆனால் இன்னும் சில நாட்கள் கழிந்த பின்.

வாஸ:—இன்றே இப்பொழுதே வந்தருள் பிக்ஷு! இதைக் காட்டிலும் இனிமையான நேரம் இன்னும் எப்பொழுது வாய்க்குமோ? இன்று நிலவு தன் பூர்ணக் கலைகளோடும் பூமியின் மேல் காய்ந்துகொண்டிருக்கிறது. நீ என் இல்லத்தின் இருளைப் போக்குவாயாக.

"கொஞ்சம் பொறு"என்று சொல்லிவிட்டு பௌத்த சந்நியாசி சிங்கத்தின் மார்பிலிருந்த அம்பைப் பிடுங்க எத்தனித்தான். அப்போது வாஸவதத்தை "ஏ சந்நியாசியே! நீ உன் அழகெனும் அம்பினால் என் இருதயத்தைத் துளைத்துவிட்டாய். முதலில் என் இருதயத்தில் புதைந்திருக்கும் அம்பை அப்புறப்படுத்திப் பிறகு இவ் வறிவற்ற மிருகத்தைக் கவனிப்பாயாக" என மனமிரங்குமாறு கூறினாள்.

உப:—ஏ சுந்தரி! சிறிது மனதைத் திடப்படுத்திக்கொள்; நான் அவசியம் வருவேன்.

வாஸ:—நீ எப்பொழுது வருவாயோ அறியேன்! உன் வரவை எதிர்பார்த்தபடியே என் கண்கள் ஒழியிழந்து போமோ அப்பொழுது வருவாய் போலும். இரக்கமற்ற காலன் என் யௌவனத்தைக் கவர்ந்து சென்ற பின் வருவாய் போலும்.



உப:—என்ன ஆச்சரியம்; இவ்வளவு அறிவு இருந்துமா இந்தப் படுகுழியில் விழ ஆசைப்படுகிறாய்?" என்று அவள் முகத்தை நோக்கியவாறே கேட்டான். அதற்கு,

வாஸ:—"ஏ இரக்கமற்ற சந்நியாசியே! அதெல்லாம் இருக்கட்டும். நீ எப்பொழுது வருவாய் கூறு?" என்றாள்.

உப:—இந்த ஜன்மத்திலேயே அவசியம் வருவேன்.

வாஸ:—மிகவும் நீண்டகாலமா யிருக்கிறதே.

உப:—அப்படியானால்—

வாஸ:—"இதோ கொடியில்" என்று உரைப்பாய் பிக்ஷு!

உப:—முடியாது!

வாஸ:—இதே மாதத்தில்?—

உப:—இதே வருஷம் முடிவதற்குள் அவசியம் வருவேன்; இதை சத்தியம் என்று நம்பு.

வாஸ:—அப்படியாயின் நான் ஒவ்வொரு விநாடியையும் எனது ஸ்வாசத்தினாலும் ஒவ்வொரு நாளையும் என் விரல்களினாலும் எண்ணிக்கொண்டே இருப்பேன்" என்று கூறிவிட்டு அவ்விடமிருந்து சென்றாள்.

உபகுப்தனும் அரை யுயிராயிருந்த சிங்கத்தின் இருதயத்தினின்று அம்பைப் பிடுங்குவதில் மனமகிழ்ந்து இருந்தான்.

3

சரத்காலம் கழிந்தது. சிசிரமும் கடந்து சென்றது. ஹேமந்த ருதுவும் போய்விட்டது. ஆனால் உபகுப்தன் மட்டும் வரவில்லை. வாஸவதத்தை பன்முறை கண்களில் நீர் ததும்ப அவன் வரவை எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள். ஆனால் அவன் வரவே யில்லை. பன்முறை அவள் தன் மெல்லிய சரீரத்தை ஆடை யாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டாள் உபகுப்தன் வருவான் என்று. ஆனால் எல்லாச் சிங்காரங்களும் வீணாயின.

கடைசியில் வஸந்த காலமும் நறுமலர்கள், நறுமணம், இளந்தளிர் இவைகளைத் துணையாக்கிக் கொண்டு வந்தது. பிறகு கடந்

தும் சென்றது. ஆனால் உபகுப்தன் இன்னும் வந்திலன். எதிர் பார்த்தபடியே கண்களும் பூத்துவிட்டன. குறித்த காலமும் நெருங்கிற்று. இன்னும் உபகுப்தன் வரவில்லை. வாஸவதத்தையின் கண்களும் திருப்தி அடைந்தபாடில்லை. ஆனால் அக் கண்களினின்றும் ஆசை மட்டும் நீங்கிலது. வாஸவதத்தை மாத்திரம் வாராதவனுடைய வழி பார்த்துக் கொண்டிருந்தாள். ஐயோ! எல்லோரும் வந்தார்கள். ஆனால் வாராதவன் மட்டும் அவன் ஒருவனே.

குறித்த காலம் கடக்க இன்னும் இரண்டு மாதங்களே எஞ்சின, இப்போது ஒரு மாதம்தான் பாக்கி. சதா ஓய்வு ஒழிவின்றி நடந்துகொண்டே இருக்கும் 'வருஷம்' என்னும் வழிப்போக்கன் போய்விடுவதற்கு ஆயத்தமானான். சிசிர ருதுவின் கம்பளத்தைத் தோளின் மேல் போட்டுக்கொண்டு, ஹேமந்தத்தின் படுக்கையைச் சுருட்டிக் கட்டி, வஸந்தத்தின் மலராடையையும் மூட்டையில் வைத்துவிட்டான். கிரீஷ்ம ருதுவின் குடையைக் கையிலும் செருப்பைக் காலிலும் அணிந்துகொண்டு வர்ஷா ருதுவிலிருந்து விடுபட்ட ஜல பாத்திரத்தையும் கயிற்றையும் கையில் வைத்துக்கொண்ட பின், சரத் காலத்துச் சந்திரனையும் சுருட்டி எடுத்துப்போக எத்தனிக்கையில் வாஸவதத்தை ஆறாத் துயரங்கொண்டு கண்களில் நீர் பெருக "ஐயோ உண்மையாகவே இவ் வருஷம் முடிவதற்குள் என் அன்பன் வரமாட்டானோ" என்று கதறினாள்.

## 4

இராக்காலம்! உலக முழுவதும் எங்கு பார்த்தாலும் காரிருள். வாஸவதத்தையின் மாளிகை மாத்திரம் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்துக்கொண் டிருந்தது. மின்சார விளக்குகளின் மின்னொளி அவளது கேளீபவனத்தின் சோபையை அதிகரித்துக்கொண் டிருந்தது. ஆயிரக் கணக்கான தீபங்கள் நக்ஷத்திர மண்டலம்போல் விளங்கின. அவைகளின் நடுவே வாஸவதத்தை சந்திரனே போன்று விளங்கினாள்.

அன்றைய தினம் வாஸவதத்தையின் வீட்டில் ஏதோ உத்சவம். வாஸவதத்தையின் மேல் காதல் கொண்ட ஒரு லக்ஷாதிபதியின் வரவேற்புக்காக இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு புறம் சங்கீதத்தின் இன்னிசை; மறு புறம் திராக்ஷ ரசத்தின் இன்சுவை தாரை தாரையாக ஓடிக்கொண்டிருந்தது. இவைகளின் மத்தியில் அந்த லக்ஷாபதி மூழ்கிக் கிடந்தான்.



நடுநிசி ஆவதற்கு முன்பே மதுபானத்தின் வேகத்தால் லக்ஷப் பிரபு அறிவின்றி மயங்கிக் கிடந்தான். அச் சமயம் அவனுக்குத் தனதென்றும் பிறதென்றும் யாதொரு உணர்ச்சியும் கிடையாது. சங்கீதமும் நின்றுவிட்டது. வேலைக்காரிகள் முதலானோர் விடை பெற்றுத் தத்தம் இல்லம் சென்றனர். கேளீபவனத்தில் வாஸவதத்தை லக்ஷபதி இவ்விருவரைத் தவிர வேறு ஒருவருமே இல்லை—இல்லை என்று கூறினேன். அது தவறு. இவ்விருவரைத் தவிர அவ்விடத்தில் இன்னும் ஒரு பிசாசும் இருக்கிறது! அது என்ன? தாசி வாஸவதத்தையின் மனப் பேய்.

வாஸவதத்தை நாற்புறமும் உற்று நோக்கிய பின் தன் தலையணையின் கீழே மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டாரியை எடுத்தாள்! நடு நிசியில், அதுவும் வேசியின் கையில் கட்டாரியா? ஐயோ, அவள் என்ன செய்ய விரும்புகிறாள்? சங்கீத மென்னும் அமிருதத்தைப் பொழியும் சந்திரன் போன்ற அதே முக மண்டலம் பேரிடி போன்ற வஜ்ராயுதத்தையும் வீழ்த்த வல்லதோ?

வாஸவதத்தை மூர்ச்சையாய்க் கிடந்த லக்ஷாதிபதியைக் கொல்லத் துணிந்தாள். அவளது கட்டாரி தாங்கிய கை "ஜாக்கிரதை! மேலே கடவுள் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு அஞ்சு" என்று சொல்வது போல் மேல் நோக்கி எழுந்தது. ஆனால் பாபச் செயலில் துணிந்த வாஸவதத்தை அக் கரத்தின் பாஷையை அறிந்திலள். மேலே எழுந்த கட்டாரி இரக்கமின்றி லக்ஷாதிபதியின் இதயத்தில் பாய்ந்தது. லக்ஷபதி "ஹா" என்றான். "ஏ! வஞ்சகி! பேயே!" என்று கூக்குரலிட்டு உயிர் துறந்தான்.

அந்த அழகிய அரக்கி, யௌவனப் பெண் பேய் தன் வெற்றியைக் கண்டு மகிழ்ந்தாள். அதே சமயத்தில் அவளது வாயிலில் அன்பு நிறைந்த குரலோடு யாரோ ஒருவர் "வாஸவதத்தா" என்று கூப்பிடும் சத்தம் அவள் காதில் விழுந்தது. வாஸவதத்தை நடுநடுங்கிக்கொண்டே வாயிற் கதவைத் திறந்து 'யார்' என்றாள். கதவைத் திறந்தவுடன் கேளீபவனத்தின் மின்னொளி, நின்றவன் முகத்தில் பிரகாசித்தது. அவனே உபகுப்தன்.

வாஸவதத்தை "அப்பாடா" என்று பெருமூச்செறிந்து மிகுந்த மன மகிழ்ச்சியோடு, 'கடைசியாக நீயும் வந்துவிட்டாயா?' என்றாள் அப்பொழுது.

உப:—இப்போது நேரமில்லை! ஆனால் சீக்கிரமே வருவேன்.

வாஸ:—அப்படியானால் நேரங்கெட்ட இந் நேரத்தில் இங்கே வந்ததின் காரணம் என்ன?

உப:—ஒன்றும் இல்லை! இத்தனை நாட்களாக நான் யாத்திரையில் சென்றிருந்தேன். இங்கே வந்ததும் உனது நினைவு வந்தது. நீ தூங்குகிறாயா, விழித்திருக்கிறாயா? பார்த்துச் செல்லலாம் என்று ஆவல் உண்டாயிற்று.

வாஸ:—நான் விழித்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

உப:—அப்படியாயின் நீ உன் இரு கண்களையும் மூடிக்கொண்டிருக்கிறாய். நல்லது எனக்கு நேரமாகிவிட்டது. சென்று வருகிறேன்.

வாஸ:—சற்று பொறு! உனக்கு உன் வாக்குறுதி ஞாபகம் இருக்கிறதா?

உப:—ஆம்.

வாஸ:—நீ இந்த வருஷம் முடியுமுன் என்னிடம் வருவதாக வாக்களித்தாயல்லவா?

உப:—ஆனால் வருஷம் முடிவதற்கு இன்னும் எவ்வளவு நாட்கள் இருக்கின்றன? சொல்.

வாஸ:—கேவலம் பதினைந்து நாட்கள்.

உப:—அதற்குள் நான் அவசியம் உன்னிடம் வந்தடைவேன்! கவலையுறாதே.

வாஸ:—ஏ பிக்ஷு! நீ பொய் புகல்கிறாய்! என்னை ஏமாற்றுகிறாய்!!

உப:—புத்த பகவானுடைய சீடன் ஒருபோதும் பொய் புகல மாட்டான். கபடமும் வஞ்சனையும் அவனது கொள்கைகள் அல்ல என்று சொல்லிக்கொண்டே உபகுப்தன் இரவின் அந்தகாரத்தில் மறைந்தான். வாஸவதத்தையும் வாயிற் கதவைத் தாளிட்டு உள் சென்று மறைந்தாள்.

## 5

வாஸவதத்தை பணத்திற்காக ஆசைப்பட்டு லக்ஷாதிபதியைக் கொன்றுவிட்டாள் என்ற செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது. நீதிஸ்தலத்தில் விசாரணைக்கு வந்தது. அங்கே வாஸவதத்தையின் திரண்ட செல்வம், எண்ணிறந்த அன்பர்கள், இணையற்ற அழகு இவை ஒன்றும் அவளைத் தண்டனையினின்றும் தப்புவிக்கச் சக்தியற்றவையாய்ப் போய்விட்டன.

அந்த நிர்ப்பாக்கியவதிக்கு நியாயாலயத்தில் தூக்குத் தண்டனை கிடைக்கவில்லை. தூக்குத் தண்டனை கிடைத்திருந்தால், அவளது



சாந்தி இல்லா வாழ்விற்குச் சாந்தி உண்டாயிருக்கும். தூக்குத் தண்டனை அவளுக்குத் தண்டனையாகாமல் அவளுக்கு ஒரு ஆசீர்வாதம் என்றே சொல்லவேண்டும். ஆனால் நீதிபதி அவ்விதமான ஆசீர்வாதத்தை அவளுக்குக் கொடுக்க விரும்பவில்லை.

அவளுடைய சௌந்தரியம் விகாரமாகச் செய்யப்பட்டது. சந்திரன்போன்ற அழகிய முகமண்டலத்திலிருந்து இரு கண்களும் தோண்டி எறியப்பட்டன. காதுகளும் மூக்குகளும் அறுக்கப்பட்டன. அவளது தாமரைத் தண்டுபோன்ற மெல்லிய கைகள் துண்டிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேல் அவளுடைய செல்வ முழுவதும் சர்க்காரால் ஜப்தி செய்யப்பட்டது.

வாஸவதத்தை இக் கோரமான தண்டனை விதிக்கப்படும் காலத்தில், மிகுந்த துக்கமான குரலில் "எனக்கு இன்னும் ஒரே வாரம் வாய்தா கொடுங்கள். என் அன்பன் ஒருவனைச் சந்திக்கவேண்டியிருக்கிறது. அவன் ஒரு வாரத்திற்குள் அவசியம் வந்துவிடுவான். அதற்குப் பிறகு தண்டனையை நிறைவேற்றுவதற்காக எனது தேகத்தை முகமலர்ச்சியோடு கொலையாளியின் வசத்தில் ஒப்புவித்துவிடுவேன்" என்று எவ்வளவோ மன்றாடி வேண்டியும் அவளுடைய பிரார்த்தனை ஒருவருடைய காதிலும் விழவில்லை.

கொலையாளியும் உத்திரவுப்படி வாஸவதத்தையின் அழகைப் பங்கப்படுத்தி, அவளை ராஜ வீதியில் விட்டுவிட்டான். ஆஹா! எவ்வளவு பயங்கரமான தோற்றம்? அறுபட்ட இடங்களிலிருந்து இரத்தம் ஆறாய்ப் பெருகி ஓடிற்று. அவ்விடங்களில் ஈக்கள் ரீங்காரஞ் செய்துகொண்டு மொய்க்க ஆரம்பித்தன. கைகளிருந்தால் அந்த ஈக்களை ஓட்டிக்கொள்ளுவாள். கைகளில்லாததால் ஈக்களை ஓட்டவும் சக்தியற்றவளாய் இருந்தாள். பாவம்! என்ன செய்வாள்? மிகவும் துக்ககரமாக அழுதுகொண்டிருந்தாள்.

இத்தகைய காட்சிக்கு முன்பு அவளுடைய ரூபலாவண்ணியத்தையே உபாசித்துக்கொண்டிருந்த அவளுடைய ஆசை நாயகர்கள் அனைவரும் அவளை வெறுக்கத் தொடங்கினார்கள். அவளைப் பார்த்தும் தூரத்திலிருந்தபடியே ஓட்டம்பிடித்தார்கள். எல்லா ஜனங்களும் அவள்மேல் காரி உமிழ்ந்தார்கள். பாதையில் கிடக்கும் கூன், குருடு, செவிடு, பிச்சைக்காரன், குஷ்டரோகிகூட அவளுடைய பரிசத்திற்குப் பயந்து வெகு தூரமாக ஒதுங்கி நின்றார்கள்.

எச் சமயம் அவளிடத்தில் உலகத்தை மயக்கச் செய்யும் அழகு, இளமை, தனம் ஒன்றும் இல்லையோ, எப்பொழுது உலக முழுதும் அவளை வெறுத்துக்கொண்டிருந்ததோ, எப்பொழுது ஒருவரும் அவள்பால் எள்ளளவும் கருணை காட்டவில்லையோ, அச் சம

யத்தில் உபகுப்தன் அவளது சிரத்தின்மேல் கையை வைத்து, மெதுவாகத் தடவிக்கொடுத்தான்.

வாஸவதத்தை திடுக்கிட்டு 'யார்?' என்றாள். குரலிலிருந்தே அம் மனிதனை அறிந்துகொண்டாள். எனினும் தன் ஐயம் தீரும் பொருட்டு 'உபகுப்தனா?' என்றாள்.

உப:—ஆம்! நான் தான் உபகுப்தன்.

வாஸ:—(பெருமூச்செறிந்து) இவ்விடமிருந்து இப்பொழுதே செல்! நீ எதற்காக இங்கே வந்தாய்? எனது கஷ்ட நிலைமையைப் பார்த்து என்னைப் பரிகாசம் செய்ய வந்தனையோ?

உப.—ஆயின் என்னைத் திரும்பிப் போகவா சொல்லுகிறாய்? நான் நீ சொன்ன பிரகாரமே உன்னை வந்தடைந்திருக்கிறேன். நான் வருவதில் சிறிதளவேனும் தாமதம் ஆகவில்லை. இன்னும் இந்த வருஷம் முடிவடைவதற்கு இரண்டு நாட்கள் பாக்கி இருக்கின்றன.

வாஸ:—ஐயோ! எனது மெல்லிய மலர்போன்ற தேகத்தில் வசந்தகாலத்து நறுமணம் கமழும் தருணத்தில் நீ வந்திலை. எனது சோபையான நிலவு பூமியின்மேல் அமிருதம் பொழிந்துகொண்டிருந்த அச் சமயமும் வந்திலை. கொலையாளிகள் எனக்கு இக் கொடிய தண்டனையை விதிக்கும்பொருட்டு தங்களுடைய இரக்கமற்ற கத்திகளைத் தீட்டிக்கொண்டிருக்கும் சமயத்திலும் வாராதொழிந்தாய். சந்நியாசியே! நீ அறியாச் சிறுவனோ? இப்போது என் அழகெனும் விளக்கு அணைந்துவிட்டது. என் பிரபையாகிற சூரியன் அஸ்தமித்துவிட்டான். இப்படிப்பட்ட சமயத்தில் இங்கே எதற்காக வந்தாய்?

உப:—சகோதரியே! யான் இந்திரிய சுகத்தையாவது, வேறு சுயநலத்தையாவது நாடி உன்னிடம் வரவில்லை. சரீரத்தின் வெளியழகெல்லாம் பயனற்றது. இந்த உனது சரீரமே அதற்குப் போதிய சாக்ஷியாகும். ஐஸ்வரியமும் பயனற்றது. உனது இணையில்லாச் சம்பத்தே இதற்குப் பதில் அளிக்கும். நான் நீ சொன்னபடி உன்னிடம் வந்திருக்கிறேன். நீ என்ன சொல்லிக்கொள்ள விரும்புகிறாயோ சொல்.

இப்பொழுதுதான் வாஸவதத்தையின் அகக் கண்கள் திறந்தன. உண்மை அவளது மனதில் பட்டது. "நான் என்ன சொல்லுவேன்? உனது கேள்வியே எனது விடையை அபகரித்துச் சென்றது. நான் ஒரு கனவையும், நிழலையும், கானல் தண்ணீரையும் சதம் என்று நினைத்து இந்நாள்வரை தேடித் திரிந்தேன். இப்



பொழுது நான் சொல்ல விரும்புவது ஒன்றுமில்லை. நீ சிறிது நேரம்வரை என் அண்டையில் நின்றுகொண்டிரு. உன்னுடைய அன்பார்ந்த ஸ்பரிசத்தினால் என் நோய் சிறிது குறைந்தாற்போல் காண்கிறது. உனது இனிய மொழிகளால் என் துக்கம் நீங்கிற்று."

"சந்நியாசிகளிற் சிறந்தவனே! நான் ஒன்றும் இப்போது சொல்ல வேண்டியதில்லை. நீதான் ஏதாவது சொல்; கேட்கிறேன்" என்றாள்.

உப:—உலகத்தில் ஆசையே எல்லாத் துக்கங்களுக்கும் மூல காரணம். அந்த ஆசையையே சதம் என்று நினைத்து, அதற்கு அடிமையாகத் திரிந்தாய். நீ உன் காமத்திற்காக உன் தர்மத்தை விற்று விட்டாய். உன்னை நேசித்த லக்ஷாதிபதியைப் பொருளுக்காகக் கொன்றாய். உனது கஷ்ட காலத்தில் அவை ஒன்றும் பயன்படவில்லை.

வாஸ:—ஐயோ சந்நியாசியே! இதற்கு முன்னமேயே என்னிடம் வந்து, இப் படுகுழியில் வீழ்வதினின்றும் என்னை ஏன் காப்பாற்றவில்லை? நீ வந்தது என்னவோ உண்மை. ஆனால் எல்லாம் ஆன பின்பு வந்தாய்.

உப:—"சிறிதளவும் தாமதம் ஆகவில்லை. இன்னும் போதிய சமயம் இருக்கிறது. இத் தருணம் உனக்கு வெளிக் கண்கள் இல்லை. ஆனால் உன் ஞானக் கண்கள் திறந்துகொண்டன. எழு! புத்தபகவானுடைய திவ்விய கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள். அவர் உனது எல்லாத் துயர்களையும் அகற்றுவார். நீ முக்தியை அடைவாய்" என்றான்.

வாஸவதத்தையின் மணல் நிறைந்த பாலைவனத்தில் ஆகாயத்திலிருந்து அமிருதமாரி பொழிந்தது. அவளது சத்வகுணம் தழைத்தோங்கியது. உலகம் நிலையற்றது என்பது விளங்கிற்று. கேவலம் அறிவு மாத்திரமல்ல. அந்த அநுபவமும் உண்டாய்விட்டது. அவள் பௌத்த சந்நியாசியின் பாதங்களில் சிரம் வைத்து, "பிரபோ! அடியாள் சித்தமா யிருக்கிறாள். கருணை கூர்ந்து அவளை சாந்தி என்னும் ராஜ்யத்திற்கு அழைத்துச் செல்லுவீராக" என்று கூறினாள்.

உபகுப்தன் தன் பரிசுத்தமான கரங்களினால் வாஸவதத்தையின் தேகத்தைப் பரிசித்தான். இருவரும் மரமடர்ந்த வனத்தை நோக்கிச் சென்றார்கள். பாபமாகிய அக்கினியினால் பீடிக்கப்பட்டிருந்த வாஸவதத்தை பிராயச்சித்தம் என்னும் தேவநதியில் ஸ்நானம் செய்தாள். அவள் அன்று முதல் பௌத்த சந்நியாசினி ஆகி, தன் வாழ்க்கையில் சாந்தியை அடைந்தாள்.

# ஐரோப்பியப் புது பலவான்.

ஜனப் S. சையது அஹமது அவர்கள்.

இற்றைய துருக்கியை "ஐரோப்பியப் புது பலவான்" என்றுதான் அழைக்கவேண்டும். ஒரு காலத்தில் பலவான்களிடையே நோயாளியைப்போல் ஐரோப்பிய நாடுகளிடையே துருக்கி விளங்கியதால் 'ஐரோப்பிய நோயாளி' என்று அது அழைக்கப்பட்டு வந்தது. அதன் நோய் முற்றி, சாகுந் தறுவாயில் கை கால்களை உதறிக்கொண்டு கிடந்தபோது, ஆண்டவனால் அருளப்பட்ட வைத்திய நிபுணரைப்போல் வீரகேசரி முஸ்தபா கமால் தோன்றி, அதன் நோயைத் தீர்த்து உயிர்ப் பிச்சையளித்து. இன்று அதை ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றாய் மிளிரும்படி செய்திருக்கிறார்.

அரும்பெரும் சக்கிரவர்த்திகளை முறியடித்து விரட்டிவிடலாம், அரசாங்கங்களைக் கவிழ்த்திவிடலாம், அரசியல் முறைகளைப் புரட்டிவிடலாம், மத வைதீகர்களின் எதிர்ப்புகளுக்குக் கொஞ்சமும் அசையாது நின்று வயிர நெஞ்சத்தோடு அதி தீவிரமான சீர்திருத்தங்களைப் புகுத்தி, பிறநாட்டார் உதவி சிறிதுமின்றிக் கீழான நிலையிலிருந்து மேலான நிலைக்கு ஒரு தேசத்தைக் உயர்த்தவேண்டுமானால் அது இலேசுபட்ட காரியமல்ல. அதைச் செய்து முடித்த வீரர்களுக்குத்தான் தெரியும்! தங்கள் தங்கள் தேசங்களை விடுதலைபெறச்செய்து, அரசியல் போக்கையே தலைகீழாகப் புரட்டிய நெப்போலியன், கிராம்வெல், லெனின், முஸோலினி போன்றவர்களுள் ஒருவரே காஜி முஸ்தபா கமால் பாஷா.

துருக்கிக் குடியரசு தோன்றிப் பத்து வருஷங்கள் கடந்துவிட்டன. சென்ற மார்ச்சுமீ 6௳தான் அதன் பத்தாவது ஆண்டு விழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதர தேசங்கள் தீர்க்க முடியாத பெரும் பிரச்னைகளில் சிக்குண்டு தத்தளிக்கும் இச் சமயத்தில் துருக்கி நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டு போவதும், ஒரு நாடு மற்றொரு நாட்டை விழுங்க சமயம் பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் சாந்தமான ஆக்க வேலையில் ஈடுபட்டிருப்பதும் பெரிதும் போற்றத் தக்கதாகும். பத்து ஆண்டுகளுக்குள் முஸ்தபா கமால் துருக்கியின் பகைவர்களையெல்லாம் நண்பர்கள் ஆக்கியிருப்பதோடு, பிறதேசத்தாரின் பொருள் உதவி சிறிது



மின்றி துருக்கியின் பொருளாதார நிலையை உயர்த்தியிருக்கிறார். ஆங்கிலேயரிடமாவது, அமெரிக்கரிடமாவது கடன் வாங்கினாலொழிய துருக்கி, பொருளாதார முன்னேற்றம் அடைய முடியாது என்று ஐரோப்பியப் பொருளாதார நிபுணர்கள் கூறியும் முஸ்தபா கமால் கடன் வாங்கித் தன் தேசத்தைப் பணக்கார நாடுகளுக்கு அடிமைப்படுத்த விரும்பவில்லை. இதனால் துருக்கியில் இப்போது சற்று வரிப் பளு அதிகமாயிருக்கிறது. 'தன் கையே தனக்குதவி' எனக்கொண்டு வளரத் தொடங்கியிருக்கும் தேசம், ஆரம்பத்தில் சிறிது சிரமப்படவேண்டியதாய்த்தான் இருக்கும்.

இப்போது அங்கே 'காஜி'யின் சர்வாதிகாரந்தான் நடைபெறுகிறது. ஆக்க வேலையில் ஈடுபட்டுள்ள நாடு, தேச பக்தி மிகுந்த—ஆற்றல்வாய்ந்த ஒரு தலைவரிடம் கொஞ்ச காலம் இருப்பது நலம் என்பதை அரசியல் அறிவாளிகள் ஏற்றுக்கொள்ளுவார்கள். நோயாளி தன் நோய் தீர சில கசப்பான மருந்துகளும் உட்கொண்டே ஆகவேண்டும். முஸ்தபா கமாலின் தோள் வலியாலும், மனோ வலியாலும், மூளை வலியாலுமே துருக்கி இன்று இந் நிலை எய்தியிருக்கிறது.

சென்ற மஹா யுத்தத்தில் துருக்கி ஜெர்மனியோடு சேர்ந்து போர் செய்ததால் மகத்தான நஷ்டமடைந்தது. சுல்த்தானின் பலம் குன்றி, அவரைப் பகைவர்கள் சூழ்ந்துகொண்டனர். பகைவர்கள் சூழ்ச்சி வலையில் சிக்குண்டு தன் தேசத்தைக் காட்டிக் கொடுக்கவும் சுல்தான் தயாராயிருந்தார். சுல்தானின் பலவீனத்தைக் கண்டு, கிரேக்கர் 1919-ம் வருஷம் துருக்கியின்மீது படையெடுத்தனர். சுல்தானால் அவர்களை எதிர்க்க முடியவில்லை. கிரேக்க சேனை அடக்குவாரற்று நிமிஷத்துக்கு நிமிஷம் துருக்கியின் நகரங்களைப் பிடித்துக்கொண்டும், அட்டூழியங்கள் செய்துகொண்டும் ஜெயகோஷத்துடன் முன்னேறி வந்துகொண்டிருந்தது. ஆச்சு! இன்னும் சில நகரங்கள்தான் எஞ்சியிருந்தன. அடுத்த நாள் அவைகளும் பிடிபட்டுவிடும் என்று உலகம் நம்பியது. துருக்கிப் பூண்டற்றுப்போகும் தருணம் நெருங்கியது. துருக்கி சுல்தான் எங்கிருக்கிறார் என்றுகூடத் தெரியவில்லை. இச் சமயத்தில் திடுமென உலகத்தார் அதிசயமுற வீரகேசரி முஸ்தபா கமால் வீறுகொண்டு தேசபக்தி மிகுந்த வீர வாலிபச் சேனையுடன் தோன்றினார். வீராவேசத்துடன் கிரேக்கர்மீது விழுந்து தாக்கினார். எதிர்பாராத விதமாகத் தோன்றிய சிங்கங்களைக் கண்டு கிரேக்கர் திகைத்தனர். தேச பக்தி கொழுந்துவிட்டெரியும் நெஞ்சங்களையுடைய வாலி

சிங்கங்கள் எங்கே! வயிற்றுக்காகப் படையில் சேர்ந்து போராடும் கிரேக்க சிப்பாய்கள் எங்கே? கமாலின் சேனை பகைவர்களைத் தவிடுபொடியாக்கிப் பெருத்த சேதத்துடன் ஓட்டம்பிடிக்கச் செய்தது. துருக்கி காப்பாற்றப்பட்டது. துருக்கியரின் மன நிலை சொல்லத் தக்கதன்று. துருக்கி தேசத்தார் ஏன்? உலக முஸ்லிம்கள் அனைவரும் முஸ்தபா கமாலுக்கு 'காஜி' (Ghazi = வெற்றிவீரர்) என்னும் பட்டம் சூட்டி ஆரவாரித்தனர். எங்கும் அதிசயம்! எங்கும் மகிழ்ச்சி! காஜி முஸ்தபா கமால் பாஷா பழைய பெருமை வாய்ந்த உதுமானிய ராஜ்யத்தை (Ottoman Empire)க் காப்பாற்றிய வீரராய் விளங்கினார். அவர் பாதங்களைத் தொட்டு ஜனங்கள் கண்களில் ஒற்றிக்கொண்டனர். அவரைத் துதிக்காத முஸ்லிமே கிடையாது. அவருக்கேற்பட்ட செல்வாக்குக் கொஞ்சநஞ்சமன்று.

1922-ம்௵ நவம்பர்௴ முதல் நாள் 'இனி சுல்த்தான் ஆட்சி இல்லை' யென்று பிரகடனப் படுத்தப்பட்டது. அப்போது சுல்த்தானா யிருந்த 6-வது முஹம்மது, ஆங்கிலேயர் கப்பலில் சரண் புகுந்து தப்பித்துக்கொண்டார். 1923-ம்௵ ஜூலை௴ 24௳ 'லாசேனி'ல் சமாதானம் நிறைவேறியது. அதற்குப் பின் துருக்கியின் கௌரவம் நிலை நாட்டப்பட்டது. பகைவர்களால் கவரப்பட்ட பகுதிகள் மீண்டும் துருக்கிக்குக் கொடுக்கப்பட்டன.

1923-ம்௵ அக்டோபர்௴ 29௳ குடியரசு ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக விளம்பரப்படுத்தப்பட்டது. காஜி முஸ்தபா கமால் பாஷாவே தலைவரா யிருந்து எல்லா காரியங்களையும் நடத்தி வைத்தார்.

எல்லாம் முடிந்த பின், பாஷா ஆக்க வேலைக்கு ஆயத்தமானார். அவர் செய்ய வேண்டிய வேலை அபாரமானதா யிருந்தது. ஜனங்களில் 100-க்கு 90 பேர் கல்வி வாசனையே இல்லாதவர்களா யிருந்தனர். குடியாட்சியை நடத்த அவர்களுக்குத் தெரியாது. விவசாயம் மிக மிக மோசமான நிலையிலிருந்தது. வியாபாரம் அன்னிய முதலாளிகளின் ஏகபோகமா யிருந்தது. அவர்கள் ஏராளமான கம்பெனிகளும், பாங்கிகளும், சொந்த தபாலாபீஸுகளும் வைத்துக் கொள்ளை யடித்துக்கொண்டிருந்தார்கள். வரியே யில்லாமலும், துருக்கியின் சட்டங்களுக்கு விலக்காகவும் மிகவும் சௌகர்யமாக வாழ்ந்து வந்தார்கள். 'மில்லட்' என்னும் அன்னிய வகுப்பார் விசேஷ உரிமைகள் பாராட்டி வந்தனர். காஜி பாஷா அத்தனை அன்னியரையும் தங்கள் மூட்டை முடிச்சுகளோடு துருக்கியைவிட்டுக் காலி செய்து, சொந்த ஊருக்குப் போகும்படி கட்டளையிட்டார். விசேஷ உரிமைகள் யாவையும் ரத்து செய்தார்.



வெளி தேசங்களில் பரிதவித்துக் கொண்டிருந்த துருக்கியரைத் தாய் நாட்டுக்குத் திருப்ப அழைத்துக்கொண்டார்.

கல்வியே பிரதானமானது. ஆகையால் முதலில் அதில் கவனஞ் செலுத்தப்பட்டது. அரபி எழுத்துக்களிலிருந்த புஸ்தகங்கள் யாவும் சௌகர்யமான 'லத்தீன்' எழுத்துக்களில் எழுதப்பட்டன. கல்வி யறிவில்லாத ஆண், பெண், சிறுவர், கிழவர் எல்லாருக்கும் கட்டாயக் கல்வி அளிக்கப்பட்டது. நாடகக் கொட்டகைகளும், படக்காட்சிசாலைகளும் பள்ளிக்கூடங்களாக உபயோகப்படுத்தப்பட்டன. பிரசங்கங்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் நவீனக் கல்வி புகட்டப்பட்டது. எட்டு விவசாயக் கல்லூரிகளும், கைத்தொழில், வியாபாரம், மருத்துவம், சட்டம் முதலியவைகளுக்காகக் கலாசாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இப்பொழுது பத்து வருஷங்களுக்குள் 100-க்கு 90 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களா யிருக்கின்றனர்.

'முன்னேற்றம், சீர்திருத்தம்' என்னும் மொழிகளே முஸ்தபா கமாலின் தாரக மந்திரங்கள். துருக்கியர் அந்தப்புரம் ஒழிக்கப்பட்டது. கோஷா முறை நீக்கப்பட்டு ஆண்களோடு பெண்கள் வெளியே முகமூடியின்றி போகவும் வேலை செய்யவும் அனுமதிக்கப்பட்டனர். இப்போது சர்வ சாதாரணமாய், ஐரோப்பியப் பெண்களைப் போலவே ஆடை தரித்து சகல துறைகளிலும் துருக்கிப் பெண்கள் வேலை செய்வதைக் காணலாம். பெண்கள் சங்கங்கள் நிறுவப்பட்டன. அவைகளில் பிரதானமானது 'பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் சங்கம்' (The Society for the Defence of the Rights of Women). இச் சங்கம் அதி தீவிரமாக உழைத்துப் பெண்களுக்கு அநேக உரிமைகள் வழங்கும்படி செய்திருக்கிறது. பெண் தலைவிகள், பள்ளிவாசல்களிலும் இதர முக்கிய விடங்களிலும் சென்று சீர்திருத்தத்தை வற்புறுத்தி சகோதரிகளுக்குப் பிரசங்கித்தனர். கமால் இவ்விதச் சங்கங்களுக்கு விசேஷ ஆதரவு அளித்தார். தற்போது துருக்கிப் பெண்கள் அரசாங்க உத்தியோகங்களில் அமர்த்திக் கொள்ளப்படுகிறார்கள். பலர் மருத்துவம், சட்டம், சைன்ஸ் பயின்று தேர்ச்சி பெற்று வேலை செய்கின்றனர். பல தார மணம் மிகவும் அசாத்தியமாக்கப்பட்டிருக்கின்றது. ஆண், பெண் இருபாலாரும் ஒரே பள்ளிக்கூடத்தில் பக்கத்தில் உட்கார்ந்து கல்வி பயில்கின்றனர். அநேகம் பெண்கள் திறமைசாலிகளான எழுத்தாளர்களாக (Journalists) விளங்குகிறார்கள். அவர்களில் 'காலிதா கானம்' என்னும் பெண்மணி மிகவும் பிரசித்தி பெற்றவர்.

1924-ம் வருஷம் மார்ச்சு 3உ உலக முஸ்லிம்கள் திகைக்க மத குருவாகிய கலிபாவின் ஸ்தானம் ஒழிக்கப்பட்டு விட்டது என்று துருக்கியிலிருந்து செய்தி எட்டியது. மதஸ்தாபனங்கள் யாவும் கலைக்கப்பட்டன. பள்ளிவாசல்கள், மதப் பள்ளிக்கூடங்கள் இவைகளுக்கிருந்த மானியங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதைக் கண்ட துருக்கியின் கிழக்கில் வதியும் குர்திஸ்தான் வாசிகள், 'முஸ்தபா கமால் இஸ்லாத்தை ஒழிக்க முற்பட்டிருக்கிறார்' என்று பெருங் கிளர்ச்சி செய்தனர். 'ஷேக்செய்யித்' என்பாரின் தலைமையில் 1925-ம் வருஷம் எழுந்து சில நகரங்களையும் பிடித்தனர். ஆனால் அவர்கள் சில நாட்களில் அடக்கப்பட்டு விட்டார்கள்.

முஸ்தபா கமால் அத்துடன் நிற்கவில்லை. முஸ்லிம்களின் ஓய்வு நாளாகிய வெள்ளிக் கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக்கினார். பள்ளிவாசலில் நாற்காலிகள் மேஜைகள் போடும்படி செய்து 'பூட்ஸ்' காலுடன்போய்த் தொழ அனுமதியளித்தார். நபிகள் நாயகத்தின் வாளை (?) பொருட்காட்சிசாலை (Museum)க்கு அனுப்பினார். துருக்கித் தொப்பியை எடுத்துவிட்டு 'ஹாட்' உபயோகிக்கும்படி சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வெள்ளையர் ஆடும் ஆண், பெண் 'டான்ஸு'ம் துருக்கியில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது ஐரோப்பாவுக்கும் துருக்கிக்கும் ஒருவித வித்தியாசமுமில்லை. சமீபத்தில் துருக்கிப் பெண் உலக அழகுப் போட்டியில் முதன்மை பெற்றதை நேயர்கள் அறிந்திருக்கலாம்.

இந்தத் தலைகீழான மாறுதல்களை ஏற்படுத்தியதால், உலக முஸ்லிம்களின்—சிறப்பாக இந்திய முஸ்லிம்களின் அபிமானத்தை முஸ்தபா கமால் இழந்துவிட்டார் என்றே சொல்லலாம். இவ்வளவு தூரம் போகவேண்டியதில்லையென்பது முஸ்லிம்கள் அபிப்பிராயம். 'அல்லா' வென்னும் அரபி வார்த்தையைக் கூட துருக்கி பாஷையில்தான் ஓத வேண்டுமென்று கட்டளையிட வேண்டிய அவஸியமில்லை. கீழ் நாட்டு நாகரீகத்திலிருந்தும், மேல் நாட்டு நாகரீகத்திலிருந்தும் நன்மை பயப்பன வற்றை மட்டும் எடுத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனமாகும். அதுதான் தற்கால முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. அதன்றி கீழ் நாட்டு இஸ்லாமிய நாகரீகத்தை அறவே கைவிட்டு, முழுதும் வெள்ளையர் நாகரீகத்தை அனுசரித்து வெள்ளையரிடம் காணப்படும் தீமைகளையும் எடுத்துக்கொள்வது அவசர புத்தியே யாகும். கமால் செய்த பெருந் தவறு இது ஒன்றே.

யுத்தங்களால் துருக்கியில் விவசாயம் க்ஷீணித்திருந்தது. நவீன விவசாய முறைகள் இன்னும் துருக்கியில் தோன்றாமலிருந்தன. காஜி கமால், தானே ஒரு விவசாயியாக மாறி, ஒரு மாதிரிப்



பண்ணையை ஏற்படுத்தினார். நவீன இயந்திரங்களை நிலங்களில் உபயோகித்து ஜனங்களுக்குக் காட்டினார். விவசாய பாங்கிகள் ஸ்தாபித்து விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துதவி இயந்திரங்களை வாங்கும்படி செய்தார். சர்க்கார் செலவில் இயந்திர நிபுணர்களை அனுப்பி விவசாயிகளுக்குத் துணை புரியும்படிச் செய்தார். சில கம்பெனிகள் தோன்றி வித்துக்கள் விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்து உதவின. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இரவிலும் விளக்குகள் போட்டுக்கொண்டு விவசாயிகள் உழுது சாகுபடி செய்தனர். புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த நிலங்களெல்லாம் பண்படுத்தப்பட்டன. இப்போது துருக்கி விவசாயத்தில் விருத்தியடைந்திருக்கிறது. 'அதினா' ஜில்லாவில் உயரிய பருத்தியும், ஸ்மர்னாவில் நேர்த்தியான அத்திப்பழங்களும் சாம்ஸுனாவில் சிறந்த புகையிலையும் விளைவிக்கப்படுகின்றன. இவைகள் ஐரோப்பாவில் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. இப்போது அரிசி, கோதுமை, பார்லி அதிகமாகப் பயிரிடப்படுகின்றன.

போக்குவரத்துக்குச் சாதகமாக சௌகர்யமான இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. துருக்கி, விவசாய நாடாயினும் கைத்தொழிலும் வியாபாரமும் ஓங்கும்படி திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கைத்தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. கைத்தொழில் வளர்ச்சியைக் கருதி தொழிற்சாலைகளுக்குத் தொழில் வரி விதிப்பதில்லை. புகையிலை, தீப்பெட்டி, காகிதம், சர்க்கரை முதலிய தொழில்கள் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வருகின்றன. அநேக தொழிற்சாலைகளுக்கு அரசாங்கத்தால் பணவுதவி செய்யப்படுகிறது. கைத்தொழிலையும் வியாபாரத்தையும் கைதூக்கி விட ஒரு பாங்கியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

10 வருஷங்களுக்குள் அன்னிய முதலாளிகளுடைய முதல் இல்லாமல் ஒரு செம்புக் காசுகூடக் கடன் வாங்காமல் துருக்கி பொருளாதார முன்னேற்ற மடைந்திருப்பது காஜி முஸ்தபா கமாலின் திறமையை விளக்குகிறது. 1880-ம் வருஷம் 'சலோனிகா'வில் பிறந்த சாதாரண சிப்பாய் புத்திரரான காஜி முஸ்தபா கமால் பாஷாவிற்குத் துருக்கி, மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. கலாசாலைகளிலிருந்து எதிர்காலப் பிரஜைகள் வெளிவருவதை காஜி முஸ்தபா கமால் பாஷா ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்போதுதான், அவர் கனவு கண்டு கொண்டிருக்கும் 'துருக்கியின் தங்கக் குடியாட்சி' தோன்றும். அதுவரை அவர் உயிரோடிருக்கும்படி ஆண்டவன் அருள்பாலிப்பாராக!

---

# படிப்பு உத்தியோகத்திற்கு மட்டுந்தானா?

ஜனாப். M. K. M. மீரான் அவர்கள்.




நம் இந்தியா தேசத்தில், முக்கியமாய் நமது சென்னை மாகாணத்தில், வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாட்டப்படும் வாலிபர்களை உற்று நோக்க நோக்க என் மனம் படாத பாடு படுகிறது; கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வழிந்தோடுகிறது. என்னே! இவர்களின் பரிதாப நிலைமை. என்னே! படிக்கவைத்த இவர்தம் பெற்றோர் கதி. ஐயோ! இவரை ஈன்றெடுத்த நம் பாரதத் தாயின் நிலைமை சின்னாட்களில் என்னவாமோ.

இச் சீர் கேடுறும் நிலைமைக்கு நம் நாட்டினில் கற்பிக்கப்படும் கல்வியும் நம் நாட்டு மக்களின் மனப் பான்மையுமே காரணமென்பதை அறிவாளர் எவரும் மறுக்கார் என்பதே எனது துணிபு.

கல்வி பயிலுவது அறிவு பெறுவதன் பொருட்டன்றோ? ஆனால் நம் நாட்டு மக்கள் கல்வி பயிலுவது அடிமை உத்தியோகம் பெறுவதற்கே. அந்தோ, இவர்கள் அறியாமை இருந்தவாறென்னே! படித்தவர் யாவரும் சர்க்கார் உத்தியோகம் பெறமுடியுமா? என்னே இவர்தம் பேதமை! கல்வி கற்ற மேனாட்டு மக்களிடம் சுதந்திர உணர்ச்சி, தாய்நாட்டபிமானம், தாய் மொழிப் பற்று முதலியன தாண்டவமாடுகின்றன. கல்வியில் பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்ற நம் நாட்டு மக்களிடமோ அடிமை மகள் கூத்தாடுகிறாள். அடிமை உத்தியோகம் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். சுதந்திர தேவி இவர்களை எட்டியும் பார்க்கிறாளல்ல. கலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றவுடன் சொற்ப சம்பளத்தில் ஒரு குமாஸ்தா வேலைக்காவது போய்த் தம் வாணாளை வீணாளாக்க வழி தேடுகிறார்களே ஒழிய சுயேச்சை வாழ்க்கையில் ஈடுபடுகிறார்களல்லர். தம் வாழ்க்கைக்குப் போதுமான ஐசுவரியம் படைத்த தனவந்தரும் இந்த அடிமைத் துறையில் ஈடுபடுவது மிகவும் விசனிக்கத் தக்கது. நிற்க, வேலை கிடைக்கப் பெறாதோர



மனஞ் சோர்ந்து, உடல் மெலிந்து, வலியிழந்து, உலக வாழ்க்கையில் வெறுப்புற்று ஒன்றுக்கும் உதவாதவராகின்றனர். இவரால் இவர்தம் பெற்றோர் அடையும் துன்பத்திற்கோர் அளவில்லை. இவர்கள் படித்தும் பயன்தானென்னே! இவர்கள் பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்றதால் பிரயோஜனந்தான் யாது? இவர்கள் படித்தும் படியாதவராகின்றனன்றோ? படிப்பது உத்தியோகம் பெறுவதற்கு என்ற மனப்பான்மை நம்மவரிடம் இருக்குமளவும், எத்தனை சர்வ கலாசாலைகள் ஏற்பட்டபோதிலும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எம்.ஏ., பி.ஏ., பட்டம் பெற்றபோதிலும் நாம் ஒருக்காலும் முன்னேற்ற மடையப்போவதில்லை; நம் நாடு சுயேச்சையுறப் போவதில்லை; செல்வம், நாகரீகம் முதலியவற்றிற் விருத்தியுறப் போவதில்லை; இயற்கை யறிவு, தேகபலம், மனோவன்மை முதலியவற்றில் சிறந்து விளங்கப்போவதில்லை.

எனவே, நம் நாட்டு மக்கள் இவ் வடிமை மனப்பான்மையை அறவே ஒழிக்கவேண்டும். கல்வி பயின்றதும் அதனால் தாம் எய்திய அறிவின் திண்மையைப் பயிர்த்தொழில், கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றிற் செலுத்தத் தாராளமாய் முன்வரவேண்டும். இதற்கு நம் நாட்டு அறிஞரும் தனவந்தரும் ஆங்காங்கு வசதிகள் ஏற்படுத்தவேண்டும். பொதுமக்கள் நம் நாட்டில் செய்யப்படும் சாமான்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். தொழிலின் மகத்துவத்தை ஒவ்வொருவரும் நன்கறிய வேண்டும். சமயங்களில் தாமும் ஒரு ஆளாகச் சேர்ந்து வேலை செய்யத் தயங்குதல் கூடாது. இதனால் நாம் பெருமையும் லாபமும் அடைவோமேயன்றி ஒருக்காலும் சிறுமையுறோம். நிற்க, போதிய அவகாசம் உள்ளோரும், கல்வி கற்ற செல்வந்தரும் சுயநலஞ் சிறிதுமின்றிப் பொதுஜன ஊழியத்தில் ஈடுபடவேண்டும். இங்ஙனம் நடப்போமாகில், கூடிய சீக்கிரம் நம் நாடு பல்லாற்றானும் சிறந்து விளங்கும்; வேலையில்லாத் திண்டாட்டம் நம் நாட்டை எட்டியும் பாராதொழியும்.

---

"தங்களின் 'பாரதி' மிக்க புகழ் வாய்ந்தது; உயரியது; தேச பக்தியே தன் குறியாகக் கொண்டது. அதை அடிக்கடி நான் கண்டு புளகிதமுறுவதுண்டு. அது என்றும் வாழ்க! தங்களின் தேசத் தொண்டு வாழ்க!! தாங்களும் வாழ்க வாழ்க!!!"

—எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு,
ஆசிரியர், "பிரஜானுகூலன்."

# எனது ராமாயணம்.

(ஆனந்தா.)

நான் போகாத இடமில்லை; சலாம் செய்யாத உத்தியோகஸ்தர் இல்லை; கடைசியாக 'எமன் ஆபீஸுக்கு' விண்ணப்பம் எழுதிப் போட்டேன். அங்கிருந்தும் 'நோ வேகன்ஸி' என்றே பதில் வந்துவிட்டது. அட கடவுளே! என் விதி இப்படியா இருக்க வேண்டும். சாகவும் முடியவில்லை; பிழைக்கவும் முடியவில்லை. நான் காலத்தையும் பணத்தையும் பாழாக்கி, 'பி.ஏ.' எனும் இரண்டு எழுத்துக்களைப் பெற்றுப், பெயருக்குப் பின் கௌரவ வாலாக இணைத்துக்கொண்டு, அலையும் ஒரு பரிதாபத்திற்குரிய பிராணியாய் விளங்குகிறேன். 'நாகரீக' ஆடையில் திரியும் 'துக்கக் கூடு' என்றால் எனக்குத்தான் தகும்.

ஒருநாள் நகர பேரிரைச்சலைக் கவனியாது, வீதி வழியே என் சொந்த எண்ணங்களில் ஆழ்ந்தவனாய்ப் போய்க்கொண்டிருந்தேன். போகுமிடம் எனக்கே தெரியாது. கால்கள் எங்கோ கொண்டு போய்க்கொண்டிருந்தன.

'ஹலோ! குட் மார்னிங்!' எனும் மொழிகள் காதில் விழவே திடுக்கிட்டேன். புன்னகை பூத்த முகத்துடன் எனது பழைய பள்ளிச் சிநேகிதன் 'ரத்னம்' எதிரே நிற்பதைக் கண்டேன்.

நானும் பொய்ப் புன்சிரிப்புச் சிரித்து 'குட் மார்னிங்' என்று பதில் முகமன் கூறி, 'ஊரிலிருந்து எப்போது வந்தாய் ரத்னா?' என்றேன்.

கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்த பின் 'நீ இப்போது என்ன உத்தியோகம் செய்கிறாய்?' என்றான் ரத்னம்.

இக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது ஏற்படும் மனக் கஷ்டத்தை ரத்னம் அறியான். தாலுகா குமஸ்தாவாயிருக்கும் அவனுக்கு, வேலையில்லாமல் அலையும் என் மன நிகழ்ச்சிகளை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? என்னிலையை அறியாமல் என் நெஞ்சத்தி



லுள்ள புண்ணைக் கிளறிவிட்டான். முகத்தில் விசனக் குறி ஒன்றும் தோன்றாவண்ணம் சமாளித்துக்கொண்டு 'பொருளாதார நிபுணர்களின் மூளைக்கு வேலை கொடுக்கும் வேலையில்லாப் பட்டாளத்தின் ஜமேதார் உத்தியோகம் பார்க்கிறேன்' என்றேன்.

ரத்னம் ஒரு கணம்வரை என்னை ஏற இறங்கப் பார்த்து, 'இன்னும் ஒரு வேலையும் கிடைக்கவில்லையா?' என்றான்.

"இல்லையப்பா, இல்லை! உனக்கு சிபார்சு செய்யக்கூடிய 'ஆபீஸர்கள்' பந்துக்களாய் வாய்த்திருப்பதால் 'பிரைஸ்' அடித்துவிட்டாய். நான் இன்னும் 'லாட்டரி' போட்டுக்கொண்டிருக்கிறேன் பொன் காய்க்குமென நினைத்து, உள்ள செல்வத்தையெல்லாம் ஒரே மரமாகிய எனக்குப் பாய்ச்சிவிட்டு அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் தாய் தந்தையருக்கு நல்ல பாடம் கற்பித்துக்கொண்டிருக்கிறேன். என்னைப் படிப்பித்தது தமது கடமையெனக் கொள்ளாது, எனக்காகச் செலவழித்த பணத்தை, வட்டியை எதிர்பார்த்துக் கொடுத்த கடனைப்போல் நினைத்துக்கொண்டிருந்தால், அதற்குத் தக்க தண்டனை இதுதானே! இல்லையா?" என்றேன்.

மேற்கண்ட சம்பாஷணை நடந்த இரண்டாவது மாதம் தாய் தந்தையரிடம் சொல்லாமல் புறப்பட்டு வந்து வேற்றூரில் ஒரு ஹோட்டலின் மேல்மாடியிலுள்ள அறையில் தங்கியிருக்கிறேன். நான் செய்தது சரியோ, தப்போ அதைச் சொல்லத் தயாராயில்லை.

இரவு ஒன்பது மணியிருக்கும். ஊரெல்லாம் அலைந்துவிட்டு ஆயாசத்தோடு ஹோட்டலுக்குத் திரும்பினேன். ஆடைகளைக் களைந்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். கைக்குட்டையால் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டிருந்தேன். அறையின் கதவு திறந்தது; ஹோட்டல் சொந்தக்காரர் உள்ளே வந்தார்.

'என்ன சார்! ரூபாய் ஏன் இன்னும் தரவில்லை?' என்றார் அழுத்தமான குரலில்.

'தயதுசெய்து மன்னிக்கவேண்டும். இன்னும் நாலைந்து நாட்களில் கொடுத்துவிடுகிறேன்' என்றேன் கெஞ்சும் தோரணையில்.

'அதெல்லாம் முடியாது. பணம் வைத்துவிட்டு வேறு காரியம் பாருங்கள். எத்தனை நாள் பொறுப்பது? நீங்கள் என்றுதான் இத்தனை நாள் காத்திருந்தேன்! பணம் நாளைக்குள் வந்தாலாச்சுது இல்லாவிட்டால்............முடியாது' என்று கடுகடுத்த முகத்துடன்

சொல்லிவிட்டு, பதிலை எதிர்பார்க்காமல் கதவைச் சாத்திக்கொண்டு போய்விட்டார்.

ஆண்டவனே! நான் இடிவிழுந்து இறந்துபோகக் கூடாதா? இன்னும் உயிரோடிருக்கிறேனே! என்று நினைத்தேன். என் இரு கைகளும் குரல்வளையைப் பிடித்தன. துக்கம் தொண்டையை அடைத்தது. முத்துக்கள்போல் கண்ணீர்த் துளிகள் ததும்பிக் கன்னங்களில் வீழ்ந்து ஓடின. உடம்பு முழுதும் வியர்த்தது. நான் எங்கிருக்கிறேன் என்ற உணர்ச்சிகூட இல்லாது சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். ஒரு ஆவேசம் தோன்றிற்று. மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. பல எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாய்த் தோன்றி மறைந்தன. என்னென்னவோ நினைத்தேன்.

திடீரென எழுந்து பெட்டியைத் திறந்து, எனது நற்சாட்சிப் பத்திரங்கள் யாவையும் எடுத்தேன். ஒவ்வொன்றாக வாசித்தேன். ஒவ்வொரு வார்த்தையும் என்னை ஸ்தோத்திரம் செய்து நின்றது. இன்றும் பயனென்ன?

'எனது வாழ்க்கையை வீணே உயர்த்திவிட்டு, அவ் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் சம்பாதிக்க உத்தியோகம் வாங்கித் தராது கிடக்கும் காகிதங்கள் இருந்தென்ன? போயென்ன? இவைகளன்றோ சரீர உழைப்பை இழிவாகக் கருதச் செய்கின்றன! என் அந்தஸ்துக்கேற்ற மின்சார விசிறியின் கீழ் அழகான ஆபீஸுக்குள் நாற்காலிமீது உட்கார்ந்து, வியர்வை வெளிப்படாமல் செய்யும் வேலையைத் தேடச் செய்கின்றன!

அவைகளைத் தரையில் வைத்தேன். சீக்கிரம் எரிந்துபோவதற்காகக் கொஞ்சம் எண்ணெய்யைக் கொட்டினேன். தீக்குச்சியைக் கிழித்து அவைகளிடம் நீட்டினேன். 'பக்'கெனப் பற்றிக்கொண்டன.

'ஆ! எனது 'சர்டிபிகேட்டுகள்' எரிகின்றன! நான் படாதபாடெல்லாம் பட்டுப் பெற்ற காகிதங்கள் சாம்பலாகின்றன! அந்தோ! என் நெஞ்சம்!...........என் இப்படிச் செய்தேன்?'

எனது இரு கைகளும் எரியும் காகிதங்களை அணுகின. ஆனால் கொடிய அக்கினி ஜ்வாலைகள் பாம்புகளைப்போல் ஆக்ரோஷத்துடன் எழும்பித் தீண்டின. கைகளைப் பின்னுக் கிழுத்தேன். என்னால் பூதமாகிய நெருப்பிற் கிரையாகிக்கொண்டிருந்த காகிதங்களைக் காப்பாற்ற முடியவில்லை.

அடுத்த நிமிஷம் தீயணைந்தது. எரிந்த காகிதங்கள் என் முன் கிடந்தன. ஆவேசத்தோடு வாரி எடுத்தேன். ஐயோ, என் பகல்



கோட்டைக்குக் காரணமாயிருந்த காகிதங்கள் சாம்பலாகிவிட்டன! அத்துடன் என் எதிர்கால ஒய்யார வாழ்க்கையும் சாம்பலாகிவிட்டது. 'தூ'வென அவைகளை எறிந்துவிட்டு எழுந்தேன்.

என் மனம் அசாதாரண நிலையிலிருந்தது. கதவைத் தாளிட்டேன்; ஜன்னல் கதவுகளைச் சாத்தினேன்; அங்கு கிடந்த கயிறு ஒன்றை எடுத்துச் சீக்கிரம் சீக்கிரமாக சுருக்குப் போட்டுத் தொங்கவிட்டேன். ஆம்! நான் இந்த உயிரை உடலில் வைத்துக்கொண்டு, இதற்காக இவ்வளவு சிரமப்படுவானேன்? என் ஆவியை இடையறாத் துன்பங்களிலிருந்து விடுதலை பெறச் செய்ய விரும்பினேன். காரியத்தை முடித்துவிட என் கைகளால் சுளுவில் சுருக்குப் போட்டுத் தொங்கவிட்ட பின், ஒரு நாற்காலியை எடுத்து வைத்து ஏறப் போனேன். என் நெஞ்சம் விவரிக்கொண்ணா நிலையிலிருந்தது. ஹோட்டல்காரர் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வர முயலுவதைப்போல் நினைத்துத் திடுக்கிட்டேன். போலீஸ்காரர் ஜன்னல் வழியாய்க் குதித்து என்னைப் பிடிக்க வருவதைப்போலும் கனவு கண்டேன். தாய் தந்தையர் அழுது புலம்புவதைப்போல் எண்ணினேன். சீ! இதென்ன சித்தப்பிரமை! என்று நாற்காலியில் ஏறி நின்றேன். அந்தோ! உயரம் போதவில்லை. கீழே யிறங்கி ஒரு பெட்டியை நாற்காலிமீது எடுத்து வைத்து ஏறினேன். கால், பெட்டியின் ஓரத்தில் பட்டதால் பெட்டி கீழே கவிழ்ந்தது; அத்துடன் நானும் கீழே வீழ்ந்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். மூர்ச்சை தெளிந்து கண் திறந்து பார்த்தபோது நான் படுக்கையில் கிடந்தேன். என்னைச் சுற்றிலும் ஹோட்டலிலுள்ளவர்கள் சூழ்ந்து நின்று என் முகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தனர்.

அந்தோ! நான் மீண்டும் இந்தப் பாழும் லோகத்திலா கண் விழிக்கவேண்டும்? நாமொன்று நினைக்க அதுவொன்றாய் முடிகிறதே! இவர்களை நான் எப்படி ஏறிட்டுப் பார்ப்பது? கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதிலளிப்பது? கையுங் களவுமாய்ப் பிடிபட்ட கள்வனைப்போல் விழித்தேன். கண் திறந்து மூடிக்கொண்டதைக் கண்டதும் ஹோட்டல் சொந்தக்காரரின் முகம் மலர்ந்தது.

'சார்! சார்!' என்றார் என்னை நோக்கி. நான் பதிலளிக்கவில்லை. 'சார்! இப்போது எப்படியிருக்கிறது?' என்றார் மறுபடியும். என்ன சொல்லுவது? வியாதியஸ்தனைப்போல் பாவனை செய்து எல்லாரையும் போகும்படி சைகை செய்தேன்.

'இருந்தாலும் இப்படிச் செய்யலாமா? யார் பெற்ற பிள்ளையோ! அந்தப் பணம் என் கால் தூசிக்குச் சமானம். அது இன்று கிடைக்கும்; நாளைப் போய்விடும். உயிர் கிடைக்குமா? இந்தக் காரியம்

செய்ய முற்படலாமா?' என்று மூச்சு விடாமல் என்னென்னவோ சொல்லிக்கொண்டே போனார் ஹோட்டல்காரர்.

*　*　*　*

மேற்கண்ட சம்பவத்துக்குப் பின் இன்று பத்து வருஷங்கள் கடந்துவிட்டன. இப்போது எனது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தில் உழலவில்லை. பிரபல வியாபாரியாயும் பெரிய பால் பண்ணை முதலாளியாயும் விளங்குகிறேன். ஊர் பிரபலஸ்தர்களில் நானும் ஒருவன் ஆகிவிட்டேன். என்னிடம் பலர் வேலை பார்க்கிறார்கள். இரண்டு 'பி.ஏ.'க்கள் கூடக் கணக்கெழுதுகிறார்கள்.

இந்த மாறுதலுக்குக் காரணம் என்ன? சொல்லுகிறேன்; கேளுங்கள்:

ஹோட்டல் அறையில் நடைபெற்ற சம்பவங்களுக்குப் பின் எஞ்சியிருந்த கைக்கெடியாரத்தை விற்றுக் கடனைத் தீர்த்துவிட்டு, மறுநாளே வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். தாய் தந்தையர் என்னை எங்கெங்கோ தேடி அலுத்துப்போய், ஊணும் உறக்கமுமின்றி எலும்புக் கூடுகள்போல் காணப்பட்டனர். நான் ஓரே அருமைப் புதல்வன்; அவர்களுடைய விருத்தாப்பிய திசையில் நான்தான் ஒத்தாசை செய்யவேண்டியவன்; என்மீது அவர்கள் அழகான பகற் கோட்டைகள் கட்டியிருந்தனர். என்னைக் கண்டதும் 'ஆ! மகனே!' என்று என்னைக் கட்டிக்கொண்டு புலம்பியதை விவரிக்க வேண்டியதில்லை.

நான் கற்ற கல்வியை மறந்தேன். எஞ்சிய சொத்தை விற்று ஒரு வெத்திலை பாக்குக் கடை வைத்தேன். ஆம்! நேயர்களே! ஒரு வெற்றிலை பாக்குக் கடைதான் வைத்தேன்! அந்த கௌரவம், அந்த அதிகப்படியான படிப்பு மமதை எல்லாம் ஒழித்துவிட்டேன். பொது ஜனங்கள்—மூடப் பொது ஜனங்கள் நகைத்தால் நாம் அதற்காக நாண்கொண்டு செத்துப் போவதா? இதுவரை நான் பட்டபாடு எனக்குத் தெரியும்! யார் எப்படிப் பேசினாலும் எனக்கென்ன? கடை வைத்த பின்பும் சிலர், நான் கடைக்குப் போகும்போது 'உத்தியோகஸ்தர் ஆபீஸுக்குப் போகிறார்' என்று ஏளனம் செய்தனர். நான் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

நல்ல இடம் பார்த்துக் கடை வைத்ததால் வியாபாரம் சுமாராக நடக்கலாயிற்று.

மிகவும் செட்டாக வாழ்ந்ததாலும், வியாபாரம் செய்வதோடு சில 'கம்பெனி'களுக்கு ஏஜண்டாக இருந்து உழைத்ததாலும் கொஞ்



சம் பணம் மிச்சம் பிடித்தேன். ஓய்வு வேளைகளில் பல புத்தகங்களும் பத்திரிகைகளும் படிக்கத் தொடங்கினேன். என் கண்கள் திறக்க ஆரம்பித்தன. நான் படித்திருந்த பள்ளிப் படிப்பு செல்லாக் காசு பெறாதென்பதை உணர்ந்தேன். இனிமேல்தான் கல்வி கற்கப் போவதாக எனக்குத் தோன்றிற்று. 'சரீர உழைப்பால் சம்பாதிக்கும் பொருள்தான் நியாயமான சம்பாத்யப் பொருள்' என்று பல ஞானிகள் எனக்குப் போதிப்பதாய் உணர்ந்தேன்.

கடை வைத்த சில வருஷங்களில் அடமானம் வைத்திருந்த நிலங்களை மீட்டினேன். நெல் விளைந்து வந்த அந்த நிலங்களில் ஒரு பாகத்தில் வெற்றிலைக் கொடிக்காலும் மற்றொரு பாகத்தில் வாழைத் தோட்டமும் உண்டாக்கினேன். தந்தையைக் கடையில் உட்கார வைத்துவிட்டு நானே வயல்களுக்குச் சென்று வேஷ்டியை வரிந்து கட்டி வாய்க்கால்கள் வெட்டினேன்; நீர்ப் பாய்ச்சினேன். இதர எல்லா வேலைகளையும் செய்தேன்.

கடும் வெயில் 'சுளீர்' என்று என் முதுகில் தாக்கிற்று; கால்கள் சேற்றில் புதைந்தன; கைகளில் முட்கள் தைத்தன. அந்த அழகான குடை! அந்த நேர்த்தியான உடை! அந்த ஒய்யார நடை! அந்த க்ஷவரக் கத்தி! அந்த 'ஸ்நோ' எல்லாம் பறந்தன. நெற்றி வியர்வை நிலத்தில் வீழ்ந்தது. கஷ்டப்பட்டு ஊக்கத்தோடு விடாமல் வேலை செய்வேன்; கொஞ்சம் மரத்தடியில் இளைப்பாறுவேன்; என்னுடைய சரீர உழைப்பில் பெருமை கொள்வேன். இவ்வாறாகக் கொஞ்ச காலம் சென்றது. பாரதமாதா என்னை ஆசீர்வதிப்பதாகக் கனவு கண்டேன்.

என் உழைப்பிற்குத் தக்க ஊதியம் கிடைத்தது. என் பொருளாதார நிலை சற்று உயர்ந்தது. சில பசுக்களும் எருமைகளும் வாங்கிப் பால் கறந்து 'காபி கிளப்பு'களுக்கு விற்று வந்தேன்.

விவரிப்பானேன்? இப்பொழுது அந்த வெற்றிலை பாக்குக் கடையில்லை. ஒரு பெரிய 'சுதேசி ஸ்டோர்' வைத்து நடத்துகிறேன். சுதேசி சாமான்களும் சுதேசி ஜவுளியும் ஏராளமாய் வியாபாரம் செய்கிறேன். பக்கத்திலேயே எனது பால் பண்ணையும் இருக்கிறது. நல்ல வருவாய் கிடைக்கிறது. ஏற்கெனவே சொன்னது போல் சில பட்டதாரிகளும் என்னிடம் வேலைக்கிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் சுதேசி சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை யொன்றை நிர்மாணிக்கவும் உத்தேசித்திருக்கிறேன்.

நேற்று மாலை என் 'சுதேசி ஸ்டோரில் உட்கார்ந்திருந்தபோது, எலும்புக் கூடு போன்ற ஒருவர் குறைந்த கூலியில் கீழ்த்

தரமான தையற்காரனிடம் தைத்த 'கோட்' ஒன்று போட்டுக் கொண்டு தன்னைப் போன்ற தோற்றமுடைய இரண்டு சிறு பையன்களை அழைத்துக்கொண்டு வந்தார். அவரை உற்று நோக்கினேன். மிகவும் பழக்கப்பட்ட முகம் போல் தோன்றியது. ஒரு கணம் ஒருவரை யொருவர் பார்த்தோம். நெடுநாளாய் மறந்து போயிருந்த சிநேகிதரின் ஞாபகம் வந்தது. 'ரத்னா!' என்றேன் ஆவலோடு அந்தப் பரிதாபத்திற்குரிய மனிதரைப் பார்த்து, ஆம் ரத்னம்! பத்து வருஷங்களுக்கு முன், வழியில் தோன்றி 'இன்னம் வேலை கிடைக்கவில்லையா?' என்று இரங்கிய தாலுகா குமஸ்தாவாகிய அந்த ரத்னசாமியே.

'வாருங்கள்! வாருங்கள்! உட்காருங்கள். என்ன இப்படி அடையாளமே தெரியவில்லை. சௌக்கியந்தானா?' என்று என்னையே பார்த்துக்கொண்டிருந்த ரத்னசாமியை நோக்கிக் கேட்டேன்.

நெடுநாள் பிரிந்திருந்த அன்பர்கள் கூடினால் கேட்கவேண்டுமோ? அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தோம் எனது நிலையைக் கண்டு ரத்னசாமி ஆச்சரியப்பட்டார். ஆம்! ஆச்சரியந்தான் படவேண்டும். எனது ராமாயணம் முழுதும் எடுத்துச் சொன்னேன். 'யாரடா! அங்கே? தாம்பூலத் தட்டு கொண்டுவா!' என்றேன். தட்டு வந்தது. ரத்னசாமி வெற்றிலை போடத் தலைப்பட்டார். 'இப்போது தாலுகா ஆபீஸில்தானே இருக்கிறீர்?' என்று வினவினேன்.

'ஆம்! என் பாட்டை ஏன் கேட்கிறீர்கள்? செக்கு மாட்டைப் போல் அந்தத் தாலுகா ஆபீஸிலேயே உழைத்துக்கொண்டிருக்கிறேன். ஆபீஸுக்குப் போனால் அந்தக் காகிதக் கட்டு! அந்தத் தாசில்தார்! வீட்டுக்கு வந்தால் குழந்தைகளும் மனைவியும். இவைகளன்றி இது இல்லை, அது இல்லை எனும் மனோ வேதனை! வெளியே புறப்பட்டால் கடன்காரர்கள் உபத்திரவம்! அம்மம்ம! இந்த நரக லோகத்தில் இன்னும் ஏனோ வாழ்கிறேன்? என்று எனக்கே தெரியவில்லை' என்று அவர் பாரதத்தை விரித்தார்.

'இப்போது என்ன சம்பளம் வாங்குகிறீர்கள்?' என்றேன்.

'அதைச் சொல்வானேன்! ஐம்பது ரூபாய் வாங்கிக்கொண்டிருந்தேன். 'ரிட்ரெஞ்ச்மெண்டில்' (சம்பள வெட்டில்) ஐந்து ரூபாய் குறைந்துவிட்டது' என்று பதிலளித்தார்.

அப்போது எனக்கு எப்படியிருந்ததென நினைக்கிறீர்கள்! மெய்யாகவே சர்வத்தில் மூழ்கினேன். நான் அந்தமாதிரி உழைத்

# கவிச் சக்ரவர்த்தி தாகூரது கடிதம்.

அன்பார்ந்த மகாத்மாஜி! கல்லும், காரையும் சேர்ந்த ஓர் கட்டிடத்திற்குள் தெய்வத்தை அடைத்து வைப்பதென்பதை நான் விரும்பவே இல்லை என்பதைக் கூறத் தேவையில்லை. ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மற்றவரை சுரண்டுவதற்காக இவ்விதம் செய்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஓர் வெட்ட வெளியில் எவ்விதத் தடையுமின்றி, சாதாரண மக்கள் தெய்வ சாந்நியத்தியத்தை உணர்வது சாத்யமேயாகு மென்பது எனது திடமான நம்பிக்கை. வங்காளத்தில் ஓர் வகுப்பினரை ஆலயத்திற்குள் அனுமதிக்கவில்லை. அவ் வகுப்பினர் கல்வி யறிவற்ற பாமரரே எனினும், பிராம்மணர் ஆதிக்கத்திற்கும் ஆசாரங்களுக்கும் உட்படாமல், தெய்வ வணக்க சம்பந்தமாய் விரிவானதோர் முறையைப் பின்பற்றி வருகிறார்கள்.

தெய்வ வழிபாடு சம்பந்தமாய்ச் சில அனுஷ்டானங்களைப் பின்பற்றுவதில் மத ஒழுக்க முக்கியத்வம் இல்லை. வழக்கத்தைத் பின்பற்றுவதால், வழிபடுபவர்கள் மனதில் ஓர்வித உணர்ச்சி ஏற்படுவதே முக்கியமாகும். அவர்களுடன் நியாயம் பேசினால், அதை அவர்கள் சற்றும் மதிப்பதே இல்லை. நமது ஜாதி, அனுஷ்டானம், பழக்க வழக்கங்கள் இவைகளுக்குப் பல தாழ்வானதும், பொருளற்றதுமான கட்டுக் கதைகள் ஆதாரவா யிருப்பது தாங்கள் அறிந்ததே யாகும்.

ஆலய வழிபாடு சம்பந்தமாக, மதப் பழக்க வழக்க மென்று ஏற்பட்டுள்ளது. அவ்வித வழக்கங்கள் ஒழுக்க முறைக்கு மாறான

---

திராவிடன் இன்று இந்த ஆனந்தம் அடைய முடியுமா? அந்தோ! அந்த ஹோட்டல் சம்பவம்! இறந்துபோயிருந்தேனானால் என்ன நேர்ந்திருக்கும்?

சீ! தற்கொலை என்ன கோழைத்தனம். வாழ்நாளில் நம்மை எதிர்க்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் எனும் போலி பூதங்களைத் தைரிய வாள் கொண்டு வெட்டி வீழ்த்தி முன்னேறிச் செல்லுவதுதான் வீரம்! அவைகளை எதிர்த்து நிற்க அஞ்சி, நாமே ஆண்டவனால் அருளப்பட்ட அரிய உயிரை மாய்த்துக்கொள்ளுவது என்ன கோழைத்தனம்! என்ன அறியாமை!

தாகவும், தீங்கிழைப்பதாகவும் இருப்பினும்கூட அவைகளை அலட்சியம் செய்வதற்கில்லை. அவைகளை விரிவாக்கித் திருத்தியமைக்கவேண்டியது அவசியமாகும். என்ன முறை பின்பற்றுவதென்பது பற்றி அபிப்பிராய பேதமிருக்கலாம். வழக்கங்கள் மாறாதபடி அதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் பேர்வழிகள் ஆலயங்களில் விக்கிரக ஆராதனையை ஒரு சில ஜாதியார் மட்டும் செய்ய அனுமதித்து வருகின்றனர். கிறிஸ்தவர்களையோ அன்றி முஸ்லிம்களையோ அனுமதிக்காதது ஒருபுறமிருக்க, தங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஜாதியினரையும் ஆலயத்திற்குள் அனுமதிக்க மறுக்கின்றனர். அவ் வாலயங்களையும் அதிலுள்ள விக்கிரகங்களையும் தங்கள் சொந்த சொத்தாகப் பாவித்து, விக்கிரகங்களை இரும்புப் பெட்டிக்குள் பூட்டியும் வைத்துக் கொள்ளுகிறார்கள். இவ்விதம் செய்ய அவர்களுக்குப் புராதன பழக்க வழக்கங்கள் இடமளிக்கிறது. ஒழுக்க முறைக்கு மாறான இவ்வித வழக்கங்களைத் திருத்த முயலும் ஓர் சீர்திருத்தக்காரர் நிர்ப்பந்தம் செய்ய முடியாது. ஆனால் சீர்திருத்தக்காரர்கள் ஒழுக்க முறை சக்தியைப் பிரயோகித்து விடாமல் முயற்சி செய்ய வேண்டும். இவ்விதப் போராட்டம் அவசியமாகும். இவ் விஷயத்தை ஸ்ரீ. தாக்கர் தெளிவாகக் கூறவில்லை என்று நினைக்கிறேன்.

## தனி இடமேன்?

"சாந்திநிகேதன்" பிரார்த்தனை மண்டபத்தில், எம் மதத்தினரும் தாராளமாக வரலாம். மரங்களின் கீழோ அன்றி வெட்ட வெளியிலோ எங்கள் தெய்வப் பிரார்த்தனையை நடத்தலாம். இதனால் தெய்வ வழிபாட்டின் தன்மை மேலாகுமே யன்றி, சற்றும் குன்றாது. சீதோஷ்ண நிலை காரணமாகவே தெய்வ வழிபாட்டிற்கு ஓர் கட்டிடம் வேண்டியிருக்கிறது. இன்றேல், தெய்வத்தைப் பிரார்த்தித்து வழிபடத் தனி இடங்கள் அவசியமில்லை.

"ஹரிஜனம்" பத்திரிகையை நான் மிக சந்தோஷத்துடனும் ஊக்கத்துடனும் படித்து வருகிறேன். இந்தியாவில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள், தங்கள் மகத்தான பட்டினியின் பயனாக விழித்தெழுந்து வருவதைவிட, இந்தியாவுக்கு நம்பிக்கை அளிக்கும் அறிகுறி வேறொன்றும் இருக்க முடியாது. வணக்கம்

(ஹரிஜனம்) தங்கள் உண்மையுள்ள

ரவீந்திரநாத தாகூர்

---

# வாடா மலர்கள்.

தொகுத்தவர்: ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி,"

அன்பே, காலையிலும் மாலையிலும் தோன்றும் நட்சத்திரம். அன்பே, அழகுக்குத் தாய். கவிக்கும் தேசாபிமானிக்கும் தத்துவ ஞானிக்கும் அதுவே உற்சாகமூட்டுவது. சலித்துப் போன ஆத்மாக்களுக்கு அதுவே காற்றும் வெளிச்சமுமாய்த் திகழ்வது. ஒவ்வொரு குடும்பத்தையும் வளர்ப்பதும், அடுப்பில் நெருப்பெழச் செய்வதும் அவ்வன்பே யாகும். அமர வாழ்வின் முதற் கனவு அதுவே. அன்பினால் உலகமெல்லாம் இன்பத்தில் மூழ்குகிறது. ஏனெனின் அன்பின் ஒலியே சங்கீதமாகும். பயனற்ற, சக்கையாய்ப் போன வஸ்துக்களுக்கு இன்பமூட்டுவது அன்பேயாகும். இருதயமாகிற மலரின் வாசனையே அன்பு; அந்த அன்பு நம்மிடத்தில் இருந்தால், இந்தப் பூலோகமே நமக்குச் சொர்க்கம்; நாமே கடவுள்.

—எல்பர்ட் ஹப்பார்ட்.

அரசியல் மாத்திரமே மனிதனுடைய வாழ்க்கை யன்று; அதுவும் மனித வாழ்க்கையின் முக்கியமான பாகம் அல்ல. அரசியல் விஷயங்களும் பொருளாதார விஷயங்களுமே இக் காலத்தில் இந்திய நாட்டில் முதன்மையாகக் கவனிக்கப்படுகின்றன. இந்திய நாட்டுடன் பிரிட்டிஷாருடைய சம்பந்தமானது வியாபாரத் துறையிலும் அரசியல் துறையிலுமாக இருத்தலால் இந்தியர்களுடைய வாழ்க்கையின் பிற அம்சங்கள் கவனிக்கப்படாமலிருக்கின்றன. ஆனால் நாம் இந்தியாவை உண்மையாக அறிவோமானால் அதனை ஆத்ம ஞானமுள்ள நாடாகவே நாம் காண்போம். இந்தியர்களுடைய வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் ஆத்ம ஞானமே.

—சர். பிரான்சிஸ் எங்ஹஸ்பெண்டு.

தேசத்தின் கதிமோட்சம் இளைஞர் வசம் தானிருக்கின்றது. ஆதலால் அவர்கள் தைரியத்துடன் தேச விமோசனத்துக்காகப் பாடுபட வேண்டும்.

—டாக்டர் பெஸண்டு.

நாட்டின் முன்னேற்றத்திற்குச் சமூக உணர்ச்சி ஒரு பெரிய முட்டுக் கட்டையாகும். ஓர் காலத்தில் நான், என்னையொரு காஷ்மீர பிராமணன் என்று பெருமையாகக் கூறிக்கொண்டதுண்டு. அந்த உணர்ச்சியை மறந்துவிட வெகுவாக முயற்சித்தேன். அநேகமாக இப்பொழுது அம் முயற்சியில் வெற்றி யடைந்துள்ளேன். நான் ஒரு இந்தியன் என்ற உணர்ச்சிதான் இப்பொழுது தலையெடுத்து நிற்கிறது. காஷ்மீர் பிராமணர் மகா நாட்டிற்கு நான் விஜயஞ் செய்து எத்தனையோ வருடங்களாகின்றன. ஆனால் வருடந்தோறும் அம் மகாநாடு நடைபெறுவது நிற்கவில்லை. ஏன் இந்த மகாநாடு வருடந்தோறும் கூட்டப்படுகிறதோ அறியேன். சமூக ஸ்தாபனங்கள் மூலமாகச் சில வேலைகள் நடைபெற முடியுமென்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் சமூகவாரியான ஸ்தாபனங்களை ஒழித்து, இந்தியர் என்ற தோரணையில் எல்லோரும் ஒன்றுபட்டுழைக்க வேண்டிய காலம் கிட்டிவிட்டது. நாம் ஒற்றுமைப்பட்ட ஒரே ஜாதியாராக வேண்டுமானால் சமூக உணர்ச்சி தலைகாட்டவே கூடாது.

—பண்டித ஜவஹர் லால் நேரு.

எல்லா வகை அடிமைத்தனத்தினின்றும், பிறருடைய தயவால் எதையும் பெறுவதிலிருந்தும் இந்தியாவை விடுவிக்கக் கூடிய அரசியலைப் பெறவே நான் போராடுவேன். அவசியம் ஏற்பட்டால் குற்றம் செய்யும் உரிமையும் அதற்கு இருக்கும்படியானதாக அந்த அரசியல் முறை இருக்க வேண்டும். நான் கனவு காணும் பிற்கால இந்தியாவில் பரம ஏழைகளும் தங்களுடைய வாக்குக்கும் மதிப்பு இருக்கிறதென்று உணர வேண்டும். அந்த இந்தியாவில் உயர் வகுப்பும் தாழ்ந்த வகுப்பும் இராது. எல்லா சமூகத்தினரும் அன்னியோன்யத்துடன் வாழ்வார்கள். அதில் தீண்டாமைத் தீங்கும், போதை தரும் மதுபானச் சரக்குகளும் இராது. ஆடவர்களைப் போலவே மாதர்களும் எல்லா உரிமைகளையும் அனுபவிப்பார்கள். நாங்கள் பிறரைச் சுரண்டவும் மாட்டோம்; பிறர் எங்களைச் சுரண்டவும் விடமாட்டோம். ஆகையால் உலகம் முழுவதுடனும் சமாதானமாகவே இருப்போம். எனவே மிகச் சிறிய சேனை போதுமானதா யிருக்கும். அந்நியர்களோ அல்லது அதே தேச ஜனங்களோ யாராயினும் ஏழை மக்களுக்குத் தீங்கு செய்யாமலிருந்தால் அவர்கள் உரிமை பாதுகாக்கப்படும். என்னுடைய கனவில் நான் காணும் இந்தியா இதுதான்.

—மஹாத்மா காந்தி.

நாம் ஹிந்துக்களாயினும் சரி, முகம்மதியர்களாயினுஞ் சரி, பிராமணராயினும் சரி, நமக்குள் சண்டையிட்டுக் கொண்டு சுயராஜ்



யத்திற்கோர் தடை யிருக்கும்படி செய்யக் கூடாது. அவசியமானால் நமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் நாம் உயிரை விட்டாலும் விடலாம்.

—சாமி வெங்கடாசலம் செட்டியார்.

செல்வமுள்ள முதலாளியையும், போர் வீரனையும், மிக்க வலியுள்ள அரசனையும் கௌரவம் செய்தலைப் பார்க்கிலும் ஓர் ஆத்மஞானியைக் கவுரவம் செய்தலே இந்தியர்களின் மனப்பான்மையாக இருக்கிறது. தற்காலத்தில் மகாத்மா காந்தி எந்தக் காரணத்தினாலோ ஒரு வணிகச் செல்வரைப் பார்க்கிலும் ஒரு திறனுடைய ராஜ தந்திரியைப் பார்க்கிலும் ஒரு பெரிய மகா ராஜாவைப் பார்க்கிலும் இந்தியர்களால் கவுரவம் செய்யப்பட்டு அவர்கள் மீது மிக்க செல்வாக்கு உடையவரா யிருக்கிறார். அவர் ஒரு பெரிய ஆத்ம ஞானி. தூய சிந்தையுடைய ஒரு பெரியார் என்னும் காரணத்தினாலேயே அவர் இந்திய மக்களிடத்தில் மிக்க செல்வாக்கு உடையவரா யிருக்கிறார்.

—சர். பிரான்சிஸ் எங்ஹஸ்பெண்டு.

துன்பத்தைத் துடைத்துப் பகையை ஓட்டிச் சகித்தற்கரிய வறுமை நோயினையும் ஒழிக்கவல்ல வன்மையுடையது பொறையுடைமை.

—பா. இராஜேந்திர லால்.

மந்திரங்களைக் கூக்குரலிட்டுப் புலம்புவதினாலும், தேகத்தை அசைத்து வாயளவில் வெறும் பாக்களைப் பாடுவதினாலும், கண்களை மூடிக்கொண்டு உருத்திராக்க மணிகளைக் கீழ் மேலாக உருட்டுவதினாலும் இறைவனைக் காண்டலும் அவனருள் எய்தலுமரிது. பொன்னாலும், நவமணிகளாலும் விகசிதமாகச் செப்பனிடப்பெற்ற ஆலயங்களுள் இருள் சூழ்ந்த மூலையில் நின்று யாருக்கு வணக்கம் செலுத்துவது? அத்தகைய வணக்கம் இறைவனின் பக்திப் பெருக்கின்பால் அடங்காது. ஏ பாரதி! உங்கள் கண்களைத் திறந்து பாருங்கள். அவன் உங்களுக்கு முன்னர் இறைவன் இல்லையெனுந் தோற்றம் உங்கள் ஞானக் கண்ணோட்டத்துக்கு இனிது புலனாகும். விவசாயக் குடி மக்கள் எங்கு விளக்கத்துடன் தானிய அபிவிருத்தி வேலைகள் செய்கின்றனர்களோ, அங்கு இறைவன் போக்கு வரவற்று நிலவுகின்றனர். ஏழை மக்கள் மழைக் காற்றிலும், கதிரவன் வெப்பத்திலும் நின்று, கற்களை யுடைத்து வீதிகள் செப்பனிடு மிடத்திலும், ஏழை மக்கள் வதியும் குடிசைகளிலும் இறைவன் நடனமிடுகின்றனர். ஏழை மக்கள் வேலை செய்வதிலிருந்து எழுந் தூசிகளை

யும் குப்பைகளையுமே இறைவன் அணிகலனாகப் பெற்று யிலங்குகின்றனர். பரோபகார வேலை செய்யும் மக்களின் கரங்களிலிருந்து தவழும் தூசிகளிலும் குப்பையிலும் உள்ளங் களிப்புறும் இறைவன் பூக்களாலும், தீவர்த்திகளாலும் செய்யும் போலி விழாவிற்கு ஒருபோதும் உள்ளங் களிப்பெய்தார். ஓ! பாரதி!! போலி ஆடம்பர வணக்கத்தை அறவே ஒழிமின். ஏழை மக்களைப்போல் தூசிகளிலும் குப்பைகளிலும் நின்று சர்வானுகூலப் பரோபகாரத் தொண்டாற்ற முயலுங்கள். அஃதுதான் இறை பணியாற்றலின் பாலதாகும். இறைவன் தங் நலங் கருதாது சர்வ மனுக்களையும் உண்டாக்கும் பரோபகார ஆக்க வேலையில் யீடுபட்டு மூர்த்திகரம் பெற்றவர். தங்நலங் கருதாமல் சர்வ மனுக்களையும் அன்போடு ஆதரித்துப் பரோபகாரத் தொண்டாற்றும் மக்களுக்கு இறைவன் தெய்வத் திருவருள் பாலிப்பார். வெறும் அஞ்சலிக்கும், போலி வணக்கத்துக்கும், கோயில்களைக் கட்டிப் பெருமைக் கூத்தாடுவதற்கும் இறைவன் அருள் சுரக்கும் என்று எதிர்பார்ப்பது, எட்டிமரத்தின் கீழ் நின்று மாங்கனி பறிக்க முயலுவதை யொக்கும். ஓ! பாரதி!! உமது ஆடம்பர ஜெப தபத்தை விடுமின்! பூக்களால் அர்ச்சிப்பதையும், வெறுந் தூபதீப ஆலாத்தி செய்வதையும் ஒழிமின்! உமது ஆடை அழுக்கடைந்து கறையுற்றிருப்பினும் இறைவன்மனம் ஆனந்தமெய்தும். மனம் அன்பின் பெருக்கிலும், கைகள் பரோபகாரத் தொண்டாற்றுவதிலும், கண்கள் ஜீவகாருண்ய பார்வையிலும், வாய் உண்மைப் பொருளைச் சொல்லுவதிலும், கால்கள் நீத வழியுள் நடப்பதிலும் பெரிதும் பழகி, சர்வானுகூலத் தொண்டாற்றுதி! இஃதனைய தொண்டுகள் கடவுள் வணக்கமாகும்.

—ரவீந்திரநாத் தாகூர்.

பயங்கொள்ளித்தனம் விடுதலையைத் தடை செய்துவிடும். ஆயிரக்கணக்கான நமது இளைஞர்—ஆண்களும், பெண்களும்—முன்னேற்றத்தில் ஆவல் கொண்டிருந்தும், அவர்களது பயங்கொள்ளித் தனத்தாலும் கோழை மனத்தாலும் கட்டுப்படுத்தப்பட்டு அடிமைகள் போல வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தன்னம்பிக்கை யில்லை. தமக்குள் உபயோகிக்கப்படாது உறைந்து கிடக்கும் புதிய சக்திகளைப் பற்றி உணருகின்றார்கள். ஆனால் அவற்றைப் பிரயோகிக்கப் பயப்படுகின்றனர். தோல்வி யடைவோமென்ற பிற் போக்கான எண்ணமே அதற்குக் காரணம். அவர்கள் பின் வாங்குகிறார்கள்; வாயைத் திறவாது மௌனியராகின்றனர்; அவர்களது கைகள் தடுக்கப்படுகின்றன. செயலற்று சோம்பிவிடுவதால் அவர்களது அவா மழுங்கிவிடுகின்றது. நம்பிக்கை யீனத்தை நம்பிக்கையாக மாற்ற அவர்களுக்குத் துணிவில்லை. முன்னேறிச் செல்ல அவர்கள் முனைவதில்லை. நெடுகக்



காத்திருப்பதே அவர்கள் வேலை. எங்கிருந்தோ அந்தரங்கமானதொரு மந்திர சக்தி வந்து தம்மைத் தட்டி யெழுப்பி விடுவித்துத் தன்னம்பிக்கையையும், முற்போக்கையும் அளித்துவிடுமென்று எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றனர்.

—டாக்டர் O. S. மாடென்.

தாய்நாட்டு வீர மக்களே! சகோதர சகோதரிகளே!! நாம் ஒருவிதப் பயனையும் எதிர்பாராமல், பிறர்க்கு ஊழியஞ் செய்தலையே நம் கடமையாகக் கொள்ளவேண்டும்; ஊழியம் உதவி தியாகம் முதலியன இல்லாமல் நமது வாழ்வைச் சிறப்பிக்க இயலாது. நீங்கள் எங்கிருப்பினும், ஊழியஞ் செய்தே தீரவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் சமூகத் தொண்டாற்ற முன்வந்தாற்றான், நமது நாடு முன்னேற்றம் அடையும்.

—வேல்ஸ் இளவரசர்.

ஓ! இந்திய சகோதரிகாள்!! உங்களை யீன்ற தாய் இந்தியா என்பதை நீங்கள் இன்னும் அறிந்திருக்கிறீர்களில்லை. உங்கள் மூதாட்டிகளாகிய பெண்மணிகளின் வீரச் செயல்களையும், கற்பு நிறை குணப் பெருக்கையும் நீங்கள் கற்றறியவேண்டும். உங்கள் மூதாட்டிகளுள் ஒருவராகிய தமயந்தி கானில் தூரத்திய துட்ட வேடனை நீறாக எரித்தனள். அவ் வீரச் செயலை நீங்கள் செவ்வனே உணர்ந்திருப்பீர்களாயின் அட்டில் கழகத்துள்ளிருந்து வீணையை வாசித்துப் பதி பக்தி, தேச பக்திகளைக் காப்பாற்றிவிடலாமெனும் அர்த்தமற்ற கொள்கையைப் பின்பற்றமாட்டீர்கள். தமயந்தி துட்டகிராதனை எரித்தாள். சாவித்திரி நமன் கையுள் சிக்கிய உயிரைப் பறித்தாள். அனுசூயை நாரதரைப் பெண் ரூபமாக்கினாள். அம்மரபில் தோன்றிய வீரச் செயல் உங்கள்மாட்டு யாண்டு மறைவுற்றது? நீங்கள் பெற்ற மக்களுக்கு நீங்கள் கல்வி ஞானத்தைக் கற்பிக்கவேண்டும். நீங்களே கல்வி கற்காமல் கோழைப் புத்தியால் சூழ்ச்சியுற்றிருப்பீர்களாயின் நீங்கள் பெற்ற மக்களுக்குக் கல்வி ஞானம் யாண்டிருந்து முளைத்தெழும்? ஓ சகோதரிகாள்! அறியாமையின் கீழ் இன்னும் மூழ்கியிருக்க விரும்பாதீர்கள். தாய் நாட்டிற்குத் தொண்டாற்ற முற்படுங்கள்.

—சரோஜினி தேவி.

மூக்குக் கண்ணாடிகளைப் போட்டுக் கொண்டு மேஜை நாற்காலிகளில் வீற்றிருந்து நாள் முழுவதும் சொற்ப கூலிக்கு அடிமை உத்தியோகம் (குமஸ்தா வேலை) செய்யும் இளைஞர்களின் வாழ்க்கையினால் நம் நாட்டுக்கு ஏற்படக்கூடிய நன்மை ஒன்றுமே யில்லை.

அவர்களைப்போ லில்லாமல் ஒரு சொந்தத் தொழில், வியாபாரம் அல்லது இதர குடிசைத் தொழில்களை நடத்துகின்றவர்கள் உண்மையில் அதிக வருமானத்தைச் சுலபமாக அடைவதுமன்றி தேச முன்னேற்றத்திற்கும், நன்மைக்கும் உண்மையில் உழைத்தவர்களாகின்றனர். எனவே, இளைஞர்களாகிய நீங்கள் எதை விரும்புகின்றீர்கள்? அடிமைக் குமஸ்தாக்களாக இருக்க விரும்புகின்றீர்களா? அல்லது சுயேச்சையுடன் தேச முன்னேற்றத்திற் கவசியமான துறைகளில் உழைத்துக் கௌரவமாக வாழ விரும்புகின்றீர்களா?

—சர். பி. ஸி. ராய்.

நாம் நமது வீட்டை ஒழுங்காக வைத்துக்கொள்ள முயல்வோமாக! முதன் முதலில் ஸ்திரீகளுக்குச் சம உரிமை வழங்க வேண்டும்.

—ஸ்ரீமதி பிரிஜ் லால் நேரு.

டாம்பீகமான உடை யணிந்து மோட்டார் வாகனங்களிற் செல்லும் பிரபுக்களின் மாட மாளிகை கூட கோபுரங்கள் நிறைந்த கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற நகரங்களில் இந்தியா அமையவில்லை. ஆனால் உண்ண ஒரு வேளை உணவின்றி வாடும் லக்ஷக்கணக்கான ஏழை இந்தியத் தொழிலாளர்களின் களிமண் குடிசைகளில்தான் இந்தியா அமைந்திருக்கின்றது.

—பண்டித ஜவஹர் லால் நேரு.

இயற்கை இனிமைபற்றியே ஒரு நாடு வாழ்கிறது. செய்யுளைக் கொண்டே நான் விடுதலை யுணர்ச்சியைப் புகட்டுவேன். நீங்கள் இனிது வாழும் நாள் இனியே. எங்கள் வாழ்நாட்கள் பெரிதும் கடந்துவிட்டன. ஆனால் நாங்கள் எங்கள் வாழ்நாட்களில் பெற்ற அனுபவத்தைப்பற்றிக் கூறுகிறேன்! நீங்கள் எந்த எண்ணத்தைக் கருதிக்கொண்டு உழைத்து வருகின்றீர்களோ, அந்தக் கருத்துக்கள் எப்போது கைகூடுமென்று நாங்கள் பரம்பரையாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் நாடு விடுதலை பெற வேண்டுமானால், உங்களுக்கு அவ் விடுதலை கிடைக்கும். எப்படியென்றால், நீங்கள் ஒருமுகமாக ஒரே நோக்கத்தோடு, ஏகோபித்துத் தியாகம் செய்ய வேண்டும். உங்களுக்குள் ளிருக்கும் பிரிவினைகளை நீங்கள் நீக்கினாலல்லாது இந்தியா விடுதலை பெற முடியாது. இளைஞர்களே! நீங்கள் ஒன்றுபடுங்கள்! எச் செயல் புரியினும் ஒன்றுபட்டுச் செய்யுங்கள்! மடியும்படி நேர்ந்தால் ஒன்றாக மடியுங்கள்! வாழ்ந்தால் ஏகோபித்து வாழுங்கள். அடிமைப்பட்டுக் கிடக்கும் உங்கள் தாய் நாட்டின் பொருட்டே நீங்கள் இத்தனையும் செய்ய வேண்டும். உலகத்தி



லுள்ள யதேச்சை நாட்டிற்கு நலம் பயந்தவர்களாகவும், விடுதலையின் தூதர்களாகவும் நீங்கள் விளங்குவீர்கள்.

—சரோஜினி தேவி.

சென்றது—மாண்டது, மாற்றப்படத்தக்கதன்று. அது மறதியினுள் மூழ்கிப் போகட்டும்; ஆனால், அதன் தெய்வீக போதனையைக் கிரகித்து வைத்துக் கொள்ளட்டும். அந்தப் போதனைகள் உனக்கு இப்பொழுது பலமாக இருக்கட்டும். இனி எதிர் ஆண்டுகளில் அவற்றை அதிக மேன்மையும், அதிக சுத்தமும், அதிக பூர்த்தியுமான வாழ்க்கைக்கு ஆரம்பக் குறிப்புகளாக ஆக்கிக்கொள். பகை—கோபம், சண்டை, கெட்ட சித்தம் பற்றிய சகல நினைப்புகளும் சென்ற ஒரு வருஷங்களுடன் மாயட்டும். உன் இருதயமாகிய புஸ்தகத்தினின்றும் உட்பகையான நினைவுகள் அசுத்தமான மாச்சரியங்கள் எல்லாவற்றையும் சுறண்டி எடுத்துவிடு. இக் காலத்தில் உலக முழுவதும் அநேகர் உதடுகளினின்றும் பிரதி ஒலிக்கா நின்ற கூக்குரல், அஃதாவது "பூமியில் சமாதானமும், மனிதர்கள் விஷயத்தில் நல்ல சித்தமும்" என்பது அடிக்கடி சொல்லப்பட்ட வெறும் வார்த்தையை விட மேற்பட்டதாக உனக்கு இருக்கட்டும். அதன் உண்மையானது உன்னால் அப்பியாசம் செய்யப்படட்டும்; அது உன்னுடைய இருதயத்தில் குடியிருக்கட்டும்; அதனுடைய ஒற்றுமையையும் சமாதானத்தையும் கெட்ட சித்தமாகிய நினைப்புகளால் தடை செய்யாதிருக்கட்டும்.

—ஜேம்ஸ் ஆலென்.

பல இளைஞர் தமக்கு வாய்த்த தருணங்களைப் பாழாக்கி விடுகின்றார்கள். நமக்கு நாமே ஆசிரியர்களா யமைந்து நம்மைப் படிப்பித்துக்கொள்ளச் சந்தர்ப்பங்க ளிருக்கின்றன. முயன்று கற்க விரும்பாமல் நம்மிற் பலர் தம் இளமையைக் கழித்து விடுகின்றோம். பல ஆண்டுகள் வீணாகின்றன. நாம் அறிவீனத்தில் வளர்கிறோம். நடு வயதடைந்ததும் நமது அறிவீனத்தைக் கண்டு திடுக்கிடுகிறோம். இது மடத்தனமன்றோ? இருபத்தைந்து முதல் நாற்பது வயதுடைய பல ஆண்களும் பெண்களும் இளமையிற் கல்லாக் குறைவால் அறிவிலிகளாய்க் காலந் தள்ளுவதை நாம் காணலாம். எதுவும் அவர்களுக்குக் கைகூடுவதில்லை. அவர்கள் கையெடுக்கும் எக் காரியத்தின் முன்னும் கல்வியின்மை என்ற முட்டுக்கட்டை தோன்றித் தடைப்படுத்துகின்றது. நடு வயதடைந்த பின்னர் தாம் படிக்க முடியுமா வென்று பலர் எனக்கு எழுதிக் கேட்கின்றனர். ஆம், தடையில்லாமல் கூடும். ''நான் படிக்கப் போகிறேன். 'பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்ற முதுரையைக் கடைப்பிடித்தொழுக எண்ணுகிறேன். இன்றே தொடங்குவேன்'' என்ற தீர்மானத்துடன் ஒருவன்

அல்லது ஒருவன் கற்க முயன்றால் கல்வி முடியாத காரியமாகாது. "இளமையிற் கற்றேனில்லையே! இனிப் படிப்பது முடியுங் காரியமோ?" என்று நீ ஏங்கிக்கொண் டிருக்கையில் உன் போன்ற பலர் சென்ற நாட்களைப்பற்றிச் சிந்திக்காது தமது கல்வியைப் பற்றி யோசித்துத் தாமே கற்க வாரம்பித்துச் சீர்திருந்தி முன்னேறிச் செல்வதை நீ காணலாம். நீயும் உனக்கு வாய்த்த தருணத்தைப் பயன்படுத்த முயல்வாயாகில் உனக்கும் அக் காரியம் சித்திக்கும். நீ முதலில் செய்ய வேண்டியது என்னவெனில், "நான் எப்பாடு பட்டாயினும் கற்கப் போகிறேன். கல்வியின்மை என் முன்னேற்றத்தைத் தடை செய்யாமலிருக்கப் பார்ப்பேன். நான் ஒரு அறிவிலி என்று பிறர் சொல்ல இடங் கொடேன். இளமையில் நான் இழந்து போன நல வுரிமைகளை இப்போழ்தடைய விழைகிறேன்" என்ற உறுதியான தீர்மானத்தைச் செய்துகொள். பிறகு அத் தீர்மானத்தை நிறைவேற்ற உடனே வழி கண்டுபிடி. சொல்லிக் கொண்டிராதே; செய்ய முற்படு.

—டாக்டர் O. S. மாடேன்.

உலகில் அன்பும் தியாகமும் ஓங்கி வளர்ந்து, மக்கள் அனைவரும் தம்மைப்போலப் பிறரையும் நேசிக்கத் தொடங்குவரேயானால், இவ்வுலகமே பூலோக சுவர்க்கமாக விளங்கும் என்பதில் ஐயம் யாது? அத்தகைய பூலோக சுவர்க்கமாக இவ் வுலகினை மாற்றச் செய்யும் அன்பும் தியாகமுமே ஒவ்வொருவரிடத்தும் விளங்குதல் வேண்டும். நாம் தெய்வம் இருப்பதை நம்பினும், நம்பாவிடினும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் தெய்வம் கலந்துறைகின்றதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. தெய்வமே நமது சக்தி. எல்லா நன்மைகளும் உருக்கொண்ட அச் சக்தி, தன்னை நம்பியவரையும் நம்பாதாரையும் காப்பாற்றியே வருகிறது. சுருங்கக் கூறின், அன்பே தெய்வம். உண்மையான அன்பும் உழைப்பும் எங்குக் குடிகொண்டு இருக்கின்றனவோ, அங்குத் தெய்வம் குடிகொண்டிருக்கின்றது. எனது கடவுள் அன்பேயாகும். நாம் எல்லோரிடத்தும் அன்பாயிருப்பதே கடவுளைக் காண்பதாகும். என் உள்ளத்திற் குடிகொண்டுள்ள தெய்வம், என்னை ஒவ்வொருவரையும் நேசிக்கச் செய்கிறது. என் தெய்வம் எனது தினசரி வேலையிலும் கடமையிலும் இருக்கின்றது. ஏழைக் குழந்தைகளுக்கு என் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்து பாடுபடுவதிலேயே என் தெய்வத்தை நான் காண்கின்றேன். மக்களுக்குச் செய்யும் தொண்டே கடவுளுக்குச் செய்யும் தொண்டாகும் என்பதே எனது முடிவான கொள்கை.

—டக்கன் அம்மையார்.

---

# ஆசிரியக் குறிப்புகள்.

## சந்தா

இத்துடன் "பாரதி"க்கு 4-வது ஆண்டு பூரணமாகிறதென்று சந்தோஷத்துடன் அறிவிக்கிறோம். ஒவ்வொரு சந்தாதாரும் 5-ம் வருஷத்திற்காகத் தங்கள் சந்தாவை உடனே அனுப்ப அன்புடன் வேண்டுகிறோம். முன்னடியே சந்தாவை அனுப்புவதால் வி. பி. செலவு இல்லை. பத்திரிகை வேண்டாதவர்கள் உடனே தேவையில்லையென்பதைத் தெரிவிக்க வேண்டுகிறோம். இல்லையேல் "பாரதி"யை வி. பி.யில் செலவுடன் அனுப்ப நேரிடும். ஒருவர் வி. பி.யை மறுப்பதால் எங்களுக்கு 4 அணு நஷ்டமேற்படுகிறது. இவ்விதத்தில் எங்களுக்கு அதிக நஷ்டம் உண்டாக்காதிருக்க வேண்டுகிறோம். ஒவ்வொரு சந்தா அன்பரும் குறைந்தது புதிதாக ஒரு சந்தாதாரரையேனும் இவ்வாண்டில் சேர்த்துக் கொடுத்து "பாரதி"யை வளர்க்குமாறு மிகமிகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## "பாரதி"யின் 11-வது மணி ஏன் தாமதம்?

ஒரு பத்திரிகை ஒரு முறை ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, அதற்கு போஸ்ட்மாஸ்டர் ஜெனரலிடமிருந்து நிர். வந்துவிட்டால், அவ்வளவுதான். ஆண்டுதோறும் அதை ரிஜிஸ்டர் செய்ய வேண்டியதில்லை. இதுவே அனுபவம். வருடந்தோறும் பத்திரிகைகளை ரிஜிஸ்டர் செய்யவேண்டுமெனப் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் சென்ற ஆண்டில் விதி யேற்படுத்தியிருக்கிறார். இதனால்தான் "பாரதி"யைத் தபாலில் அனுப்ப முடியவில்லை. P.M.G.-க்கு எழுதினோம்; தந்தியடித்தோம். கலெக்டருடைய அனுமதியின் நகலை வாங்கியனுப்ப வேண்டுமென சென்னை P.M.G.-யினிடமிருந்து கடிதம் வந்தது. கலெக்டரிடமிருந்து ஷை அனுமதியின் நகலை வாங்கி யனுப்பியிருக்கிறோம். இதனுடைய தாத்பரிய மென்னவென்றால் ஒவ்வொரு வருடமும் புதிய பத்திரிகைபோன்று போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஆபீஸில் ரிஜிஸ்டர் செய்ய வேண்டியிருக்கிறது. ஜனங்களுக்கு வசதிகள் உண்டாக்கவேண்டிய இந்த இலாகா, ஜன செளகர்யங்களைக் குறைத்துக்கொண்டு வருகிறது. கார்டு, கவர், புக் போஸ்ட், பத்திரிகை, ரிஜிஸ்டர், பார்சல், மணியார்டர், தந்தி முதலிய கட்டணங்களெல்லாம் அதிகமாக உயர்ந்திருக்கிறது. ஏழை இந்திய மக்களுக்குத்

தபால் விகிதம் பாரமாயிருக்கிறது. இந்த இலாகாவிலுங்கூட எத்தனையோ வழிகளில் சிக்கனம் செய்து ஏழைகளுக்கு உதவி செய்யலாம். இதை யார் கவனிக்கப் போகிறார்கள்? இந்திய சட்ட சபையில் இதைப்பற்றிய விவாதம் பயன் இல்லாது ஒழிந்தது.

## ஷண்முகம் செட்டியார்

இந்திய சட்டசபைத் தலைவர் சர். இப்ராஹிம் ரஹிமத்துல்லா வியாதியால் தனது வேலையை விட்டுவிடவே அதற்கு கோவை ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியாரவர்கள் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது தமிழ் மக்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கலாம். ஒரு தமிழரசர் பனிமலையின் முடியில் பண்டைக் காலத்தில் வெற்றிக்கொடியை நாட்டினார். நம்முடைய செட்டியாரவர்கள் தமிழர்தம் பெருமை, வீரம் முதலியவைகளை இந்திய சட்டசபையில் காட்டி, நாட்டிற்கு நலஞ் செய்வாராக!

## தேசீயக் கைதிகள்

மகாத்மா காந்தி உள்ளிட்ட தேசீயக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுகிறோம். இவர்களை விடுதலை செய்யச் சர்க்காருக்குச் சென்ற வருடமே பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. கவனிக்கவில்லை. வெள்ளை அறிக்கையை வெளியிட்ட இத் தருணத்தில் சர்க்கார் கௌரவமாகத் தேசீயக் கைதிகளை விடுவித்திருக்கவேண்டும். சிறைச்சாலைகளிலிருந்து தேசீயக் கைதிகள், அவர்களின் தண்டனை காலம் முடிவதற்குள் சிற்சிலர் திடீரென்று விடுதலை யடைகிறார்கள். இப்படி விடுதலை செய்வதின் இரகசியமென்ன? எல்லாத் தேசீயக் கைதிகளையும் ஒரே சமயத்தில் விட்டுவிட்டால், என்ன கெட்டுப் போய்விடும்? தர்ம சேவகர்களைப் பிடித்து வைத்திருப்பதில் பயனென்ன? வெள்ளை அறிக்கை வெளிவந்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் தேசீயக் கைதிகளை உடனே விடுதலைசெய்து, இந்தியாவின் நல்லபிப்பிராயத்தை இந்திய அரசாங்கம் அடையட்டும்.

## வெல்லச் சுத்தி

இந்தியா விவசாய நாடு; வளமுற்ற தேசம். கரும்பு நன்றாய் வளரும். இருப்பினும் ஜாவா, பீஜி முதலிய அயல்நாடுகளிலிருந்து சுமார் 17 கோடி ரூபாய் மதிப்புள்ள சர்க்கரை நம் நாட்டிற்கு இறக்குமதியாகிறது. சர்க்கரை செய்யும் தொழிலுக்கு ஆதரவு காட்டினால், அயல் தேசங்களிலிருந்த சர்க்கரை இறக்குமதி செய்யவேண்டிய அவஸியமேயில்லை; சுமார் 17 கோடி ரூபாயும் நம் நாட்டிலேயே தங்கும். விவசாயக் கைத்தொழில்களை இந்திய சர்க்கார் அதிகம் ஆதரித்து அவைகளைப் பெரிதும் வளர்க்கவேண்டும். விவசாய இலாகா உமிக்கரியின் மூலம் வெல்லத்தைச் சுத்திசெய்யும் வழியொன்றைக் கண்டுபிடித்திருக்கிறதென்று அறிகிறோம். ஆண்டுதோறும் நமது மாகாணத்தில் எவ்வளவோ உமிக்கரி வெட்டியாய்ப் போகின்றது. கோயமுத்தூரிலுள்ள விவசாய ரசாயன சாஸ்திரியின் முறைப்படி உபயோகித்தால் வெல்லத்தை நன்றாய்ச் சுத்திசெய்யக்கூடும். இப்புதிய முறையை அனுசரிப்பதற்கு 1 கோடி ரூபாய்வரை செலவாகுமென்று மதிப்பிடுகிறார். புதிய முறையில் தயாரிக்கப்பட்ட வெல்லம் நல்ல நிறமாயிருப்பதுடன் இரட்டிப்பான விலைக்கும் விற்கலாம். இந்த வெல்லம் சர்க்கரையைப் பார்க்கிலும் அதிக சத்துக் கொண்டது. கோயமுத்தூர் விவசாயக் கல்விச்சாலையில் கரும்பு விவசாயத்தில் நூதன முறையைக் கண்டறிந்திருக்கிறார்கள். இந்த முறை விரைவில் வெளிவரப்போகிறது.



## ஓர் சமூகப் புரட்சி

கேரள நாட்டில் நம்பூதிரிகளே உயர்ஜாதியெனக் கருதப்படுகிறார்கள். அவர்களது சில பழக்க வழக்கங்கள் மற்றவர்களுக் கொவ்வாது. மற்றவைகளிருப்பினும் நம்பூதிரி மாதர்களைப்பற்றி மட்டும் இப்பொழுது பேசுகிறோம். நம்பூதிரி மாதர்கள் கோஷா முறையை அனுசரிக்கிறார்கள். வெளியே சென்றால் தாழங்குடை யொன்றினால் முகத்தை மறைத்துக்கொண்டு, நாயர் பெண் பின்வர வெளியே போவது வழக்கம். ஐயோ, மண வயது வந்த பெண்கள் விவாகத்திற்காகப் பல வருடங்கள் காத்திருக்கவேண்டும்! ஓர் குடும்பத்தில் மூத்த ஆண் மகனே மணம் செய்ய உரிமை உண்டு. இதனால் பெண், மணமகனுக்காக நெடுங்காலம் எதிர்பார்த்திருக்க வேண்டி யிருக்கிறது. கிளிகளைக் கூட்டி லடைத்து வைத்திருப்பதுபோன்று, இம் மாதர்களை வீடுகளில் நம்பூதிரிகள் அடைத்து வைத்திருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே நம்பூதிரி மாதொருத்தி தன் கணவனுடன் ஒரு படகில் சென்றாளாம். இதற்காகக் கூக்குரல். இதனைப்பற்றி முன்னர் "பாரதி"யில் விரிவாக எழுதியிருக்கிறோம். இயற்கை தேவியின் சக்தியால் தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் மேலே வரும்பொழுது, அடைபட்டவர்களெல்லாம் வெளியே வர வேண்டியது நியதிதானே. இப் பெண்மணிகள் துணிவாக வெளியே இப்பொழுது வருகிறார்கள். இந்தியாவில் மாதர்களுக்குச் சுதந்திரமும் சொத்துரிமையும் முதன்மையாக வளங்கியிருக்கும் கேரள நாட்டில் நம்பூதிரி மாதர்கள் அடிமையில் மூழ்கிக் கிடப்பது ஆச்சரியமே. பிரகிருதி தேவி எழுந்துவிட்டாள்! இம் மாதர்களுக்குப் புத்துயிர் பிறந்துவிட்டது! இனி இவ் விடுதலை உணர்ச்சிகொண்ட பெண்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து, கேரளமெங்கும் ஊர் ஊராய் விஜயம்

செய்து, மற்ற தங்கள் அடைபட்ட சகோதரிகளையும் சேர்த்துக் கொண்டு பிரச்சாரம் செய்யப்போகிறார்கள். இச் சகோதரிகளின் விடுதலைக்கு நம்பூதிரி யுவர்களும் அதிக ஆதரவாயிருப்பார்களென்று நம்புகிறோம். நம்பூதிரிப் பெண்களின் சுதந்திரச் சூரியன் கேரள நாட்டில் உதிக்கப்போவதை இந்திய மாதா ஆவலுடன் எதிர்பார்த்து ஆசீர்வதிக்கப் போகிறாள். நம்பூதிரி மாதர்களது நன் முயற்சி வெற்றிமேல் வெற்றி பெறுக.

## ஹரிஜனங்கள்

ஹரிஜன சேவையைப்பற்றி தேசமெங்கும் பெரும்பேச்சாகவேயிருக்கிறது. பத்திரிகைகளிலும் ஹரிஜன சேவா விஷயங்கள் தினந்தோறும் காணப்படுகின்றன. தேச பக்தர்களுக்கும் தேசியத் தொண்டர்களுக்கும் இதைக்காட்டிலும் வேறு முக்கிய வேலை கிடையவே கிடையாது. வைதீகர்களுக்குமட்டும் இதைப்பற்றிக் கண்டன வேலை. கிராம ஜனங்கள் விழித்தெழுந்து இவ் வேலையில் ஈடுபட்டுழைக்க வேண்டுகிறோம். அல்லது இவ் வேலையில் உழைக்கிறவர்களுக்கு அனுதாபத்துடன் உதவியாவது செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம். நம் தேசத்தில் நமது சகோதரர்களுக்கு நாம் சுதந்திரமும் சமத்துவமும் கொடுக்காதிருக்கும்பொழுது, அயல்நாட்டாரிடம் நாம் சுதந்திரம் கேட்பது நியாயமா? நமது ஹரிஜன சகோதரர்கள் இயற்கையாகவே நல்லவர்கள்; அடக்கமுடையவர்கள். கல்வியெனும் சூரியன் அவர்களிடம் உதிக்குமானால் அவர்களின் அறியாமையால் உண்டாய தீமைகள் அனைத்தும் அகன்றுவிடும். அறியாமையினால் அநேகம் தவறான வழிகளில் செல்லுகின்றார்கள். அவர்களைத் திருத்துவது நமது கடமையாகும். இதனாலன்றோ காந்தி அடிகள் இவ் வேலையை நாம் அவசியம் செய்யுமாறு நமக்கு உபதேசிக்கிறார். தேச மக்கள் அனைவரும் ஹரிஜனங்களுக்காக இரங்கித் தீண்டாமையை அறவே ஒழித்து, அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபடத் தேசத்தின் பெயரால் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## கேசவரின் மறைவு

திவான் பஹதூர் கேசவ பிள்ளையவர்கள் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தபோதிலும் தனது முயற்சியால் முன்னுக்கு வந்தவர். ஆந்திர நாட்டில் குத்தி என்ற ஊரில் வக்கீலாக யிருந்தபோதிலும், தமிழபிமானமுடையவர். சட்ட சபையில் உபதலைவராகவும், ஜில்லா போர்டுத் தலைவராகவும் உழைத்து நாட்டு மக்களுக்கு நலம் செய்திருக்கிறார். சிறையில் நடக்கும் அக்கிரமங்களைச் சர்க்காருக்கு எடுத்துக் கூறி, சிறைச்சாலைகளில் எவ்வளவோ திருத்தங்கள் செய்யும்படி செய்திருக்கிறார். தேசபக்தர்களான V. O. சிதம்



பரம் பிள்ளையவர்கள், சுப்ரமண்ய சிவம், சுப்ரமண்ய பாரதியார் முதலியவர்களுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார். ஏழைத் தொழிலாளர்களுக்கும் எவ்வளவோ நன்மைகள் செய்து, தொழிலாளர் இயக்கத்தைச் சென்னையில் அடிகோலியவர். பிரிட்டிஷ் கயானாவிற்குத் தூதாகச் சென்று, அங்கு வசிக்கும் நம் நாட்டு மக்கள் படும் பாட்டைச் சர்க்காருக்கு எடுத்துக் கூறி உதவியவர். எளிய வாழ்க்கையும் உயர்தர நோக்கமும் கொண்டவர். சர்க்கார் அவருக்கு C.I.E. என்ற பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தது. அவர் சிறந்த-நேர்மையான தேச பக்தராயில்லாது, மிதவாதியாயிருந்தால் அவர் வைஸ்ராய் அல்லது கவர்னர் நிர்வாக சபையில் அங்கத்தினராகவோ அல்லது இதைக்காட்டிலும் பெரிய உத்தியோகத்திலோ அமர்ந்திருப்பார். ஏழைகளை நேசிக்கும் இளகிய மனமுடையவர். உயிர் உள்ளவரையில் நாட்டிற்காக உழைத்துவிட்டு, ஆண்டவன் அடியினை அடைந்தார். அவரது பிரிவால் தென்னாடு ஒரு பெரும் இரத்தினத்தை இழந்துவிட்டது. அவருடைய ஆத்மா சாந்தியடைவதாக!

## தாலுகா போர்டுகள் கவனிக்கவேண்டும்

உலகமெங்கும் புஸ்தகாலய இயக்கம் வெகு வேகமாய்ப் பரவிக்கொண்டு வரும்பொழுது, நமது தேசத்தில், அதுவும் தமிழ்நாட்டில் இந்த இயக்கம் நன்கு கவனிக்கப்படாமலிருக்கிறது வருந்தத்தக்கதே. பரோடா முதலிய சுதேச சமஸ்தானங்களிலும், ஆந்திர தேசம் முதலிய மாகாணங்களிலும் இது நன்கு அபிவிருத்தியாகிக்கொண்டிருக்கிறது. சென்னையில் புஸ்தகாலய சங்கம் (Madras Library Association) ஸ்தாபிக்கப்பெற்று, அங்கு வேலை சிறிது நடப்பினும் கிராமங்களை யார் கவனிக்கப்போகிறார்கள்? படித்தவர்கள் உத்தியோகங்களுக்குப் போய்விடுகிறார்கள். பணக்காரர்கள் உல்லாசமாய் வாழ்கிறார்கள். தேசத் தொண்டர்களுக்குத் தேசிய வேலை சரியாயிருக்கிறது. சிறிது கல்வி கற்ற வயதுவந்தவர்களுக்கு இது எவ்வளவோ பேருபகாரமாயிருக்கும்! ஒவ்வொரு ஊர்களிலும் புஸ்தகசாலைகளை சரஸ்வதியின் கோவில்களாகக் கருதிப் போற்றிவரல்வேண்டும். ஒவ்வொரு தாலுகா போர்டாரும் தங்கள் எல்கையிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் புஸ்தகசாலை ஏற்படுத்தத் தீவிரமாக முயலுமாறு வேண்டுகிறோம். நம் தேசத்தின் கல்வியின்மையைப் போக்குவதற்கு இதுவும் சிறந்த உதவியாயிருக்கும்.

## அரசியல் கைதிகளின் கஷ்டங்கள்

இவர்களைப்பற்றியும் ஏ., பி., சி. வகுப்புப் பாகுபாடுகளைப்பற்றியும் தனியாக ஒரு வியாசம் எழுத எண்ணியுள்ளோம். வலூர்

சிறையில் வாடும் ஏ., பி. வகுப்புக் கைதிகளைப்பற்றியே அறிவிக்கிறோம். 1930-ம் வருஷத்திலும், 1932-ம் வருஷமாக இருமுறை வேலூர் சிறையில் வதியும் பாக்கியம் நமக்குக் கிடைத்து, அனுபவித்து வந்துள்ளதை நேயர்கள் அறியலாம். அப்பொழுதெல்லாம் தங்கள் சொந்தச் செலவில் சோப்பு, சீயக்காய், புஸ்தகம் முதலியவை வாங்கிக் கொள்ளலாம். இவைகளையும், பழ வர்க்கங்களையும், ஆகாரத்திற்கு வேண்டிய சாமான்களையும் ஏ. வகுப்பார் வாங்க அனுமதியுண்டு. ஏ. வகுப்பார் சொந்த உடைகளையே தரிக்கலாம்; புதிதாக விலைக்கு வாங்கிக்கொள்ளவும் செய்யலாம். ஏ., பி. வகுப்புக் கைதிகளுக்கு இன்னும் எத்தனையோ வசதிகளிருந்தன. இப்பொழுது நிலைமை மிகவும் மோசமாயிருக்கிறது. தலைக்கு எண்ணெய்யும், உடம்புக்குச் சோப்புங்கூடத் தங்கள் சொந்தச் செலவில் வாங்கிக்கொள்ள அனுமதி யில்லையென்றால் வேறொரு குறைகளையும்பற்றிச் சொல்லத் தேவையில்லை. வெறுங் காவல் ஏ. வகுப்பார்கள்கூட இப்பொழுது சிறை உடையைத்தான் தரிக்கவேண்டி யிருக்கிறது. தினந்தோறும் தலைக்கு எண்ணெய் தடவிக்கொள்ளும் பெண்களின் நிலையைப்பற்றி என்ன சொல்லுவது? வேலூர் உஷ்ண பூமி; பனி காலத்தில் அதிகப் பனியாயும் உஷ்ண காலத்தில் அதிக உஷ்ணமாயும் மாறும் தன்மையான நகரம். இவ்வூரில் இயற்கையாகவே இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்துவரும் ராஜீயக் கைதிகளுக்கு அதிக வசதிகள் செய்ய வேண்டியதிருக்க, இப்படித் திடீரென்று மாற்றஞ் செய்ததிற்குக் காரணமென்ன? இதைச் சட்ட மெம்பர் கவனிக்க வேண்டுகிறோம். சட்டசபை அங்கத்தினர்கள் சபையில் இதைப்பற்றி அதிகமாகக் கவனிக்கவும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## பி.ஏ. பட்டம் பெற்ற பிராமணத் தோட்டி

நமது நாட்டில் சர்க்கார் உத்தியோகங்களுக்குப் பிரத்தியேகமான மரியாதை. ஆங்கிலப் படிப்பில் அபார மோகம். தொழிலுக்கும் தேக உழைப்புக்கும் கௌரவக் குறைவு. தேசீய இயக்கத்தின் பிரச்சாரத்தால்தான் இந்தக் கிறுக்கு சற்று குறைந்து கொண்டுவருகிறது. உழைப்பு மேன்மையுற்றது. தெய்வீகத் 'ன்மை பொருந்தியது என்பதை நம் நாட்டில் கவனிப்பது கிடை 'து. இது விஷயத்தில் அமெரிக்கரை நாம் போற்றவேண்டும். ்கிலாந்தில் முதன்மை பெற்ற ஆக்ஸ்போர்டில் பி.ஏ. பட்டம் ்ற கோஸ்வாமி என்ற 28 வயதுள்ள ஒரு பிராமண வாலிபர் நம் தச மக்களுக்குத் தொழிலின் உயர்வைக் காட்டக் கருதி, பம்பாய் 3 வருடம் பூட்ஸ் துடைக்கும் தொழில் செய்துவிட்டு, இப்பொழுது டில்லி முனிசிபாலிட்டியில் மாதம் 13 ரூபாய் சம்பளத்தில் தோட்டி வேலை செய்துகொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. இவ

# ஆராய்ச்சி மேடை.

## "தன வணிகன்"

பாலும் தேனும் ஓடுகிற—வளப்பமும் செல்வமும் மிக்க நாடு என்று புகழ்ந்து கூறப்பெறும் பர்மா நாட்டில் இரங்கூன் நகரத்திலிருந்து நாட்டுக்கோட்டை சங்கத்தாருக்காக ஸ்ரீமான் A. RM. A. கருப்பன் செட்டியாரவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "தன வணிகன்" என்ற வாரப் பத்திரிகையின் 8 மணிகள் வரப் பெற்றோம். இயற்கைச் செல்வமிகுந்த பர்மா நாட்டைத் தங்களது பணத்தால் தங்கமயமாகப் பிரகாசிக்கச் செய்யும் நகரத்தார் சங்கத்தினது உரத்தின் மீது வெளிவரும் இப் பத்திரிகைக்கு என்ன குறைகள் இருக்கப் போகின்றன? இதன் ஆசிரியர் திரு. கருப்பன் செட்டியாரவர்கள் முன்னர் ராமனாதபுரம் ஜில்லா கோட்டையூரிலிருந்து "தன வணிகன்" என்ற பெயருடன் ஒரு உயரிய மாதப் பத்திரிகையைச் சிறப்புற நன்கு நடத்தி பத்திரிகானுபவம் மிக்கவர். சிறப்பாக நகரத்தார், பொதுவாக தமிழர்—இந்தியர் நலங்களைநாடி சிறந்த முறையில் புதிய வழியில் பாங்கு விஷயங்கள், வியாபாரம், பொருளாதாரம், அரசிறை, சங்கம், மார்கெட்டு, அயல்நாட்டுச் செய்திகள் முதலியவைகளுடன் ஆராய்ச்சி மிக்க அரிய கட்டுரைகளையும் பல்வேறு படங்களையுந் தாங்கி, இது வெளிவருகிறது. பணத்துக்குரிய (Financial) விஷயமாகக் கூறும் பத்திரிகைத் தமிழில் இஃது ஒன்றே. தாய்ப் பாஷைகளில் நம் நாட்டின் அபிவிருத்திக்கு இம் மாதிரிப் பத்திரிகைகள் பற்பல தேவை. தாயகத்து நகரத்தார் அனைவருக்கும் பர்மாவில் தங்கள் லேவாதேவித் தொழிலபிவிருத்தியைப் பற்றியும் தொழில் நிலையைப்பற்றியும் கூறி, தங்கள் உரிமைகளைக் காக்கப் பாடுபடும் பத்திரிகை பர்மாவில் இது ஒன்றே. பர்மா, மலேயா, கொச்சின்—சைனா முதலிய தேசங்களிலுள்ள நகரத்தார்களும் தாயகத்திலுள்ள நகரத்தார்களும் இதனை அவசியம் ஆதரித்து வளர்க்க வேண்டுகிறோம். இப் பத்திரிகைக்கும் பத்திரிகாசிரியருக்கும் பல்லாண்டு கூறுகிறோம். சொந்த நாட்டில்

---

ரது தியாகம் பெரிது! இவருடைய மாதிரி போற்றற்குரியது. மகாத்மாவின் சபர்மதி ஆச்சிரமத்தில் பயிற்சி பெறுவோர்கள் தோட்டி வேலை செய்யவேண்டியது அவசியம். அடிமைத் தொழிலுக்கு என்று நம் நாட்டில் மதிப்பில்லையோ அன்றுதான் இந்தியாவில் சுத்த சுதந்திரம் பிரகாசிக்கும். பாடசாலைகளில் உழைப்பின் உயர்வைப்பற்றிப் போதிக்கப்படுவதில்லை. உழைப்பில் உறுதியும், கைத்தொழிலில் ஆசையும், சுதந்திரத்தில் பற்றும் நாம் கொள்ள வேண்டும். ராக்பெல்லர், கார்னீஜி, மாக்டொனல்டு, லாயிட் ஜார்ஜ் முதலியவர்களின் வரலாறுகளைக் கவனித்தால் தேகப் பிரயாசையின் பெருமை விளங்கும்.

சொந்த பாஷையில் பத்திரிகைகளின் நிலை வேருக இருப்பினும் குடியேறியுள்ள பர்மாவில் நம்மவர் பத்திரிகைகளின் தன்மையையும் நன்மையையும் ஒரு சிறிது அறிந்து, இப் பத்திரிகைக்கு அதிக ஆதரவு அன்புடன் அளிப்பதை அறிந்து மகிழ்கிறோம். பால்போன்ற காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் அச்சிடப்பெற்றிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 5–0–0, 6 மாதத்திற்கு ரூ. 3–0–0, வெளி நாட்டிற்கு வருஷம் 1-க்கு ரூ. 7–0–0.

மானேஜர். "தன வணிகன்,"
182, பார் வீதி, இரங்கூன்.

சுவாமி.

**"நவநீதம்"**

இஃது ஒரு வாரப் பத்திரிகை. சிங்கப்பூரிலிருந்து திரு. M. M. புகாரி அவர்களை ஆசிரியராகக் கொண்டு திங்கள்தோறும் வெளிவருவது. வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்குப் பல்வேறு சகாயங்களை அடையப் பத்திரிகைகளைப்போல் உதவியாயிருப்பது-உரிமைகளைக் காப்பது வேறொன்றுமில்லை. இன்னும் நம் தமிழ்ச் சகோதரர்கள் இதனைச் சரிவர உணராதிருப்பது வருந்தத் தக்கதே. எத்தனையோ நல்ல நல்ல பத்திரிகைகள் தோன்றுகின்றன. அப்பால் அவைகள் ஆதரிப்பாரற்று அப்படியே இருந்தவிடந் தெரியாமல் மறைந்துவிடுகின்றன. காரணம்? நம்மவர்க்குப் பத்திரிகாபிமானமில்லாமையே. வயிறு வளர்க்கச் சென்றவிடத்தில் சம்பாத்தியத்தைப் பார்த்து, நாலு காசு மீதம் பிடிப்பதா? பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் படித்து வறுமையில் வீழ்வதா? என எண்ணி மக்கள் ஏமாற்றமடைகின்றனர். படிப்புக்கும் சம்பாத்தியத்திற்கும் வித்தியாசம் காணும் இவர்கள், எத்தனையோ சிறந்த உயர்ந்த பத்திரிகைகள் அழிந்தொழியக் காரணமாயிருந்தார்களென்று சொல்வது தவருகாது. மலேயா நாட்டில் இப்பொழுது ஒரு சில தமிழ்ப் பத்திரிகைகளே வெளி வருகின்றன. அவைகளில் இந் 'நவநீதம்' எனும் வாரப் பத்திரிகையும் ஒன்றெனை அறிவிக்க மகிழ்வெய்துகின்றோம். புஸ்தக ஆசிரியரான திரு. புகாரி அவர்களைப் பத்திரிகாசிரியராகக் கொண்ட இந் "நவநீதம்" மலேயா நாட்டில் வசிக்கும் நம் நாட்டு மக்களுக்கு நல்ல தொண்டு செய்யுமென நம்புகிறோம். இதற்கு திரு. புகாரி அவர்களது ஊக்கமும் உற்சாகமுமே இப் பத்திரிகையின் உயர்வுக்கு உத்திரவாதம். இதன் வருட சந்தா உள் நாடு ரூ. 3–0–0, அயல் நாடு ரூ. 5–0–0.

மானேஜர், "நவநீதம்"
சிலிஜீ ரோட், சிங்கப்பூர்.

சுவாமி.

---

பொறுப்பாசிரியர் நா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

197888